
உன்னை விடமாட்டேன்
கண்மணியே!
ரமணிசந்திரன்

# உன்னை விடமாட்டேன் கண்மணியே

ரமணிசந்திரன்

அத்தியாயம் -1

அன்று ஜெயதேவனின் பிறந்த நாள். கோவிலுக்குப் போய்த் திருநீறு கொணர்ந்து மகனின் நெற்றியில் பூசி, “எல்லாம் வல்ல அந்தக் கடவுள் இப்படியே உனக்கு மேன்மேலும் வளர்ச்சியைத் தரட்டும்.” என்று மனமார ஆசி கூறினாள், அன்னை தேவகி.

மறுக்காமல் திருநீறை நெற்றியில் வாங்கிக்கொண்ட போதும், “ஹூம்! “கருமமே கண்ணாயினார்” பற்றி ஏதோ பாடலில் வருமே, அது போல “மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல்” இரவு பகல் நினையாமல் கஷ்டப்பட்டு உடல் மூளை இரண்டையும் கசக்கிப் பிழிந்து வேலை செய்து தொழிலை இந்த அளவு உயர்த்தி இருக்கிறேன். ஆடாமல் அசையாமல் இருந்துகொண்டு நல்ல பெயரைக் கடவுள் தட்டிப் போகிறாரே!” என்று போலியாகக் குறைப்பட்டான் மைந்தன்.

“அப்படிச் சொல்லதேப்பா! மதி கால் விதி முக்கால் என்பார்கள். மேலே இருக்கிறவன் அருள் இல்லாமல் ஒன்றும் பலிக்காது.”

“அப்படியா? கையைக் கட்டிக்கொண்டு ஒரு மாதம் உட்கார்ந்து விடுகிறேன். உங்கள் கடவுள் நம் தொழிலை எப்படி நடத்துகிறார், பார்ப்போமா?” என்று கண்ணில் குறும்போடு மகன் சவால் விடவும் அவளுக்குச் சிரிப்போடு வேதனையும் உண்டாயிற்று.

மகனின் தன்னம்பிக்கை, கர்வம் என்கிற அளவுக்குப் போகிறதோ என்று கொஞ்ச காலமாகவே அவளுக்கு ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

எனவே, “டேய் கண்ணா, அப்படிப் பேசாதே. எவ்வளவோ உழைத்தும் பலன் தட்டிப் போவது இல்லையா? ஏன்? உன் அப்பா உழைக்கவில்லையா? அவரது உழைப்பின் பலனே முழுதும் நம்மிடமா இருக்கிறது?” மெல்ல மகனுக்கு நினைவூட்டினாள்.

“அது, அப்பா தன்னுடைய அண்ணன் தம்பி தங்கையை நம்பிய பாவம்!”

மறுக்க முடியாத உண்மை. சிவசங்கர் தன் முயற்சியால் உயர்ந்தவர். கொஞ்ச நஞ்சமல்ல , பெரிய அளவிலேயே உயர்ந்தவர். செய்த தவறு ஒன்றே ஒன்றுதான் உடன் பிறந்தோரை நம்பியது. வரி குறையும் என்று, டம்மி பங்குதாரர்களாக அவர்கள் பெயரைப் போட்டு வைத்திருந்தார். அவர்கள் அறியவேதான். அதற்காக, உடன் பிறந்தவர்களுக்குத் தனியாகப் பணமும் கொடுத்து வந்தார்.

அவர்களும் அப்போது திருப்தியாகவே இருந்தார்கள். முதலீடோ, உழைப்போ இல்லாமல் பணம் வருமென்றால் யாருக்குக் கசக்கும்?

ஆனால் திடுமென நேர்ந்த சிவசங்கரனின் மறைவு எல்லாவற்றையும் தலைகீழாகத் தூக்கிப் போட்டுவிட்டது. முக்கியமாக, டம்மிப் பங்குதாரர்களுக்கு உறவு டம்மியாகிப் போய்விட்டது. தொழில் பங்குகளை நிஜமாகவே தங்கள் சொந்தம் என்றார்கள்.

“அண்ணா எங்களுக்கே தருவதற்காகத்தான் எங்கள் பேரில் எழுதி வைத்தார். நாங்களும் கணக்கோ கையெழுத்தோ இல்லாமல் அண்ணனுக்கு நிறைய நிறையக் கொடுத்திருக்கிறோமாக்கும்” என்று அவரவர் பெயரில் இருந்ததை அப்படியே விழுங்கிய உறவுகளை ஒன்றும் சொல்லவோ தடுக்கவோ தாய் மகன் இருவராலும் முடியவில்லை.

கணவர் உயிருடன் இருந்திருந்தால் இது நடந்திராது. அவரை அண்டி வாழ்ந்த ரத்த உறவுகளுக்கு இப்படிப் பேசத் துணிவும் வந்திராது.

ஆனால், உயிர் கடவுளுடையது. அந்த வகையில் ஏற்பட்ட விளைவுகளைத் தடுக்கக் கலங்கிக் கிடந்த தாய்க்கும் அப்போது கல்லூரி மாணவனான இருந்த மகனுக்கும் இயலாது போயிற்று.

“.எப்படியோ, நம்மை விட்டுப் போய்விட்டதுதானே?” என்றவளுக்குக் கணவரின் எதிர்பாராத மரணம் பற்றிப் பேச அப்போது மனமில்லை.

குருவி தலையில் பனங்காயை வைத்தது போலக் கல்லூரியில் அடியெடுத்து வைத்திருந்த மகன் என்னமாக உழைத்தான்!

தொழில் பற்றி அவ்வப்போது கணவர் பேச்சிலிருந்து அறிந்ததை அவளும் சொன்னாள்தான். ஆனால் மிச்சம் மீதி இருந்ததை எடுத்துப் போட்டுக் கடனை உடனை வாங்கித் தொழிலைத் தூக்கி நிறுத்துமுன் அவன் பட்ட பாடு தேவகி நன்கு அறிந்ததே!

ஓய்ந்து கிடக்கும் மகனைப் பார்த்து எத்தனை நாள் தூக்கமின்றித் தவித்திருக்கிறாள்!

ஆனால், இது பற்றிப் பேசினால் பேச்சு நீளும். அத்தோடு அந்த அன்னை பேச எண்ணிய விஷயத்தை ஒரு வலியில் தொடங்கலாகாது.

“எப்படியோப்பா, நீயும் உழைத்தாய். உன் திறமைக்குப் பரிசாகக் கடவுள் அருளும் இருந்ததால் மீண்டும் உயர்ந்துவிட்டோம். சரி அந்தப் பேச்சை விடுப்பா? இது உன் இருபத்தெட்டாவது பிறந்த நாள். எனக்கு என்ன வாக்களித்தாய், உனக்கு நினைவிருக்கிறதா? முப்பது வயது

நெருங்குமுன் கட்டாயம் மணமுடிப்பதாகக் கூறினாயே!  என்ன? அது பற்றிப் பார்க்கலாமா?”

“அப்பாடி! இது பற்றிக் கேட்காமலே விட்டுவிடுவீர்களோ, மறந்தே போனீர்களோ  என்றெல்லாம் கவலைப்படவே தொடங்கிவிட்டேன்.” என்று பெரிதாகப் பாவனையிடன் கூறியவன்,  தாயின் வியந்த பார்வையைக் கண்டு, புருவம் உயர்த்தி என்னவென்று விசாரித்தான்.

தலையசைத்து “அதில்லை தம்பி. தொழில் தொழில் என்று அதே நினைவாய் யோசித்தபடியே இருப்பாயே! அதில், நீ இதை மறந்திருப்பாயோ என்றுதான் நானும் எண்ணினேனடா!”

“அதெப்படிம்மா? ஏன்? வேலை மும்முரத்தில் உங்களை என்றேனும் மறந்திருப்பேனா? அதைப் போலத்தான் இதுவும் வம்சாவளி சம்பந்தப்பட்ட விஷயம்.  விடவே முடியாது.” என்று கைப்பெட்டியைத் திறந்து ஒரு கவரை எடுத்துத் தாயிடம் கொடுத்தான்.

“என்னடா இது? நம் குடும்பத்துக்கும் எனக்கும் பொருத்தமாக ஐந்து பெண்களின் படங்கள் அம்மா. எல்லாம் பார்வைக்கும் எனக்குப் பொருத்தமாகத் தோன்றுகின்றன. நீங்களும் பார்த்து விட்டால் முடித்து விடலாம்.”

என்னவோ உறுத்த, கேலிப் பேச்சில் இறங்கி, “ஐந்தையுமா?” என்று சற்று அதிகப்படியாக வியந்தாள் அன்னை.

“சரிதான்! அப்புறம் என்னைப் பார்க்க நீங்கள் சிறைக்கல்லவா வர வேண்டியிருக்கும்! இந்த ஐந்தில் ஒன்றை, அம்மா. எதையென்று நீங்கள் சொல்லிவிட்டால் உடனேயே திருமணத்தையே முடித்து விடலாம். “ என்று அசிரத்தையாகக் கூறியவாறே,

கையில் இருந்த செல்ஃபோனில் கவனத்தைப் பதித்தான் அவன்.

“ஏய் பொறும்மா, இவர்களில் உனக்கு யாரைப் பிடித்திருக்கிறது?”

அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான் மகன். “தனியாகப் பிடிப்பதற்கு என்ன இருக்கிறது? எல்லோருமே நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். படிப்பு இருக்கிறது. தப்புத் தவறாக நடந்து கெட்ட பெயர் எதுவும் வாங்கவில்லை என்கிற அளவு விசாரித்துவிட்டேன். நல்லபடி வளர்ந்திருக்கிறார்கள். பார்க்கவும் அழகுதான். அதனால் யார் என்றாலும் எனக்கு ஓகேதான்.”

வருங்கால மனைவியைப் பற்றி இப்படியா பேசுவார்கள்? யாரானாலும் சரியாமே!

“ஆனால் பெண் வீட்டில் என்ன நினைக்கிறார்களோ? அவர்களுக்கும் . . . .முக்கியமாக அந்தப் பெண்ணுக்கு உன்னைப் பிடிக்க வேண்டும் அல்லவா?”

“பிடிக்காமல் போவானேன்?” என்றான் அவன் லாப்டாப்பை எடுத்தபடி.

“என்னடா, அந்தப் பெண்ணுக்கு ஏதாவது தனிப்பட்ட விருப்பங்கள் இருக்கலாமே. உன்னைப் பிடித்துதான் ஆக வேண்டும் என்பது ஒன்றும் பொதுவிதி இல்லையே! பிடிக்காமலும் போகலாம். . . . “

“போகாது!” என்றான் அவன் அழுத்தம் திருத்தமாக.

தாய் திகைத்து நோக்கவும், “அம்மா உங்கள் பையன் பார்வைக்கு அழகன். பேசிப் பழகுவதில் கெட்டிக்காரன். எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயமாக, இன்றைக்கு அவன் பெரிய பணக்காரன். இது போதாதா? சந்தேகமாக இருந்தால், நீங்களே இது பற்றி அந்தப் பெண்களிடமே கேட்டுப் பாருங்களேன்! யெஸ் சொல்லி உடனே விழுந்தடித்து ஓடி வந்து நம் வீட்டு வாயிலில் நிற்பார்கள். வேறு யாரும் அவர்களை முந்திவிடக் கூடாது அல்லவா?”

லாப்டாப்பில் கவனமாக மகன் விட்டேற்றியாகப் பேசியதை மனதில் திருப்பிப் போட்டு யோசித்தபடி தாயார் பேசாமல் அமர்ந்திருந்தாள். ஊகூம். இவ்வளவு அலட்சியம் இதில் கூடாது. கூடவே கூடாது.

சற்றுப் பொறுத்து, கை வேலையை முடித்துக்கொண்டு, “பார்த்துவிட்டீர்களா அம்மா யாரைத் தேர்ந்தெடுத்தீர்கள்? சொன்னீர்களானால் மேற்கொண்டு கல்யாண வேலைகளைத் தொடங்கலாம்.” என்று மகன் கேட்கவும்தான், அவன் இதில் தீவிரமாக இருப்பதை அவளால் முழுமையாக உணர முடிந்தது.

ஆனால் இது போல யாரோ ஒருத்தியை அதை விடவும் யாரானாலும் ஒருத்தியை மகன் மணக்கத் தயாராக இருப்பது அந்தத் தாயின் மனதுக்குப் பிடிக்கவில்லை.

இது அந்தப் பெண்ணுக்கு மட்டுமின்றி அவனுக்குமே செய்து கொள்ளும் அநியாயம் ஆகும்.

அவனுடைய தந்தையும் அவளுமே காதலித்து மணந்தவர்கள் அல்ல. பெரியவர்கள் பேசி முடித்த திருமணம்தான்.

ஆனால், கிட்டத்தட்டத் திருமணம் முடிவான சமயத்தில், அவர்,

அவளைக் கல்லூரி முடிந்து செல்லும்போது பஸ் நிறுத்தத்தில் வந்து சந்தித்தார்.

அவரது புகைப்படத்தைப் பார்த்திருந்தவள் அதிர்ந்து நிற்கவும், அதற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, “வீட்டில் பெரியவர்கள் கிட்டத்தட்ட முடிவு செய்துவிட்டார்கள். ஆனால், உன்னிடம் சரியானபடி சம்மதம் கேட்டார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை என்னை உனக்குப் பிடிக்கவில்லை என்றைல், தைரியமாக என்னிடம் சொல்லிவிடு. உன் பெயர் வெளியே வராதபடி, நான் இந்த ஏற்பாட்டை நிறுத்தி விடுகிறேன்.” என்றார்.

அன்றுவரை அவளிடம் யாரும் சம்மதம் கேட்டதில்லை. அதனால் உள்ளூர சற்றுப் பொருமிக் கொண்டிருந்தவளின் மனம் அப்போதே அவரது காலடியில் விழுந்து விட்டது. அதைச் சொல்ல வாய் திறந்தவளை சட்டென ஒரு சந்தேகம் உலுக்கியது. ஒருவேளை அவருக்கு இந்த ஏற்பாடு பிடிக்காமல் இப்படி மாற்றிக் கேட்கிறாரோ?

ஆமாம் என்றால், அவளால் எப்படித் தாங்க முடியும்? ஆனால் இவ்வளவு பெருந்தன்மையாகப் பழியை தானே ஏற்றுக் கொள்ள முன்வருகிறவருக்குத் துன்பம் ஏற்பட விடக் கூடாது என்று எண்ணித் திக்கித் திணறி ஒருவாறு தன் ஐயத்தைக் கேட்டுவிட்டாள்.

கிட்டத்தட்ட அவளது சம்மதத்தைச் சொல்லாமல் சொன்ன அந்தக் கேள்வியில் அவரது முகம் பளீரென்று மலர்ந்த விதம் இன்று வரையிலும் அவளது மனதில் பதிந்திருப்பது!

அவளது கேள்வியில் மகிழ்ந்து, “அப்படியல்ல.” என்று அவளது சந்தேகத்தைப் போக்கிவிட்டு அவர் சொன்னார். ஏற்கனவே சில உறவு வகைத் திருமணங்களில் அவளைப் பார்த்து அவருக்குப் பிடித்துப்போனதாகவும், இப்போது தானாக எழுந்த இந்தப் பேச்சில் மகிழ்ச்சியே என்றும் சொல்லி அவளை ஆறுதல் அடையச் செய்த பிறகும், மீண்டும் பழைய கேள்வியைக் கேட்டார். காரணம், அவளை மணப்பது அவருக்கு மிகுந்த சந்தோஷம் என்றாலும், அவரைப் பொறுத்தவரையில் அவளது மகிழ்ச்சிதான் முக்கியம் என்றார். அதனால் அவளுக்கும் பிரியம் இருந்தால் தவிர, இந்தப் பேச்சைத் தொடர மனமில்லை என்றார்.

அவளும், தனக்குப் பிடிக்காமல் இல்லை., பெற்றோரின் முடிவில் அவளுக்கு மகிழ்ச்சியே என்று இன்னோரன்ன வார்த்தைகளில் அவளது சம்மதத்தைத் தெரிவித்த பிறகே சிவசங்கரன் திருப்தி அடைந்தார்.

அதுவும், அவளது இந்த முடிவை எண்ணி அவள் ஒருபோதும்

வருந்த நேரிடாது என்றும், உயிரோடு இருக்கும்வரை அவளைக் குதூகலமாக வாழ வைப்பதாகப் பலமுறை  உறுதி  கூறிவிட்டே அவளைப் பிரிந்து சென்றார்.

சொன்ன சொல்லை நிறைவேற்றவும் செய்தார். அவர் இருக்கும்வரை அவளைப் போல ஆனந்தமாக உலகில் யாரேனும் இருந்திருப்பார்களா என்பதே சந்தேகம்தான்.

ஆனால், அவர் மறைந்தபிறகு அவளது வாழ்வில் ஏற்பட்ட வெற்றிடம்! அதில் அவள் உடைந்து கிடந்தது! அவள் ஓரளவு இயல்புக்குத் திரும்பவே பல மாதங்கள் ஆகிவிட்டன. செல்ல மகனுக்கும் தாயின் நிலைமைதான் பெரிதாகத் தோன்றியது.

விளைவு, “ஆற்றிலே தண்ணீர் போகிறது, அம்மா குடி, அய்யா குடி”தான்.

தேவகி தெளிந்து வந்தபோது, அங்கே பார்த்துப் பாதுகாக்க எதுவும் இல்லை. வீடு மகன் பேரிலும் சேர்ந்து இருந்தது. இன்னமும் பதினெட்டு நிறையாத மைனராக ஜெயதேவ் இல்லையென்றால் அவர்களிடம் கையெழுத்து வாங்கி அவைகளையும் ஸ்வாஹோ பண்ணியிருப்பார்கள். எடுத்துப் போக முடியாத இன்னும் சில அசையாச் சொத்துகளும், தொழில் சார்ந்த உரிமைகளும் இருந்தன.

கணவர் அவ்வப்போது தொழில் பற்றிச் சொன்னதை மகனிடம் எடுத்துரைக்க, இருவருமாகச் சேர்ந்து ஒருவாறு தொழிலை நடத்தலாயினர்.

இயல்பிலேயே புத்தி கூர்மையும், தந்தையின் தொழில் அறிவுமாக மகன் விரைவிலேயே தொழிலை லாபகரமாக நடத்தத் தொடங்கிவிட்டான்.

இரண்டு குதிரை ஏற முடியாமல் கல்லூரிப் படிப்பைக் கைவிட்டது அவனுக்கு வருத்தமே! ஆனால் அதை ஈடுகட்டத் தபால் மூலமாக நிர்வாகம் தொழில் பற்றிக் கற்றுத் தேர்ந்தான். தந்தைக்குப் பிள்ளையாக ஜெயித்துக் காட்டும் வெறி வேறு!

அப்படியும் இரண்டு ஆண்டுகள் ரொம்பவும் கஷ்டம்தான். அப்புறம்தான் தலை நிமிர முடிந்தது.

மகனின் வெற்றிகளில் தாய்க்கு மிக்க மகிழ்ச்சியே! என்றாலும், இந்த வெற்றி அவனது தலைக்கு ஏறுகிறதோ என்றோர் ஐயம் சில காலமாக அவளுள் அவ்வப்போது எழுந்ததுண்டு. அது சரியே என்று இப்போது தெளிவாயிற்று.

முப்பதாண்டுகளுக்கு முன்பாகவே மனைவியாக வரப் போகிறவளின் சம்மதத்தை வேண்டி வந்த கணவரின் நினைவு அவளை மிகவும் பாதித்தது. அவர் இருந்திருந்தால், மகனின் குணம் இப்படி மாற விட்டிருக்க மாட்டார்!

இப்போதும் பையன் கெட்டவனில்லை! ஆனால் முதலில் சில ஆண்டுகள் பட்ட கஷ்டத்தினால், இரக்கம், இளக்கம் போன்ற சில குணங்கள் காணாமல் போயிருந்தன. மற்றபடி, தொழிற்சாலைக்குள் பிரச்சினை கிளப்பிக் கொண்டிருந்த இருபது பணியாளர்களை ஒட்டு மொத்தமாகப் பணி நீக்கம் செய்து, தூக்கி எறிந்திருக்க முடியாது.

அதுவும், அவனுக்கு எதிராக யாரும் விரல் உயர்த்த முடியாதபடி, அவன் அதைச் செய்த விதம்! ஒன்றும் அறியாதவன் போலவே இருந்து, அவர்களுக்கு எதிரான சாட்சியங்களை முழுமையாகச் சேகரித்து, ஒரே அடியில் அவர்களை வெளியேற்றினான்.

தொழிலாளர் யூனியனில் கூட, அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

பெண்டு பிள்ளைகள் என்று அந்தத் தொழிலாளர்களின் குடும்பம் வந்து கெஞ்சியபோதும் அவன் இளகவில்லை. எல்லோருமே அதிகப்பற்று வாங்கிச் செலவு செய்திருந்ததால் பணி நீக்கம் செய்தபோது கையிலும் காசு பெரிதாகக் கிடைக்கவில்லை.

அவர்களுடைய மனைவி மக்கள் தேவகியை வந்து பார்த்துப் புலம்பினார்கள்.

மனம் இளகிப்போய் மகனிடம் அவள் பேசியபோது, "அம்மா, நாம் தரும நிறுவனம் நடத்தவில்லை. அவர்கள் தான் மட்டும் சோம்பேறியாக இருக்கவில்லை. மற்றவர்களையும் நிறுவனத்துக்கு எதிராகத் தூண்டிவிட்டார்கள். நான் முதலிலேயே அவர்களைக் கண்காணித்து வரவில்லை என்றால், மிகப் பெரிய நஷ்டம் ஒன்றை நாம் சந்திக்க நேர்ந்திருக்கும். அந்தத் துரோகிகளுக்கா பணம் கொடுக்கச் சொல்லுகிறீர்கள்? என்ன ஆட்டம் போட்டார்கள்? அவரவர் குடும்பம் கஷ்டப்படுமே என்ற எண்ணமே அப்போது இல்லையே! படட்டும். மனைவி மக்கள் கஷ்டப் படுவதைக் கண் முன்னே காணும்போதுதான், இன்னொரு தரம் இது போலச் செய்யக் கூடாது என்கிற புத்தி வரும்." என்று முடித்தானே தவிர, சட்டப்படி கொடுப்பது தவிர, பைசா நகட்டவில்லை.

இரக்கமற்றவன் என்று சிலபேர் பேசினார்கள்., பத்திரிகைகளில்

எழுதினார்கள். ஆனால் ஜெயதேவன் சட்டையே பண்ணவில்லை.

தேவகிக்கே ஒரு மாதிரிதான் இருந்தது. ஆனால் மகனைக் குற்றம் சொல்லவும் அவளால் முடியவில்லை. இவ்வளவு கண்டிப்பாக இருக்க வேண்டாமோ என்று எண்ணம்தான்.

ஆனால், தான் செய்ததே சரி என்பதில் மகன் ரொம்ப நிச்சயமாக இருந்தான்.

இந்த சற்று அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை! கர்வம் என்கிற எல்லையைத் தொட்டுக் கொண்டிருந்த தன்னம்பிக்கை.

தன்னிடம் நம்பிக்கை இல்லாமல் யாரும் எந்தத் தொழிலையும் நடத்த முடியாதுதான். ஆனால் இல்வாழ்வு வேறு. ஒருவனுக்கு மனைவியிடம் மதிப்பு இருக்க வேண்டுமே! இவனுக்கோ, அவளுக்கென்று ஓர் அபிப்பிராயம் இருக்கக் கூடும் என்பதே இல்லையே!

தாய் மௌனமாக இருக்கவும், “என்னம்மா, ஒருவரையுமா உங்களுக்குப் பிடிக்கவில்லை?” என்று ஆச்சரியமாகக் கேட்டான் மைந்தன். “அழகாகத்தானே இருக்கிறார்கள்? “

“அழகாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் . . . “ என்று இழுத்தவள் மகனின் முகபாவத்தைக் கண்டதும் அவசரமாக “பொறுப்பா. அழகோடு நல்ல குடிப்பிறப்பு படிப்பு எல்லாமே இருக்கின்றன. ஆனால் இவர்களில் யாரும் உனக்கு ஏற்றவளாக இருக்கக் கூடும் என்று எனக்குத் தோன்றவில்லைப்பா. சாரி.” என்றாள்

வியந்த பார்வை மெல்ல இளக, “அம்மா, நீங்கள் யாரையேனும் மனதில் மருமகளாக நினைத்து வைத்திருக்கிறீர்களா? அவள் ஒருவேளை . .அதிக வசதி இல்லையோ? அதனால் பரவாயில்லை, அம்மா. நம்மிடம்தான் இரு வீட்டுக்கும் சேர்த்து செல்வம் இருக்கிறதே. யார் என்று சொல்லுங்கள். அவளையே பார்த்து முடிப்போம். “ என்றான் கனிவாக.

இன்னமும் அவளுக்கும் ஒப்புதலாக இருந்தால் என்கிற வார்த்தைகளைக் காணோமே!

“சொல்லுங்கள் அம்மா. அந்தப் பெண்ணின் முகவரி என்ன?” என்று விவரங்களைக் குறித்துக்கொள்ள செல்ஃபோனை எடுத்தான் அவன்.

“சொல்லுங்கள், பெண்ணின் பெயர், அவளுடைய அப்பா யார்? எங்கே . .”

சற்றுத் திணறிப் போனாள் அன்னை. “டேய், என்னை விரட்டாதேடா. எனக்கு அதெல்லாம் எதுவுமே தெரியாது.” என்று வீறிட்டாள்.

“வாட்! ? எனக்குப் புரியவில்லையே!” செல்லை அணைத்து வைத்துவிட்டுத் தாயின் முகத்தைப் பார்த்தான். “அம்மா ஒன்றும் அவசரமில்லை. நிதானமாக யோசித்துச் சொல்லுங்கள், என்ன விஷயம்?” என்று அமைதியாகக் கேட்டான்.

தன்னை மீறி ஒரு பெருமூச்சுவிட்டாள் தேவகி. இனிமேல் இவனிடம் நினைப்பதைச் சொல்லலாம். ஆனால், இப்போதும் சொல்வதற்குப் பெரிதாக ஒன்றும் அவளிடம் இல்லையே! ஆனாலும் . .

“கண்ணா, அந்தப் பெண்ணை நான் இதுவரை இரண்டே தடவைதான் பார்த்திருக்கிறேன். . . எ என்ன? எதற்குச் சிரிக்கிறாய்?”

“அதில்லைம்மா. பழைய கதைகளில், தேசாந்திரம் செல்லும் ராஜகுமாரன், கோவில் சுவரில் ஒரு பெண்ணின் சித்திரத்தைப் பார்த்துவிட்டுப் “பெண்ணே பூச்செண்டைக் கொடு” என்று அங்கேயே நின்றுவிட்டதாக வரும். அவளைப் படத்தில் பார்த்தே பையன் மையலாகி விட்டானாம்!  நீங்கள் பரவாயில்லை. நேரில் இ . . ரண்டு தரம் பார்த்து விட்டீர்களே! சொல்லுங்கள், அந்த இரண்டு முறையும் அவள் என்ன செய்து உங்களைக் கவர்ந்தாள்? ஏதோ படத்தில் வருகிற மாதிரி, மாற்றுத் திறனாளி யாருக்காவது தெருவைக் கடக்க உதவி செய்தாளா? அல்லது, வறுமையால் வாடிய யாருக்காவது, கை வளையலைக் கழற்றிக் கொடுத்து உங்கள் இரக்க மனதைக் கவர்ந்துவிட்டாளா?” என்று கேலி செய்தான் பிள்ளை.

“மாற்றுத் திறனாளி விஷயம் வேறு. ஆனால் இரண்டாவதாகச் சொன்னது போல வளையலைக் கழற்றிக் கொடுக்கிறவளை நீயே காதலித்தால் கூட அவள் வேண்டவே வேண்டாம் என்று தடுத்துவிடுவேன், தெரிந்துகொள்.” என்று மகனின் கேலிக் குரலிலேயே பதில் கொடுத்தாள் அன்னை.

“என்னம்மா நீங்கள்! உங்களுக்கு இரக்கமே இல்லையா?”

“கஷ்டப்பட்டுக் கற்ற பாடம் கண்ணா. தனக்கு மிஞ்சித்தான் தானம்! அப்புறம்,  இப்படிக் கழற்றிக் கொடுப்பதற்கு வளையல் செய்து போட்டே நம் காசெல்லாம் கரைந்துவிடுமே, நம் கதி என்ன ஆவது? ஒருவருக்கு உதவி செய்வது எப்படி என்று நன்கு யோசித்து முடிவெடுக்காமல், உணர்ச்சி வேகத்தில் செயல் படுகிறவளை நான் ஒரு நாளும் உன் மனைவியாக  . .நீ யே விரும்பினால்கூட ஏற்க மாட்டேன் . .

.” என்றாள் அன்னை.

“ரைட்! இப்போது உங்களுடைய இரண்டே தரம் பார்த்த பெண்ணுக்கு வருவோம். அப்படி ஒரு பெண் மெய்யாகவே இருக்கிறாளா? அல்லது, இந்த ஐந்தும் வேண்டாம் என்று மறுப்பதற்காகச் சும்மா சொன்னீர்களா?”

இப்படிச் சரியாக ஆணி வேரைப் பிடித்து ஆட்டுவதற்கு இவனால் மட்டும்தான் முடியும்!

உள்ளூர அன்னைக்குப் பெருமைதான். ஆனால், சொல்வதற்குத் தாயிடம் சிறு உண்மையும் இருந்தது.

ஒரு தரம் மதுரையில் தேவகியுடைய தாயார் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, பக்கத்துப் பூங்காவில் சிறுவர் சிறுமியர் சிலர் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி, யாருடனும் சேர்ந்து விளையாடாமல் தனியே ஒதுங்கி உட்கார்ந்திருந்தாள். நிலா மாதிரி அழகான முகம். வானத்தில் எதையோ தேடுவது போல அவ்வப்போது விழியை உயர்த்தி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

கழுத்து வலிக்காதா என்று தேவகி நினைத்தபோது, அவளுமே வலியை உணர்ந்தாற்போலத் தலையைத் தாழ்த்திக் கொள்வாள்.

சற்றுப் பொறுத்து மறுபடியும் தொடங்குவாள்.

வானத்திலே அப்படி என்ன தேடுகிறாள்? என்ன வேண்டும் கண்ணே என்று அவளை அணைத்துக் கொள்ள வேண்டும் போன்ற உணர்வு பேரலையாக எழுந்த விதத்தில் தேவகியே சற்றுத் திகைத்துப் போனாள்.

“ஓஹோ! அப்போதே உங்கள் மனதில் ஒரு இது உண்டாகி விட்டதாக்கும். எனக்கும் காட்டியிருக்கலாமேம்மா. வருங்கால மனைவி எப்படி இருப்பாள் என்று ஓர் ஐடியாவாவது ஏற்பட்டிருக்கும்!” என்று கிண்டலடித்தான் மகன்.

“ஷ்! சும்மா இருடா! இல்லாவிட்டால் ஒன்றும் சொல்ல மாட்டேன்.” என்று சற்றுப் பிகு பண்ணிவிட்டு, மகன் வேடிக்கையாகக் கன்னத்தில் போட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளவும் தேவகி தொடர்ந்தாள்.

தேவகி அந்தச் சிறுமியிடம் கவனமாகக் கூடுதல் நேரம் நின்றிருக்க வேண்டும். ஏனெனில், “காஃபி குடிக்கக் கூப்பிட்டால் வராமல் இங்கே என்ன வேடிக்கை பார்க்கிறாய்?” என்று கேட்டபடி காஃபியை

அவளுடைய தாயே கொண்டு வந்து தந்தாள்.

குற்ற உணர்ச்சியோடு, “என்னம்மா, நான் என்ன சின்னப் பாப்பாவா? கீழே வந்து காஃபியைக் குடிக்க மாட்டேனா? இப்படி மாடி ஏறி வந்து தர வேண்டுமா?” என்று சிறு தாங்கலோடு கேட்கும்போதே அவளது கவனம் மீண்டும் அந்தச் சிறு பெண்ணிடம் போயிற்று.

மகளின் பார்வையைக் கவனித்து, “யாரைப் பார்க்கிறாய்?” என்று தானும் எட்டிப் பார்த்தாள் அன்னை.

தனித்து அமர்ந்திருந்த சிறுமியைப் பார்த்ததும், “ஓ, இவளா? நம் பின் வீட்டுப் பெண்ணம்மா. பாவம்! இந்தச் சின்னப் பெண்ணை விட்டுவிட்டுப் பெற்றவள் இறந்து போனாள். “உன் அம்மா வானத்திலே இருக்கிறாள். நீ அழாமல், வம்பு பண்ணாமல் நல்ல பெண்ணாக இருக்கிறாயா என்று  அவ்வப்போது அங்கிருந்து பார்ப்பாள்” என்று சொல்லி வைத்திருக்கிறாள் அவளுடைய பாட்டி. அதுதான் இப்படித் தனியே உட்கார்ந்து அம்மாவைத் தேடுகிறாளாம் குழந்தை. ஒரு நாள் கேட்டபோது சொன்னது. “ என்று விளக்கம் கொடுத்தாள்.

மீண்டும் எட்டிப் பார்த்தபோது, யாரோ வந்து சிறுமியை அழைத்துப் போயக்கொண்டு இருந்தார்கள்.

“அந்தத் தடவை  உன் தாத்தா வீட்டில் தங்கியதே, நம் சொந்த ஊருக்குச் செல்லும் வழியில் எட்டிப் பார்ப்பதற்காகத்தானே! அதனால் மறுநாள் அதி காலையிலேயே கிளம்பியதில் அந்தப் பெண்ணை மறந்தே போனேன். ஆனால் சுமார் பத்து ஆண்டுகள் கழித்து அடுத்த முறை அவளைப் பார்த்ததை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது.” என்றாள் தேவகி.

“ஏனம்மா? அவள் தலையில் ஏதாவது கொம்பு முளைத்திருந்ததா?” என்று சாது போலக் குரலில் அப்பாவித்தனம் காட்டிக் கேட்டான் மைந்தன்.

தாயாரைக் கிண்டலடிக்கிறானாம்!

மகன் பேச்சை இயல்பு போல ஏற்று, “அவளது அழகைக் கெடுக்க அப்படி ஏதும் முளைத்திருக்கவில்லை. ஆனால், என் கையில் கிரீடம் ஏதுவும் இருந்திருந்தால், அப்போது அவளுக்கு அதை  நிச்சயமாகச் சூட்டியிருப்பேன்!” என்றாள் தேவகி மிகவும் உறுதியான குரலில்!

# அத்தியாயம் -2

அப்போதும் மகன் விடவில்லை. “அடடா, அவ்வளவு பெரிய வீரச் செயலா செய்துவிட்டாள்? தெரிந்திருந்தால், அப்போதே அவள் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டிக் கூட்டி வந்திருப்பேனே!” என்றான் தொடர்ந்து இலகுவாகவே.

ஆனால் அவனைப் பெற்றவளும் சளைக்கவில்லை. “அப்படி ஏதும் செய்திருந்தால், அவள் உன்னையும் சிறைக்கு அனுப்பி வைத்திருப்பாள்!” என்று அவனது பாணியிலேயே கூறி அவனை அதிர வைத்தாள்.

“வாட்?!” என்று அன்னை எதிர்பார்த்தது போலவே மகனும் அதிர்ந்தான். “அம்மா, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? கௌரவமாகத் தாலி கட்டி மனைவியாக ஏற்க நினைப்பது, சிறைக்கு அனுப்புவதற்கு உரிய குற்றமா? “ என்று என்று வியந்து விசாரித்தான் மகன்.

“ஆமாம். அன்றைக்கு அவள் விஷயத்தில் அப்படியேதான்! ஏனென்றால் . . .” என்று கன கம்பீரமான குரலில் அவள் சொல்லி வருகையில் “ஓஹோ! அதுவா விஷயம்? கண்டுபிடித்துவிட்டேனே! “ என்று அவளை முந்திக் கொண்டு “அப்போது அவளுக்குத் திருமண வயது ஆகவில்லையாக்கும்!” என்று அவன் காரணத்தைச் சரியாகக் கண்டுபிடித்துக் கூறவும், அன்னைக்குச் சிரிப்பு வந்தது.

“ரொம்ப சரியேதானடா. அவளைச் சீக்கிரமாக வீட்டை விட்டு விரட்டுவதற்காகவோ, என்னவோ, அவளுடைய சித்திக்காரி அவளுக்குத் திருமண ஏற்பாட்டைச் செய்திருக்கிறாள். இவள் படிக்க வேண்டும் என்று ஏதோ மறுப்பு சொல்லியும் இருக்கிறாள். பொருட்படுத்தாமல் பெரியவர்கள் அவர்கள் போக்கில் ஏற்பாடுகளைச் செய்யவே, இவள் ஓசைப்படாமல் போலீசுக்குப் புகார் அனுப்பிவிட்டாள்.

“எல்லாருமாகத் தாத்தா வீட்டுக்கு புகார் பண்ண வந்திருப்பார்கள் போல. சம்பந்தமே இல்லாதவள் போல முகத்தில் கூட எதையும் காட்டாமல் பேசாமல் எப்படி நின்றாள் தெரியுமா?

“அதுவே அவளுடைய சிற்றன்னையை மேலும் ஆத்திரமூட்டி இருக்க வேண்டும். அமுக்குப் பிள்ளையார் போல நிற்பதைப் பாருங்கள்! விரும்பி வந்து கேட்டார்கள். நல்ல வசதி. நமக்குச் செலவே இல்லாமல் அவர்களே நகை போட்டுப் பண்ணிக் கொள்வதாக ஏற்பாடு! பணக்கார

இடத்தில் பெண் சிறப்பாக வாழுவாள் என்று உங்கள் மருமகனுக்கும் ரொம்ப ஆசை. கடைசியில் முகத்தில் கரியைப் பூசிவிட்டாள் உங்கள் பேத்தி. போட்ட நகையோடு, துணிமணியைக் கூடக் கேட்டு வாங்கிப் போய்விட்டார்கள்!

“பெரிய இடம் என்று பெருமை பேசியிருந்தேன். எங்களுக்கு எவ்வளவு அவமானம்! தாய்க்குத் தாயாக வளர்த்ததற்கு நல்ல பரிசு கொடுத்துவிட்டாள். நான் பெற்ற மகளாக இருந்திருந்தால், சூடு வைத்திருப்பேன்! என்ன செய்வது? உடனே மாற்றாந்தாய்க் கொடுமை என்று முத்திரை குத்த வந்துவிடுவார்களே! இவளே போலீசைக் கூப்பிட்டு அப்படிச் சொன்னாலும் சொல்லுவாள்! அதுதான் உங்களிடம் கூட்டி வந்தோம். இனியேனும் சொல் பேச்சு கேட்டு ஒழுங்காக இருக்கச் சொல்லுங்கள்.” என்று காட்டுக் கூச்சலாகக் கத்தி அலறிப் பேசி முடித்தாள் சிற்றன்னை.

“அவளுக்குத் தன்னை நல்லவளாகக் காட்டிக்கொள்ள ஆசை. பெண்ணுக்குச் செலவு பண்ணாமலே கல்யாணம் நடந்திருக்கும். மேற்கொண்டு அவளது படிப்புச் செலவும் மிச்சம். இதுதான் அவளை உந்தியிருக்கிறது. மற்றபடி அந்த மாப்பிள்ளைக்கு வயதும் கூட., குணமும் சரியில்லையாம் என்று பின் வீட்டுக்காரம்மா உன் பாட்டியிடம் வந்து புலம்பினார்கள்.

“மகள் வயிற்றுப் பேத்தி. தாயில்லாப் பெண். கூட வைத்துக்கொள்ள அந்த அம்மாவுக்கு ரொம்பவும் ஆசை. ஆனால் வீட்டில் மருமகளுக்குப் பிடிக்காதே! ஒரு நாள் இரண்டு நாள் என்றால் விருந்து. நிரந்தரம் என்றால் அவள் நிச்சயமாக நிறம் மாறிவிடுவாள்! கூடவே இருந்துகொண்டு அவளுக்குப் பிடிக்காததை எப்படிச் செய்வது?

“மறுபடியும் தகப்பன் வீட்டுக்கு அனுப்பவும் பயம்! பேத்தியை என்ன பாடு படுத்துவார்களோ? இளையவளிடம் மருமகன் வாயே திறக்க மாட்டாராம். இதே போல இன்னோர் இடம் பார்த்துப் பேத்தியைக் கட்டி வைத்தால்? கலங்கிப் போய் என் அம்மாவிடம் வந்து அழுதார்கள்.

“நம் வீட்டிலும் அப்பா போய் பிரச்சினைகளை எப்படி யெப்படியோ சமாளித்துக் கொண்டிருந்த நேரம். அந்த இரு சினேகிதிகளும் சேர்ந்து அழுதார்கள்.

“எனக்குமே கடவுளே இருக்கிறாரா என்று சந்தேகப்படுகிற அளவு மனம் கலங்கி, தாத்தாவிடம் கேட்டுத் தெளிவு பெறத்தானே, அந்த முறை

சென்றிருந்தோம்! உலகத்தில் பெண்கள் பிறப்பதே கஷ்டப்படத்தானா என்று ஏதேதோ எனக்கும் தோன்றிவிட்டது.

“பாட்டியைத் தேடி வந்த பேத்திதான் பெரியவளுக்குத் தைரியம் சொன்னாள். ஒரு வகையில் எனக்கும்!

“என்ன பாட்டி, எதற்கு அழுகை? என் சித்திக்கு என்னிடம் உள்ள நம்பிக்கை கூட உங்களுக்கு இல்லையா?” என்று அவள் கேட்டபோது நானும் திகைப்புடன்தான் அவளைப் பார்த்தேன்.

“உன் சித்திக்கு உன்னிடம் நம்பிக்கையா? என்னடீ பாப்பா, அசடு போல என்ன உளறுகிறாய்?” என்று பின் வீட்டம்மாவுக்கும் குழப்பம்தான்.

“எனக்கும்தான் அம்மா.” என்று ஒத்துக் கொண்டான் மகனும். “அவளுடைய மாற்றாந்தாய்க்கு அவளிடம் அப்படி என்ன நம்பிக்கையாம்? தெரிந்து கொள்ளாவிட்டால் என் மண்டை வெடித்துவிடும். சீக்கிரமாகச் சொல்லுங்கள். “ என்று அவசரப்படுத்தினான்.

“எங்களைப் பார்த்துக் கலகலவென்று நகைத்துவிட்டு அவள் என்ன சொன்னாள், தெரியுமா? “இன்னொரு தரம் இவளுக்கு எந்தத் தைரியத்தில் மாப்பிள்ளை பார்ப்பது? இப்போது இந்தக் காரணத்தைச் சொல்லிப் போலீசை வரவழைத்தாள். அடுத்து வேறு ஏதாவது காரணம் சொல்லிக் கூப்பிடுவாள்.” என்று அவர்களுக்கு நடுக்கமாக இருக்கிறதாம். இந்தப் பொல்லாப்பெல்லாம் அவர்களுக்கு இனி வேண்டவே வேண்டாமாம்! இப்படிச் சொல்லி, முழு நீள வண்ணப் படமாக அவள் ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, இந்த நல்ல சேதியைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று உங்களைத் தேடினேன். தேடி இங்கே வந்தால், நீங்கள் காரணமே இல்லாமல் கண்ணீரில் கரைந்து கொண்டிருக்கிறீர்களே! அசட்டுப் பாட்டி!” என்று அவள் பாட்டியின் கண்ணைத் துடைத்து ஆறுதல் படுத்தினாள்.

“அப்படித் துடைக்கும்போது, படபடவென்ற அவளது பேச்சுக்குச் சம்பந்தமே இல்லாமல் என்ன மென்மை தெரியுமா? பளபளவென்று அவளது கண்களைப் போல நான் பார்த்ததே இல்லை.” என்றாள் அன்னை.

“புது டெக்னாலஜி எதையும் பயன்படுத்தி அவள் கண்களில் லைட் போட்டிருந்தாளாம்மா?” என்று ஆச்சரியம் காட்டிக் கேட்டான் மகன்.

“உனக்கு உதை கேட்கிறது என்று நினைக்கிறேன்!” என்றாள

அன்னை மிரட்டலாக.

கலகலவென்று சிரித்தபடியே லாப்டாப்பை மூடி அதற்குரிய பையுள் எடுத்து வைத்தான் மகன்.

“ரைட்மா. அவள்தான் உங்கள் மருமகள் என்கிறீர்கள். அதுதானே? சரி. இப்போது, இந்தப் பெண்ணின் முகவரி உங்களுக்குத் தெரியாது என்றீர்கள் இல்லையா? அவளுடைய தத்தா வீட்டு முகவரி தெரிந்திருக்கும். நம் தாத்தா வீட்டுக்குப் பின் வீடுதானே. பல கை மாறியிருந்தால் கூடக் கண்டுபிடித்து விடலாம். கண்டுபிடித்துவிட்டு உங்களிடம் வருகிறேன். ஆனால் அம்மா . . .”

“என்னம்மா?”

“ஒருவேளை அவளுக்குத் திருமணம் ஆகியிருந்தால் . . அல்லது காதலில் சிக்கியிருந்தால், அப்போது இவைகளில் எதையேனும் பார்க்கலாமா? . . அப்போதும் வேண்டாமா? அதற்கு ஏன் முகத்தை இப்படி வைத்துக் கொள்ளுகிறீர்கள்? வேண்டாம் என்றால் விடுங்கள். இந்தப் படங்களைத் திருப்பி அனுப்பி விடுகிறேன்.” என்றான் மகன்.

ஒரு கணம் தேவகிக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், ஏதோ பிடிக்காத துணிமணி யைத் திருப்பி அனுப்புவது போல எவ்வளவு சாதாரணமாகச் சொல்லுகிறான்!

இவன் மனதில் வெகு சிறிதளவு சலனம் ஏற்பட்டிருந்தாலும், இது எப்படி முடியும்?

பரவாயில்லை. அந்தப் பெண்களுக்கும் மகனுக்கும் தேவகி நன்மைதான் செயதிருக்கிறாள்!

கூடவே மகனின் திருமணம் பற்றிய மெலிதாக ஒரு கவலையும் தேவகிக்கு உண்டாயிற்று.

திருமணம் பற்றி மகனிடம் பேசிவிட்டு, அறிந்தோர் தெரிந்தவரிடம் விசாரித்து அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க முடிந்தால், தற்செயல் போல அவர்களைச் சந்திக்க வைத்து, இருவருக்கும் பிடித்துப் போனால் மேலே திருமண ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று அவள் என்னென்னவோ திட்டங்கள் தீட்டியிருந்தாள்.

ஆனால், வருங்கால மனைவியை உயிரும் உணர்வும் உள்ள பிறவியாகவே கருதாமல், ஏதோ கடைச்சரக்கு போல மகன் பேசிய விதம் அவளுள் கலக்கத்தை ஏற்படுத்தியது.

கடினமான உழைப்பும் மற்றவர்கள் முன்னே உயர்ந்து காட்டும்

வெறியுமாக மகன் மனதில் மென்மையான உணர்வுகள் அற்றுப் போயினவா?

இல்லையில்லை. அப்படியெல்லாம் இராது. தாயின் முகம் லோசாக வாடுவது கூடப் பொறுக்காமல் அவன் பேசியதே சொல்லவில்லையா, அவன் மனதில் ஈரம் வற்றிவிடவில்லை என்று! நிச்சயமாக இல்லை!

ஏன்? ஒரு நிலைக்கு வந்ததுமே, தங்களை மோசம் செய்த சித்தப்பாக்கள், அத்தையைப் பழி வாங்கவென்று கிளம்பத்தானே செய்தான்? சேர்ந்து விளையாடிய ஒன்றுவிட்ட அண்ணன் தம்பி தங்கைகளைப் பற்றி நினைவூட்டி, பெற்றோர் செய்த தப்புக்கு அந்தப் பிள்ளைகளும் கஷ்டப்பட வேண்டுமா என்று அவள் எடுத்துச் சொன்னதும், அந்தக் குரோத நடவடிக்கைகளை ஜெயன் விட்டுவிடவில்லையா?

அவன் உள்ளே பாசம் இல்லாமல் இல்லை.

அந்தப் பெண், அவளுடைய பாட்டியின் மனம் குளிரப் பேசியதும் அப்படித்தான். இருவருமே அன்பைப் பெரிதாக எண்ணுகிறவர்களே! என்ன, இவன் மனதில் இன்னமும் அதிகமாக வெளிச்சம் தரும் வகையில் அதைத் தூண்டி விட ஒருவர் வேண்டும்.

எப்படியும் இந்த இருவரும் மணந்துகொண்டால் நன்றாக இருக்கும்!

ஆனால், அவளது இருப்பிடம் பற்றி ஜெயதேவ் எப்படி அறியப் போகிறான்? அவள் அந்தக் காஞ்சனியுடைய தாத்தா பாட்டியே மதுரையை விட்டு எப்போதோ போய் விட்டனர். தேவகியுடைய பெற்றோரும் ஒருவர் பின் ஒருவராக மறைந்து போயினர்.

எனவே, மதுரையே முன்போல வீட்டில் யாருக்கும் நினைவு வருவதில்லை.

ஊரே மறந்துவிட்ட இந்த நிலையில், இவன் அந்தப் பெண்ணை எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறான்?

ஏதேதோ எண்ணினாலும், தன் எதிர்மறை எண்ணங்களைத் தேவகி மகனிடம் மூச்சு விடவில்லை.

ஒன்று மகன் பிடிவாதக்காரன். ஒன்றில் முனைந்து இறங்கினான் என்றால், அதைச் செய்து முடிக்காமல் லேசில் விடமாட்டான். அதே நினைவாக வேலை செய்வான். அந்தப் பெண்ணை அதிகம் நினைத்தான் என்றால் நல்லதுதானே?

இது போலச் சொடக்குப் போடுமுன் கிடைத்ததால்தானே இவ்வளவு அலட்சியமாக நினைக்க முடிந்தது? தேடட்டும். கொஞ்சம் கஷ்டப்பட்டே தேடட்டும். அப்படியானால்தான் அவளிடம் மதிப்பு வரும் என்று எண்ணினாள் அந்த அன்னை.

ஆனால் தேவகிக்கு ஒரே ஒரு கவலைதான். பதினேழு வயதிலேயே அவளைக் கட்டிக் கொடுக்க முயற்சி செய்தார்களே, இந்த ஐந்தாறு ஆண்டுகளில் அதில் வெற்றி பெற்றிருந்தால்?

எப்படியானாலும் மனைவியாகப் போகிறவள் பற்றி மகனுக்கு இருக்கும் அலட்சியம் மாறுவதேனும் பலனாக விளையட்டுமே என்று எண்ணினாள், மகனிடம் உண்மையான அக்கறை கொண்ட அந்தத் தாய்.

எண்ணி இரண்டே வாரங்களில், ஜெயதேவன் அலுவலத்திலிருந்து திரும்பி வரும்போதே உற்சாகத்துடன் அன்னையை உரக்க அழைத்தபடியே வந்தான். நடையிலும் ஒரு துள்ளல்! ஏதாவது சாதனையைத் தெரிவிக்கையில் காணப்படும் துள்ளல்!

ஆவலாக நோக்கிய தாயிடம், “அம்மா இன்னும் ஐந்து நாட்களில் ஒரு நல்ல நாள் இருக்கிறதாம். அன்றைக்கு உங்கள் விருப்பம் நிறைவேறப் போகிறது!” என்றான் மகிழ்ச்சியோடு.

“எ.எ.என்ன விருப்பம் தேவா? “ என்று சிறு குழப்பத்துடன் வினவினாள் தேவகி.

“என்னம்மா, அதற்குள்ளாகவா மறந்துவிட்டீர்கள்? திருமணம் அம்மா, என் கல்யாணம்! அன்றைக்கு அவ்வளவு சொல்லிவிட்டுப் போன மகன் என்ன செய்தானோ என்னவோ என்று அதை நினைவாக இருப்பீர்கள் என்று எண்ணினேன். நீங்களானால் நினைக்கவே இல்லை போல?” என்றான் பிள்ளை சிறு ஏமாற்றத்துடன்.

மகனின் ஏமாற்றம் மனதை உறுத்த, “சே, அதை எப்படியடா மறப்பேன்? ஆனால், அந்தக் குடும்பத்தைத் தேட இன்னும் அதிக நாட்கள் ஆகும் என்று நினைத்தேன். ஆனால், அதற்குள்ளாக அந்தக் காஞ்சனியின் விலாசம் கிடைத்துவிட்டதா, என்ன?” என்று வியப்புடன் கேட்டான் தேவகி.

உணர்ந்ததை விடச் சற்று அதிகமாகவே வியப்பைக் குரலிலும், முகத்திலும் காட்டினான் எனலாம்.

திருப்தி அடைந்தவனுக்கு மறுபடியும் உற்சாகம் இன்னும் அதிகமாக ஊற்றெடுத்தது.

“வெறுமனே கண்டு பிடித்தது மட்டுமா? அவள் தந்தையோடு பேசி, திருமணத்தை நிச்சயம் செய்ய அவளது வீட்டுக்குப் போவதையும் உறுதிப்படுத்தி விட்டே வந்தேன். எப்படி என் திறமை! தயாராக இருங்கள் அம்மா. புதனன்று காலை ஒன்பது மணிக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறேன்! எப்படி என் வேலை?ஹா ஹா ஹா! “ என்று உரக்கவே நகைத்தான் ஜெயன்.

தேவகிக்கு உள்ளூரப் பெருமைதான். சாதித்து விட்டான் அல்லவா? ஆனால் சிறு வருத்தமும் இருந்தது. அன்றைக்கு வசதிப்படுமா, போவோமா என்று மகன் தன்னிடம் ஆலோசனை கேட்கவில்லையே!

அதை விடவும், அந்தப் பெண்ணிடமேனும் யாராவது, ஏதாவது கேட்டிருப்பார்களா? தேவகி அறிந்தவரையில் அந்தப் பெண் காஞ்சனியின் குடும்பம் சும்மாவே அவளுக்கு மதிப்புக் கொடுப்பது அல்ல!

அது மட்டுமல்ல. காஞ்சனிக்கு ஒரு நல்ல வாழ்வு அமைவதே, அவளுடைய சிற்றன்னைக்குப் பிடிக்குமோ, என்னவோ? சந்தேகம்தான்.

முன்னர் பார்த்த மாப்பிள்ளைக்கு அவளைக் காட்டிலும் இரு மடங்கு வயது என்று கேள்வி!

எனவே சுற்றி வளைத்து, “காஞ்னியின் வீட்டில் உனக்கு ஏதாவது நெருடல் ஏற்பட்டதா?” என்று ஜெயதேவனிடம் விசாரித்தாள் அன்னை.

புரியாமல் நோக்கினான் மகன். “நெருடலா? ஏனம்மா? நான் யார்? “சிவா” இன்டஸ்ட்ரீசுடைய எம்டி! எனக்கு நெருடல் ஏற்பட விடுவார்களா? திடுமெனப் போய்விட்டேன். அல்லது ரத்தினக் கம்பளம் விரித்துப் பூத்தூவி வரவேற்றிருப்பார்கள்! அந்தப் பெண்ணும் வீட்டில் இருந்து வரவேற்பில் பங்கெடுத் திருப்பாள்! “ என்று நகைத்தான் ஜெயதேவன்.

“என்னவோப்பா, இந்தப் பூத்தூவி வரவேற்பதில் எப்போதுமே எனக்கு உடன்பாடு கிடையாது. ஏதாவது பூவுக்குள் புழு பூச்சி இருந்து உடம்பில் ஏறிவிட்டால்? அத்தோடு அழகான மலர்கள் காலில் மிதி பட்டுக் கசங்குவதை நினைத்தாலே கஷ்டமாக இருக்கும். ஊகூம், அது சரியே கிடையாது!” என்று தன் அபிப்பிராயத்தை எடுத்துரைத்தாள் தாயார்.

“போங்கம்மா, மாலைக்குள் தானாக வாடிவிடும் பூ கசங்குவதை எல்லாம் யோசித்துக்கொண்டு இருக்கிறீர்களே! சரி. உங்கள்

திருப்திக்காக வேண்டுமானால், மாப்பிள்ளை அழைப்பின்போது பூத்தூவி வரவேற்கக் கூடாது என்று பெண் வீட்டாருக்கு உத்திரவு போட்டு விடலாம். போதுமா? இப்போது விஷயத்துக்கு வாருங்கள். புதன்கிழமை காலை ஒன்பது மணி. நினைவு இருக்கட்டும். இங்கிருந்து எட்டரை மணிக்குக் கிளம்பினோமானால் சரியாக இருக்கும். அங்கேயும் வேலை முடிந்து, நான் அலுவலுக்கும் கிளம்பி விடலாம். ஓகேம்மா? வேறு ஏதேனும் . .அதாவது இது போன்ற தருணங்களில் செய்ய வேண்டிய முறைமைகள் ஏதேனும் இருந்தால் அதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். பெரிய வேலை இருந்தால் குணாவிடம் சொல்லுங்கள். ரைட்? இப்போது எனக்குக் கொஞ்சம் காஃபி கொடுங்கள்மா." என்று தன் இணை பிரியாத லாப்டாப்பை எடுத்தான் ஜெயதேவன்.

"இதோம்மா!" என்று காஃபி தயாரிப்புக்காகச் சமையலறை நோக்கி நடந்த தேவகி அறை வாயிலில் நின்று மகனைத் திரும்பி பார்த்தாள்.

அவன் அதற்குள் லாப்டாப்பில் அவனது வேலையில் முழுகியிருந்தான்.

என்ன பையன் இவன்! இவனது வாழ்வில் அடுத்த ஐம்பது அறுபது ஆண்டு கால வாழ்வைப் பாதிக்கும் விஷயம்! அலுவலகத்தில் சிப்பந்திகளுக்கு அன்றாட வேலையைச் சொல்வது போலச் சொல்லிவிட்டு, அவனது வேலையிலும் மூழ்கிவிட்டானே!

உணர்ச்சிக் கலப்பே இல்லாமல், படு சாதாரணமாக இவனால் எப்படி இருக்க முடிகிறது?

அல்லது அவள்தான் இல்லாததை எல்லாம் நினைத்து மனதைக் குழப்பிக் கொள்கிறாளோ?

தலையை உலுக்கி விட்டு, மகன் கேட்ட காஃபியை, அவனுக்குப் பிடித்த விதமாகத் தயாரிப்பதற்காகச் சமையல் அறைக்குச் சென்றான் தேவகி.

சமையல்காரம்மாவே நன்றாகக் காஃபி போடுவாள்தான். ஆனால், மகனுக்குத் தன் கையால் செய்து கொடுக்க தேவகிக்கு ஆசை.

இதை அறிந்து வைத்திருந்த தங்கம்மாவும், தேவையான பொருட்களைப் பக்கத்தில் எடுத்து வைத்துவிட்டுப் புன்னகையோடு சற்றுத் தள்ளி நின்று வேடிக்கை பார்த்தாள். காஃபியைக் கலந்து மகனதோடு தனக்கும் சர்க்கரை குறைவாகப்போட்டு எடுத்துக்கொண்டு தங்கத்தைப் பார்த்து முறுவலித்தாள் எஜமானி.

“உன்னை மாதிரி கச்சிதமாகச் செய்ய வரவில்லை. சாரி, சிந்தியதைத் துடைத்துவிடு, தங்கம். . . “ என்று அவளிடம் புன்னகையோடு கூறிவிட்டு மகனிடம் சென்றாள்.

தாயிடம் காஃபி கேட்டதையே மறந்து பையன் வேலையில் மூழ்கி இருந்தான்.

அப்படியே விட்டுவிட்டால் காஃபி ஆறும்வரை கவனிக்கவே மாட்டான் என்பதை அறிந்திருந்த தேவகி சிறிது ஒலி எழும் விதமாகக் காஃபி கப்களை வைத்தாள்.

விழிகளை லேசாக உயர்த்தியவன், பானத்தைப் பார்த்ததும் வேலையை நிறுத்தி வைத்துவிட்டுக் காஃபி கப்பை எடுத்தான். ஒரு மிடறு விழுங்கிவிட்டு, “நீங்களே போட்டதுதானே? சுவையே சொல்லுகிறதே!” என்று பாராட்டினான்.

இது போன்ற சில வார்த்தைகள்தான், எல்லோரையும் இவன் விருப்பம் போல ஆட வைப்பதே. இப்படியே மனைவியிடமும் நடந்துகொண்டால் நன்றாக இருக்கும். நடப்பான் என்றே எதிர்பார்க்கலாம்.

என்ன ஒரு பிரச்சினை என்றால், தீவிமாக வேலை செய்யும்போது, இது பூலோகம் என்பதே ஜெயதேவனுக்கு மறந்து போகும்! தாய், மனைவி எல்லோரும் உலகத்தைச் சேர்ந்தவர்கள்தானே?

கூடச் சேர்ந்து கஷ்டப்பட்டதாலோ என்னவோ, தாய்க்குப் புரியும். இன்னும் . . வருகிறவளும் புரிந்து கொள்வாள்.

மௌனமாகத் தானும் காஃபியை ரசித்து அருந்தினாள்.

பாதிப் பானத்தை அருந்திய நிலையில் “அப்படியானால், நீ காஞ்சனியைப் பார்க்கவே இல்லை போல?” என்றாள் அன்னை.

“நேரில் பார்க்கவில்லை. ஆனால், அவளது படங்கள் சிலது தந்தார்கள். பார்க்கும்போது அடையாளம் கண்டுகொள்ளலாம். நீங்களும் பாருங்கள். நீங்கள் அவளை நேரில் பார்த்தும் ஐந்தாறு ஆண்டுகள் இருக்குமல்லவா?” என்று லாப்டாப் பையைத் திறந்து பக்கவாட்டுப் பையில் இருந்து சில வண்ணப் படங்களை எடுத்துக் கொடுத்தான்.

“செல்லுக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள். என்னவோ ஐடியாப் பிடிக்கவில்லை. எதுவுமே தெரியாத ஒருத்தியின் படத்தை செல்லில் வைத்துக்கொண்டு அலைவானேன்? பிரின்ட் போட்டதையே தரச் சொல்லிவிட்டேன். ஏதோ வேலைக்குப் போவதற்காக அனுப்ப என்று

எடுத்ததாம். ஆனால் அவளுக்கு, இனி எதற்கு வேலை?  . . "" என்று இலகுவாகக் கூறிச் சிரித்தான்.

"அப்படிச் சொல்ல முடியுமா, ஜெய்? அவளுக்கு அப்படி ஆசை இருக்கலாம்." என்று அன்னை சொன்னதை அவன் ஒப்புக் கொள்ளவில்லை.

"என்னம்மா நீங்கள்? கஷ்டப்பட்டு வேலை செய்யாமலே கைக்குப் பணம் வருமானால், அப்புறம் வேலைக்கு என்ன தேவை? அவளே மேலே முயற்சி செய்யவில்லை என்கிறார் அவளுடைய தகப்பனார். அவளுக்கு ஆசை என்றால் தந்தையிடமே வாதாடி இருப்பாள் அல்லவா?" என்று கேட்டான் ஜெயதேவன்.

சரிதானே என்று எண்ணும்போதே, பதினேழு வயதில் மகளின் மறுப்பைப் பொருட்படுத்தாமல், இளையதாரத்தின் விருப்பப்படி மகளின் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தவரிடம் என்னத்தை வாதாடுவது என்று தேவகிக்குத் தோன்றியது.

ஆனால் இன்று வரையும் காஞ்சனியின் மணம் நடக்கவில்லைதானே? கொஞ்சமேனும் அவரது உதவியும் இருக்கக் கூடும்! அல்லது, அன்றைய அவமானத்தின் பின், மகளை மதிக்கப் பழகியும் இருக்கலாம்.

இப்படி ஏதேதோ நினைத்து மனதை உளப்பிக்கொண்ட போதும், பெண்ணுக்குப் பூ வைக்கும் சடங்கிற்கான ஏற்பாடுகளைத் தேவகி நல்லபடியாகச் செய்துகொண்டே இருந்தாள்.

மெல்லிதாக ஒரு வைர செட், பட்டுச் சேலை,  அளவுச் சட்டை வாங்கித் தைத்தும் ஆயிற்று., சீர் கொண்டு செல்லத் தட்டுகள், பழங்கள் பலகாரங்கள் . . .

"சீக்கிரமே திருமணத்தை நடத்த இருப்பதால், இப்போது கூட்டம் வேண்டாம், அம்மா. கூப்பிட்டால் எல்லோருமே வருவார்கள். ஆனால், வருவது இன்று சேர்ந்துவிட்ட பணத்துக்காக மட்டும் என்று நிரூபித்தவர்கள். அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும் எனக்கு ஒன்றுதான். அத்தோடு எல்லோரும் கூட்டமாக வந்தால், நான் சீக்கிமாகக் கிளம்பி அலுவலுக்குச் செல்ல முடியாது. எனவே நாம் மட்டும் போதும்." என்று ஜெயன் சொல்லி விட்டதால், தேவகியும் யாரையும் கூப்பிடவில்லை.

அவன் கூறியது மெய்யும்தானே?

காலையில் விழித்துக் கிளம்ப வேண்டும் என்று படுக்கப் போன

தேவகியின் செல் அழகாக ஒலியெழுப்பியது. எடுத்துப் பார்த்தால் மகன்தான்.

“அம்மா . .” என்ற குரலிலும் ஒரு மாதிரியான கட்டுப்பாடு!

ஒரு வழியாக திருமணத்தின் முக்கியத்துவம் இவனுக்குப் புரிந்து விட்டிருக்க வேண்டும்.

புன்னகையோடு “என்னம்மா . .” என்று கேட்டவளை இடைமறித்து, “அம்மா, நாம் காலையில் அந்தக் காஞ்சனி வீட்டுக்குப் போகவில்லை. அவள் வீட்டில் இல்லையாம். ஏதோ நல்ல வேலை கிடைத்து பங்களூருவுக்குப் போய்விட்டாளாம்.” என்று மகன் தந்த தகவல், முகத்தில் அடித்த மாதிரி, தேவகிக்குமே மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.

# அத்தியாயம் -3

கிரீஸ் போட்ட இயந்திரம் சீராக ஓடுவது போல், மகனின் திருமணம் அவனது திட்டப் பிரகாரம் அச்சு பிசகாமல் அப்படியே நடப்பது நல்லதில்லை என்று தேவகி எண்ணியது உண்டுதான். அவனது "தான்" இன்னமும் வலுவடைந்துவிடும்!

திருமணத்துக்குக் காஞ்சனி சற்றுத் தயங்கி, பெண்கள் ஒன்றும் ஜெயதேவனின் மனைவியாகக் காத்துக் கிடக்க மாட்டார்கள் என்று அவனுக்கு உணர்த்தி அவனது மதிப்பைப் பெற்று, அதன் பிறகே அவனை மணக்க வேண்டும் என்று நினைத்திருந்தாள்.

அந்த அளவுக்குக் காஞ்சனியிடம் துணிச்சல் இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் அவளுக்கு இருந்தது. எப்படியும், அவனை நேரில் பார்த்துத் தன் விருப்பு வெறுப்புகளைப் பற்றிப் பேச விழைவாள் என்றும் எண்ணினாள்.

அது போல எதுவுமே இல்லாமல், மகன், காஞ்சனியுடைய தந்தையிடம் பேசித் திருமணத்தை முடிவு செய்துகொண்டு வந்ததே, அவளுக்குச் சற்று ஏமாற்றம்.

ஆனாலும் இயல்பிலே துணிச்சலுள்ள அந்தப் பெண், ஒரு மிதியடி போலக் கிடக்காமல், மகனின் உண்மையான அன்பையும் மதிப்பையும் நாளடைவில் பெற்றுவிடுவாள் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருக்கவே மகிழ்ச்சியுடனேயே திருமணத்துக்கான முதல் சடங்கின் ஏற்பாடுகளைக் கவனித்தாள்.

எல்லாவற்றையும் சரி பார்த்துக் கொணடிருந்தபோதுதான் மகனது தகவல் வந்தது.

ஆனால் தைரியமாக நின்று போராடாமல், காஞ்சனி ஒளிந்து ஓடியல்லவா போயிருக்கிறாள்! பதினேழு வயதில் வீராங்கனையாக இருந்த பெண் எப்படி இது போலக் கோழையானாள்?

நல்லவேளை! ஜெயனின் விருப்பப்படிக் கூட்டம் சேர்க்கவில்லை. எல்லோரும் வந்திருந்தால், அவர்களின் முன்னிலையில் கேவலமாகப் போயிருக்கும்! உள்ளூரக் கெக்கலி கொட்டியல்லவா சிரித்திருப்பார்கள்!

பொருளாதார ரீதியாக ஜெயதேவன் வளர்ந்துவிட்டதால் பேச்சும் சிரிப்புமாகப் பழகியபோதும், "தன்னெஞ்சறிய பொய்யற்க" அல்லவா? அவரவர் செய்த துரோகம் உள்ளூர உறுத்தத்தானே செய்யும்? தாய்க்கும்

மகனுக்கும் தங்கள் சுயரூபம் தெரியுமே என்கிற குன்றல் வேறு! அவர்கள் முன் எந்த வித இறக்கமும் நேராமல் நல்லவேளையாகக் கடவுள் காப்பாற்றினார்!

ஆனாலும், பதினேழு வயதில் உறுதியும் திடமுமாகப் பேசிய அந்தப் பெண்ணிடம், தேவகி இதை எதிர்பார்க்கவில்லை. ஏன் இப்படிச் செய்தாள்?

காஞ்சனிக்கும் யாரிடமும் இருந்து ஓடி ஒளிந்து ஓடி மறைந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் கிடையாது.

ஆனால் . . .”அஞ்சுவது அஞ்சாமை பேதமை”யோ என்ற சந்தேகம், இப்போது அவளுக்கு வந்திருந்தது.

“இத்தனை வருஷம் இந்த வீட்டிலே என்ன மாதிரி ஆட்டம் காட்டினாள் உங்கள் பொண்ணு, இப்போ பாருங்கள், குரங்கு மாதிரி அவளை ஆட்டி வைக்கக் குரங்காட்டி ஒருத்தன் வரப் போகிறான். அவன் கிட்டே எல்லாம் இங்கே மாதிரி இஷ்டம் போலக் குதிக்க முடியுமா? காலிலே சூடு வைத்துவிட மாட்டான்? என்ன திமிராக அன்றைக்குப் போலீசுக்குப் போனாள்? இன்றைக்கு முடியுமா? இங்கே போலீசே அவன் கையில்! அப்படிப் பட்டவனிடம் விரலைக்கூட அசைக்க முடியாமல் வகையாய் மாட்டப் போகிறாள்! நானும் யோசித்து யோசித்துப் பார்த்தேன், என்னடா, வயிற்றிலே பிறக்காவிட்டாலும், பெற்ற பொண்ணு மாதிரி நல்லதுதானே செய்ய நினைத்தோம், போலீஸ் வந்து எல்லோர் முன்பும் கேவலப்படும்படி ஆகிவிட்டதே என்று எவ்வளவு கலங்கி இருப்பேன்! இவளானால் தண்டனையே இல்லாமல், கோயில் மாடு மாதிரிச் சும்மா சுற்றுகிறாளே என்று எத்தனை நாள் தூக்கம் வராமல் தவித்திருப்பேன்! இப்போது பாருங்கள், உங்கள் செல்லப் பெண்ணுக்கு வட்டியும் முதலுமாகக் கடவுள் சரியாகத் தண்டனை கொடுத்து விட்டார்!” என்று நீளமாகச் சிற்றன்னை வசனம் பேசியதால் வந்த சந்தேகம்.

மற்றபடிக் குரங்கு, கோயில் மாடு என்று உவமை பேசியதெல்லாம் தன்னைக் குறிப்பதே என்பதில் அவளுக்கு அணுவளவும் ஐயமே கிடையாது!

அவ்வப்போது இந்த மாதிரி ஜாடைமாடைப் பேச்சுகள் அவளுக்குப் பழக்கம்தான். பழகி விட்டதாலோ என்னவோ, அவள் அதைப் பொருட்படுத்துவதே கிடையாது.

ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், அந்தக் குரங்காட்டி!

தந்தை, தனக்குத் திருமணம் பேசுகிறார் எனபது அவளுக்குத் தெரியும். அதுவும், இப்போது ரொம்பப் பெரிய இடத்திலிருந்து கேட்டு வந்திருக்கிறார்கள் என்பதும், அவளது காதுகளில் விழுந்திருந்தது.

இவ்வளவு பெரிய ஆட்கள் நம்மைத் தேடி ஏன் வரவேண்டும் என்று ஈசுவரி ஆத்திரத்தை அடக்க முயன்று தோற்ற குரலில் கேட்டதும் அதற்குப் பையனுடைய தாயார் சின்ன வயதில் காஞ்சனியைக் கண்டு பிடித்துப் போயிருந்ததாக தந்தை காரணம் கூறியதும் எல்லாமே அந்த ஃப்ளாட் வாசத்தின் பயனாகத் தவிர்க்க முடியாமல் அவள் கேட்க நேர்ந்த விவரம்!

இதே ரீதியில் சித்தி பேசப் பேச, மனைவி முன் எப்போதும் வாயை மூடிக் கொண்டிருக்கும் சிதம்பரமே பொறுமை இழந்து, “ஏன் இப்படிப் பேசுகிறாய், ஈசு? பெரிய இடம் என்றால் பெண்ணை நன்றாக வைத்திருக்க மாட்டார்கள் என்று ஏன் நினைக்க வேண்டும்? அவர்கள் நல்ல குணமாகவும் இருக்கலாமே . . .” என்று ஏதோ சொல்லி முடிக்குமுன் ஈசுவரி சீறிக்கொண்டு குறுக்கே பேசியதும் அவளுக்கு நன்றாகவே கேட்டது!

கேட்க வேண்டும் என்றே சொல்லப்பட்டதோ?

“அது எப்படிங்க அவன் நல்லவனாக இருப்பான்? எப்படி இருப்பான் என்று கேட்கிறேன்! நல்லவன் இல்லை, இல்லை என்றுதான் எல்லாப் பத்திரிகைகளிலும் காரண காரியத்தோடு பிட்டுப் பிட்டு வைத்தார்களே! எண்ணி இருபது பேர்! குஞ்சும் குளுவானுமாக ஒவ்வொரு குடும்பத்திலும் ஐந்தாறு பேராய் மொத்தம் நூறு பேருக்கும் மேலே! அத்தனை பேரையும் சாப்பாட்டுக்கே வழியில்லாமல், அதோகதி ஆகும்படி நடுத் தெருவில் விட்டுவிட்டானாமே! இவன் ஏதோ பொய்க்குற்றம் சாட்டி விரட்டியதால் வேறு வேலை எதுவும் கிடைக்காமல் பிச்சை எடுப்பதாக . . . மூன்று நாலு மாதம் முன்னால் பத்திரிகையிலே வெளுத்து வாங்கினார்களே! அப்போது கூடக் கொஞ்சமாவது அசைந்து கொடுத்தானா? ஒரு நல்லவனால், அத்தனை பேரின் எதிர்காலம் நாசமாகுமே என்கிற பரிதாபமே இல்லாமல் அப்படித் தூக்கி எறிய முடியுமா? மனிதத் தன்மை இருக்கிறவன் செய்வானா? இப்படிப்பட்ட இரக்கமே இல்லாத அரக்கன், உங்கள் பெண்ணை மட்டும் பூவாலே ஒற்றி ஒற்றி எடுப்பானாக்கும்? ஆனால் கடவுள் நின்று கொடுப்பார் என்பது சத்தியமான வாக்குங்க. அன்றைக்கு அத்தனை பேர் முன்னாலே போலீசைக் கூப்பிட்டு, நம்மைத் தலை குனிய வைத்தாளே! அதற்குப் பதிலடி கிடைக்க வேண்டாம்? உங்கள் பெண்ணின் திமிர் அவனால்தான் அடங்கப் போகிறது. சீக்கிரமே

அவளோட வாலை ஒட்ட நறுக்கிவிடுவான் பாருங்கள்!”

காஞ்சனியின் திமிர் அடங்கப் போவதில், சித்திக்கு இவ்வளவு சந்தோஷமா? ஆனால், அது மாற்றாந்தாய் மனோபாவம் என்று விட்டுவிடலாம்.

ஆனால், மனைவியின் வாலை நறுக்க விரும்பும் அந்த மனிதனுக்கு இந்தப் பரந்த உலகத்தில் வேறு பெண் யாருமேவா கிடைக்கவில்லை?

அதுவும், போலீசையே தன் கையில் வைத்திருக்கும் குரங்காட்டி! அவளை ஆட்டி வைக்க அல்லவா, அவன் வரப் போகிறானாம்?

யாரவன் என்று கேட்டுவிடத்தான் காஞ்சனிக்கு ஆசை!

ஆனால் சித்தியிடமிருந்து நேர்ப் பதிலாக எதுவும் வராது! இன்னமும் ஊர் உலகம் எல்லாவற்றையும் சுற்றுவாளே தவிர, இன்னது இப்படி என்று தேவையான விவரம் சொல்லவே மாட்டாள். ஒரு சாதாரணப் பதில் கூட, மூத்தாள் பெண்ணுக்கு இலகுவாகக் கிடைத்துவிடக் கூடாது என்கிற நல்ல எண்ணம்! காஞ்சனிக்கு அனுபவப் பாடம்!

அத்தோடு சிற்றன்னையின் பேச்சை முழுதாக நம்பவும் காஞ்சனிக்குப் பிடிக்கவில்லை.

கிட்டத்தட்டப் பதினேழு ஆண்டுகளாக அனுபவிக்கும் பாலைவன வாழ்க்கை போதும் என்று எண்ணிக் கடவுளே ஓர் அன்பான சூழலை அவளுக்கு அமைத்துத் தர நினைத்திருந்தால்? அப்படியும் இருக்கலாம்தானே? காஞ்சனிக்கு நல்ல வாழ்வு அமைவதா என்ற பொச்சரிப்பில் சித்தி பேசியிருந்தால்?

சித்தி அறியாமல் வீட்டில் தந்தையிடம் மனம் விட்டுப் பேச முடியாது.

என்றாலும், மற்றவர் அறியாமல் பெற்றவரோடு பேச, காஞ்சனிக்கு இன்னொரு வழி இருந்தது. அது அவளுடைய தோழி சுந்தரி வீடு. அவளோடு கூடப் படித்தவள்.

சேர்ந்து பாடம் படிக்க, ரெக்கார்டு நோட்டு தயார் பண்ண என்று அவ்வப்போது அவளது வீட்டுக்குச் சற்று சீக்கிரமாகப் போய்விட்டு, அங்கிருந்தே தந்தைக்கு ஃபோன் பண்ணிப் பேசுவாள்.

சுந்தரியுடைய பெற்றோர் பாட்டிகள் யாருமே அதைத் தவறாக எண்ணுவது கிடையாது. புத்திசாலி என்றாலும் வகுப்பில் சற்றுப் பராக்குப் பார்க்கும் வழக்கம் உள்ள சுந்தரி, எந்த வகுப்பிலும் தங்காமல்,

ஓரளவு நல்ல மதிப்பெண்களோடு படித்து வந்தது, காஞ்சனியால்தான் என்பதை அந்த வீட்டினர் உணர்ந்திருந்ததால், எப்போதும் அவளைப் பிரியமாகவே வரவேற்பார்கள்.

சும்மாவும் தாயில்லாப் பெண்., சிற்றன்னையிடம் கஷ்டப்படுகிறாள் என்ற பரிவும் உண்டு.

படிப்பு முடிந்துவிட்டதால், பழைய காரணங்களை இப்போது சொல்ல முடியாது என்றாலும், சுந்தரிக்கு வேலைக்கு விண்ணப்பம் ஒன்று நிரப்பிக் கொடுப்பதாகக் காரணம் சொல்லிவிட்டுச் சற்று முன்னதாகக் கிளம்பிச் சென்று, தோழியின் வீட்டுக்கு அருகே இருந்த பூங்காவில் காஞ்சனி காத்திருந்தாள்.

எதிர்பார்த்தே தந்தையும் அலுவலகத்துக்குச் செல்லுமுன் அங்கே சென்று மகளைச் சந்தித்தார். மகள் விவரம் கேட்டபோது, எதையும் மறைக்காமல் தெரிவித்தார்.

“இதற்கு மேல் ஃபேஸ்புக்கில் நீயே பார்த்துக் கொள், காஞ்சிம்மா. என் மனதில் உன் பக்கத்தில் நிறுத்திப் பார்க்கப் பொருத்தமாகத் தோன்றியது. உன் அம்மா வழிப் பாட்டியுடைய சினேகிதியுடைய பேரன்! என்னவோம்மா, மாப்பிள்ளை நேராகவே வந்து கேட்டபோது, எனக்கு மறுக்கவே தோன்றவில்லை. அந்த நேரம், உன் சித்தியைக் கூட மறந்துவிட்டேன் என்றால் பாரேன்! திருமணம் பற்றி உன்னிடம், உன் சித்தியிடம் கலந்து பேச வேண்டும் என்ற எண்ணமே வரவில்லை. உடனே சரி என்றுவிட்டேன். உறுதி செய்ய வரும்போது அவரைப் பார்ப்பாயல்லவா? அப்போது உனக்கே புரியும்!” என்று சந்தோஷமாகவே சொன்னார்.

ஏதோ பெரிய சாதனை புரிந்துவிட்ட மகிழ்ச்சி! அவர் வெளியே சொல்லாதது ஒன்று உண்டு.

முதல் மனைவியுடைய தாயார் அவரைக் கூப்பிட்டு, “இப்படி விசாரித்து, பெண் கேட்க வருகிறார்கள். பையன் கெட்டிக்காரன். தாயார் நல்லவள். சாது. அவள் சொல்லியே ஜெயதேவன் என்னிடம் விவரம் கேட்டு வந்தான். வேறே பிக்கல் பிடுங்கல் கிடையாது. இவன் அமைந்தால் காஞ்சனிக்கு அதிருஷ்டம்! விஷயம் கசிந்து நாலுபேர் கெடுக்க முயற்சிக்கு முன் சம்மதம் என்று முடித்தே விடுங்கள்.” என்று கூறியிருந்தாள்.

யார் பெயரையும் குறிப்பிடாவிட்டாலும், கெடுக்க முயற்சி செய்யும் நாலு பேரில் ஈசுவரிதான் முதன்மை என்ற குறிப்பை அவரும் உணர்ந்துகொண்டார். அதனாலேயே ஜெயதேவனிடம் உடனே ஒத்துக்

கொள்ளவும் செய்தார்.

வாக்குக் கொடுத்தாயிற்று என்றால், ஈசுவரி என்ன குதித்தாலும், கொடுத்த வாக்கை மாற்றச் சொல்ல முடியாது அல்லவா?

அத்தோடு, மற்ற பிள்ளைகளின் படிப்பு, வேலை வாய்ப்பு போன்றவற்றில் ஜெயதேவனின் உதவியை உரிமையோடு கோரிப் பெறலாம் என்று ஆசை காட்டவே, என்னதான் புலம்பிக் கரித்துக் கொட்டினாலும், ஈசுவரியும் திருமணத்தை நிறுத்தச் சொல்லவில்லை.

மகள் மறுக்கக் கூடும் என்ற எண்ணமே அவருக்கு வரவில்லை. மாப்பிள்ளையைப் பார்த்ததுமே தலை சுற்றி விழப் போகிறாள் என்றும் அவருக்கு நிச்சயம்!

ஃபேஸ்புக் படங்களைப் பார்த்தபோது, சிதம்பரத்தின் பேச்சு மகளுக்கும் புரிந்தது.

குறுகுறுவென்ற ஜெயதேவனின் பார்வை யாரையும் தன் வசப் படுத்தக் கூடியதே. அந்தப் பார்வையில் அப்பா மயங்கிவிட்டார் என்று புரிந்தது.

ஆனால் அவருடைய மகள் அவ்வளவு எளிதாகத் தன்னை இழக்கக் கூடியவள் அல்லவே!

ஆராய்ச்சிக் கண்ணோடு பார்க்கும்போது, மேலுதட்டின் அழுத்தத்தில் பிடிவாதமும், தலை தூக்கி நின்ற தோற்றத்தில் கர்வமும் கூட அவளுக்குத் தென்பட்டன.

சித்தி அடிக்கடி தன்னைப் பிடிவாதக்காரி, திமிர்ப் பிடித்தவள் என்று கூறுவது அவளுக்கு நினைவு வந்தது.

எதிர்த் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்ப்பதுதானே பொது விதி? ஒரே வகை விலகியல்லவா போகும்!

சிறு குழப்பத்துடனேயே தொடர்ந்து ஜெயதேவனைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தபோது, சிற்றன்னை சொன்னதும் உண்மையே என்று காஞ்சனி கண்டாள்.

தந்தை இறந்தபோது அவன் கல்லூரி மாணவன். அத்தோடு கல்வியைத் தூக்கி எறிந்துவிட்டுத் தொழிலைப் பார்க்கத் தொடங்கினான். கொண்டதே கோலமாக அவன் எடுத்த அதிரடி முடிவுகள் குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்த கதையாக வெற்றிகளை அள்ளிக் குவிக்க, விரைவிலேயே தொழில் வளர்ந்து செல்வத்தைப் பெருக்கித் தந்தன.

அந்த வளர்ச்சிக்கு இடையூறு செய்தவர்கள், செய்யக் கூடியவர்கள் என்று அவன் கருதியவர்கள் அத்தனை பேரையும் பழம் செருப்பாகத் தூக்கி எறிந்தான்.

அது கூடவே உழைத்த உறவினர் என்றாலும் சரி, அந்த இருபது பேர் போல அடிமட்டத் தொழிலாளர்கள் என்றாலும் சரி, ஜெயதேவன் லட்சியமே பண்ணவில்லை. தயவு தாட்சணியமும் பார்க்கவில்லை.

அவன் எடுத்ததுதான் முடிவு. மற்றவர்கள் அதற்கு அடிபணிய வேண்டியவர்கள் அவ்வளவே. என்ன ஒன்று, சட்டத்தின் பிடியில் சிக்காதபடியாகக் கெட்டிக்காரத்தனமாக செயல்பட்டான். வெற்றியும் பெற்றான்.

அவன் ஒட்டு மொத்தமாக வெளியேற்றிய  இருபது பேருடைய குடும்பங்களைப் பற்றியும் விவரங்கள் நிறைய இருந்தன. கல்லும் கரையும் கண்ணீர்க் கதைகள்!

ஆனால் ஜெயதேவன் இளகவில்லை! கல்லை விடக் கடினமானவனாக இருக்க வேண்டும்!

இளகாதது மட்டுமல்ல. “அவரவர் குடும்பம் அவரவர் பொறுப்பு., அது பற்றிக் கவலைப்பட்டிருக்க வேண்டியவர்களும் அவர்களே! எனவே, அவர்களையே கேட்டுக் கொள்ளுங்கள்.” என்று, ஒரு பத்திரிகை நிருபரின் கேள்விக்கு மிகவும் அலட்சியமாகப் பதில் வேறு சொல்லியிருக்கிறான்!

இவனை மணப்பதானால் . . .

வாணலிக்குத் தப்பி அடுப்பு நெருப்பில் விழும் நிலைதான் காஞ்சனிக்கு நேரும்?

ஏனெனில் இப்போதைய அவளது நிலை வாணலியில் வறுபடுவது போன்றதுதான்!

ஆறு வயதில் தாயார் மறைந்துவிட, மகளைப் பார்த்துக்கொள்ள என்கிற சாக்கில், அவளுடைய தந்தை சிதம்பரம் விரைவிலேயே ஈசுவரியை மணமுடித்து அந்த வீட்டுக்குக் கூட்டி வந்தார். அன்றிலிருந்து காஞ்சனியின் வாழ்வு ஒரு தொடர் போராட்டம் ஆயிற்று.

இயல்பில் காஞ்சனி உற்சாகமும் துடிப்பும் உடைய பெண். அந்தத் துடிப்பை அடக்கி ஒடுக்குவதே ஈசுவரியின் தலையாய கடமை ஆயிற்று.

முதல் படியாக சிதம்பரத்தைத் தனக்குத் தலையாட்டும் பொம்மையாக்கினாள்.

நல்லவேளையாகக் காஞ்சனியிடம் கை நீட்டும் துணிவு அவளுக்கு வரவில்லை. முதலில் காஞ்சனியுடைய தந்தை வழிப் பாட்டிப் பலகாலம் உயிரோடு இருந்தது, அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது, மகள் வலித்து அழுவதைப் பார்த்து, முதல் மனைவியின் நினைவு வந்து, தன் தலையாட்டிக் கணவர் மாறிவிடுவாரோ என்ற அச்சமாகவும் இருக்கலாம்.

எப்படியோ அடி உதையிலிருந்து காஞ்சனி தப்பினாள்.

ஆனால் உண்ணும் உணவில் இருந்து, உடுக்கும் உடை வரை ஏதோ ஒரு உள்குத்து விழுந்துகொண்டே இருக்கும்.

பிரியமான சேப்பங்கிழங்கு வறுவலை வாயில் வைக்கும்போது பிடுங்கப் படும். "உனக்கு இது ஒத்துக் கொள்ளாது, பாப்பா. அன்றைக்கு இதைத் தின்றுவிட்டு வயிறு சரியில்லாமல் போய்விட்டதே. இது உனக்கு அலர்ஜியோ என்று தோன்றுகிறது. பேசாமல் இன்று ஊறுகாய் வைத்துச் சாப்பிடு என்று வயிற்றில் அடிப்பாள்.

உடையிலும் அப்படித்தான். காஞ்சனிக்குப் பிடித்த வண்ணங்கள் அவளுக்கு நன்றாக இல்லை என்று பறை சாற்றப்பட்டது.

முதலில் செய்வது அறியாமல் அழுத மகள் விரைவிலேயே வழி கண்டுபிடித்தாள்.

பிடித்த பதார்த்தத்தையெல்லாம் பிடிக்காத மாதிரி மறுத்துப் பாவனை செய்தாள். ஓரளவு பலன் கிடைத்தது.

தங்கை தம்பி வந்த பிறகு, அவர்களுக்குப் பிடித்தமான பதார்த்தங்களைத் தன் தட்டில் இருந்தே எடுத்து அவர்களுக்குக் கொடுத்தாள். குரங்கு தொப்பியை வீசிய கதையாக, அவளுக்குப் பிடித்தவை, அவளது தட்டுக்கும் வந்தன.

உடை தேர்ந்தெடுப்பில், பிடித்த வண்ணங்கள், டிசைன்களை அவள் ஒதுக்க ஒதுக்க, அவைகளே அவளுக்கு வந்து சேர்ந்தன.

படிப்பு விஷயத்திலும், அவளுக்காகக் காசு செலவு செய்யச் சித்திக்கு மனமில்லை என்று புரியவும், முயன்று படித்து, படிப்புச் செலவை உபகாரச் சம்பளத்திலேயே முடித்துக் கொண்டாள்.

காசு கேட்கவில்லை என்றதும், பெண் என்ன படிக்கிறாள் என்பதைக் கூட ஈசுவரி கேட்டதில்லை. மேல் படிப்பு வரை முடித்து விட்டிருந்த காஞ்சனி அடுத்ததாக வேலைக்கு முயற்சி செய்யலானாள்.

அதுவும் வெளியூர் வேலைக்கு.

உள்ளூரிலேயே வேலை என்றால், கஷ்டப்பட்டு உழைத்த காசைச் சித்தியிடம் கொடுத்துவிட்டு, ஐந்துக்கும் பத்துக்கும் அவளிடம் மன்றாடுகிற நிலை ஆகிவிடும்.

எப்படியாவது சித்தி அது போன்ற நிலையை உருவாக்கி விடுவாள் "என்னைப் போல நீயும் சம்பளப் பணத்தைச் சித்தியிடம் கொடுத்துவிட்டுச் அவ்வப்போது தேவையான பணத்தை அவளிடம் கேட்டு வாங்கிக்கொள்," என்று தந்தை நேரடியாகச் சொல்லிவிட்டால், அவளால் மறுக்க முடியாது.

சித்தியிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு, அவளது உழைப்பில் வந்த சொந்தப் பணத்துக்காகப் பெரியவளிடம் பிச்சை கேட்பதை விடக் கேவலம் வேறு எதுவும் இல்லை என்பது காஞ்சனியின் கருத்து.

அத்தோடு, தந்தை அந்த வார்த்தை சொல்ல மாட்டார் என்று உத்திரவாதமும் கிடையாது. மனைவி சுற்றி வளைத்துப் பேசும்போது, மறுக்க மாட்டாமல் கடைசியாகத் தலையாட்டி விடுவார்.

பதினேழுக்கும் முப்பத்துஐந்துக்கும் பொருத்தம் என்றதற்கே தலையாட்டியவர் ஆயிற்றே! வேறு எதை மறுக்கக் கூடும்?

படிப்புக்கான செலவையே செய்யப் பிடிக்காத சிற்றன்னை, இன்றைய கால கட்டத்தில், அவர்களது சமூகத்தில் ஒரு பெண்ணின் திருமணத்துக்கு ஆகக் கூடிய செலவை ஒருபோதும் அவளுக்காகச் செய்யப் போவதில்லை என்பது காஞ்சனிக்கு நிச்சயம்!

பதினேழு வயதில் கிடைத்த முதல் அனுபவமே அதை வலியுறுத்துவதாகத்தானே அமைந்தது! எனவே அவள் திருமணம் பற்றிய எண்ணங்களையே மனதிலிருந்து அடியோடு ஒதுக்கி விட்டிருந்தாள்.

முடிந்தவரை படித்துத் தன் காலில் நிற்க வேண்டும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். ஒரு தவம் மாதிரி படிப்பை எண்ணிச் செயல்பட்டாள். வெற்றியும் கிடைத்தது.

அடுத்தது, தன் முயற்சியாய் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது.

அப்ப் . . புறமாகவும், அவளைப் புரிந்து அவளது விருப்பங்களை மதித்துப் போற்றுகிறவனைத்தான் மணக்க வேண்டும் என்ற எண்ணமும் அவளுள் இருந்தது.

எனவே படிப்பு முடிந்ததும், வெளியூரில் வேலை தேடும்

முயற்சியை அவளுடைய தோழி சுந்தரியின் உதவியோடு செய்து கொண்டிருந்தாள். ரகசியமாகத்தான்.

வேலை பற்றிய நடவடிக்கை எதையும் அவள் தன் வீடறியச் செய்தது இல்லை. அவளை நோகடிப்பதற்காகவே சித்தி ஏதாவது ஒரு விதத்தில் கெடுத்து வைப்பாள்.

இந்தச் சூழ்நிலையில், காஞ்சனிக்கு வாழ்க்கை ஒரு முக்கியமான கட்டத்திற்கு வந்திருந்தது. பெருமளவு அவள் மிகவும் ஆசைப்பட்ட விதமாக.

பங்களூருவில் ஒரு வேலை கிட்டத்தட்ட கிடைத்துவிட்ட நிலை. அங்கே போய், அந்த வேலையில் சேர்ந்துவிட்டால், முதல் சுகமாக, இந்த இடிசோறு உண்ணும் நிலை மாறிவிடும். எந்த வினாடி என்ன தாக்குதல் வருமோ என்று எப்போதும் மன இறுக்கத்துடன் காத்திருக்கத் தேவையில்லை.

சுந்தரியும் அவளோடு சேர்ந்தே வெளியூரிலேயே வேலை தேடினாள்.

“நீ ஜாலியாக வெளியூரில் சுற்றுவாய்., நான் மட்டும் மொட்டு மொட்டென்று எங்கள் வீட்டில் தன்னந்தனியாக உட்கார்ந்து கொண்டிருப்பேனா, கஞ்சித் தொட்டி?” என்று கேலி போல அவள் கூறியபோதும், தெரியாத ஊருக்குத் தோழியைத் தன்னந்தனியே அனுப்ப மனமின்றியே சுந்தரி தானும் கூட வர விரும்புகிறாள் என்பதை உணர்ந்து காஞ்சனியின் கண்களில் நீர் திரையிடும்.

சிறு வயதில் இருந்து காஞ்சனியுடைய தோழி சுந்தரி. ஒரே வகுப்பு. அடுத்த தெருவில் வீடு. அவளது பழக்கத்தைக் கூட ஈசுவரி உடைக்க முயற்சி செய்திருக்கிறாள். ஆனால், சிறிய தாயை அறிந்திருந்த காஞ்சனியின் கெட்டிக்காரத்தனமும், கூடவே தோழிகள் இருவரின் பாசமும் அவர்களது நட்பைக் காப்பாற்றி வந்திருக்கிறது.

இப்போதும் தோழியை உணர்ந்து, கண்ணீரால் பளபளத்த விழிகளால் மற்றவளை நோக்கி, “ஹூம், செய்ப்பா, செய்! வேண்டாம் என்றால் விடவா போகிறாய்? வெளியூர் போனால் விருப்பம் போலச் சுதந்திரமாக இருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால், என் ஜாதகத்தில் சுதந்திரத்துக்கு வாய்ப்பே இல்லை என்றால் என்ன செய்வது? கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! “ என்று சோகம் போலச் சொல்லிச் சிரித்தாள் காஞ்சனி.

தேடல் முயற்சி முடிந்து, இந்த இரு தோழியரோடு இன்னும் சிலரும்

நேர்காணல்  முடிந்து வேலைக்காகத் தேர்வு செய்யப் பட்டிருந்தார்கள். இன்ன தேதியில் பங்களூருவுக்கு வந்து பணிக்கான பயிற்சியைத் தொடங்குமாறு அதிகார பூர்வமான பணி நியமன உத்திரவும் கைக்கு வந்து சேர்ந்திருந்தது.

இந்த நிலையில்தான் சிதம்பரத்தை நாடி ஜெயதேவன் வந்து, அவரோடு பேசித் திருமணத்தை அதிரடியாக உறுதி செய்துகொண்டு போனது!

சிதம்பரம் சொன்ன விவரங்களைக் கேட்டதும், “உன் குண்டுச் சித்தியிடம் இருந்து விடுதலைதானேப்பா, உனக்கு முக்கியம்? பேசாமல் கல்யாணத்தையே பண்ணிக் கொள்ளேன். நல்ல மாமியார், குடும்பத்தில் வேறு பிரச்சினை கிடையாது, கூடுதலாக நல்ல வசதியும் இருக்கிறது என்றால் அதை விடுவானேன்? “ என்றாள் சுந்தரி.

அவளைப் பொறுத்தவரையில், காஞ்சனியைப் போல வெளியூரில் வேலை தேடிக்கொண்டு சொந்த வீட்டில் இருந்து தப்பி ஓட வேண்டிய அவசியம் கிடையாது. தேடினால், உள்ளூரிலும் வேலை கிடைக்கத்தான் செய்யும்.

இரண்டு பேருக்குமே கிடைக்கும்! ஆனால், காஞ்சனியின் விடுதலைக்காக மட்டுமேதான் இந்த வெளியூர் வேலை! வெளி மாநிலத்தில்.  புது இடத்துக்குப் போய், வேலையோடு பேசும் மொழியும் சுற்றுச் சூழலும் பழகி  . . . அந்த அவதியெல்லாம் படாமலே அவளுடைய சித்தியிடம் இருந்து காஞ்சனிக்கு விடுதலை கிடைக்குமானால், அதை விடுவானேன் என்பது சுந்தரியின் கருத்து.

தோழி நல்லபடியாகத் திருமணம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழட்டுமே என்று அவள் எண்ணினாள்.

ஆனால், லாப்டாப் முன்னே அமர்ந்து, காஞ்சனி காட்டிய விவரங்களைப் பார்த்த பின், அந்த அபிப்பிராயத்தை அவள் உடனே மாற்றிக் கொண்டாள்.

“ஓகேப்பா. நாம் போட்ட ஒரே பிளான்., ஒப்பற்ற பிளான்ப்பா. அதை மாற்ற வேண்டாம்.” என்றாள் முடிவாக.

# அத்தியாயம் -4

காஞ்சனியின் வாழ்க்கை முறைக்கு நேர் மாறானது சுந்தரியின் குடும்ப அமைப்பு.

அவர்கள் குடும்பத்திற்கு அவள் ஒரே மகள். அதிகப் பிரியம்தான் என்றாலும், அதற்காக உருகிக்கொண்டு நிற்க மாட்டார்கள். முக்கியமாக அப்படி நிற்பதற்கு, அவளுடைய பெற்றோருக்கு அவகாசம் கிடையாது.

ஓரொரு விதமாக உறுப்புகள் பலவீனப்பட்டுப் பெரும்பாலும் படுக்கையே கதியென்று ஆகிவிட்ட தாய்மார்கள், சுந்தரியுடைய தந்தை வழி, தாய்வழிப் பாட்டிகள். அவர்கள் இருவரையும் கணவனும் மனைவியுமாகப் பேணிப் பராமரித்து  வந்தார்கள்.

எனவே ஒரு நாள் கூட, இருவருமாக எங்கும் செல்வது இயலாது.

விருப்பப்பட்டே தேர்ந்தெடுத்த வாழ்க்கை என்பதால், அதற்காக இருவரும் வருத்தப்படுவதும் கிடையாது.

ஆனால் மகளை மட்டும் வீட்டிலேயே அடைந்து கிடக்க விடாமல் விடுமுறைக்கு அங்கே இங்கே சுற்றுலா அனுப்புவார்கள். அதனாலேயே மும்பை, பங்களூரு போன்ற நகரங்கள் ஓரளவு அவளுக்குப் பரிச்சயமானவையாக இருந்தன.

இப்போது வெளியூர் வேலைக்கும் அங்கே யாரும் தடை சொல்லவில்லை.

சொல்லப் போனால், மூத்த இரண்டு தலைமுறையினருமே அதற்கு ஆதரவாகவே இருந்தார்கள்.

“தினமும் வீட்டில் எங்களது வயதான முகத்தையே பார்த்துக் கொண்டிராமல், உன்னையொத்த வயதினரோடு பேசிப் பழகுவது, உனக்கு நல்லது, சுந்தும்மா. அதனால் சந்தோஷமாகப் போய்வர் என்று, பாட்டிகள் ஆசியே தந்தார்கள்.

காஞ்சனியும் கூடப் போகிறாள் என்பதில் அவர்களுக்கு மேலும் மகிழ்ச்சியே!

“அவளுக்கு இங்கே தினமும் பாடுதானே? அங்கே போய் நிம்மதியாக இருக்கட்டுமே!” என்றார்கள். பேத்திக்குத் துணையாகவும் இருப்பாள் அல்லவா?

தனிவழியே பயணம் போக வேண்டாம் என்பார்கள். ஒருவருக்கு

இருவராகச் செல்வது எப்போதுமே நல்லது.

எனவே அந்த வீட்டில் ஒளிவு மறைவு தேவை இல்லாமல் போய்விட, வீட்டினரின் ஆதரவோடு, சுந்தரியும் காஞ்சனியோடு சேர்ந்து கிளம்பினாள்.

எந்த வகையிலும் யாரும் தங்கள் மீது தவறான பழி சுமத்தும் விதமான எதையும் செய்யக் கூடாது என்று தோழியர் இருவருமே உறுதி கொண்டிருந்தனர்.

சுந்தரியுடைய இரு பக்கத்து வீட்டினர், எதிர் அடுக்கு மாடி வீடுகளில் வசிப்போரிடம் இருவருமாகவே சென்று வேலை பற்றி விவரம் கூறி விடை பெற்றனர்.

நாளைக்கு ஏதேனும் தவறான பேச்சு எழும்பினால் . .எழுப்பப்பட்டால் இவர்கள் தங்கள் பக்கம் சாட்சி சொல்வார்கள் அல்லவா? முக்கியமாகக் காஞ்சனிக்கு ஆதரவாக!

பங்களூருவுக்கு ரயில் டிக்கெட் கிடைக்காததால், சுந்தரியுடைய தந்தை தேசிகன், தோழியரோடு கூடச் சென்று பஸ் ஏறிவிட்டார்.

காஞ்சனியின் விருப்பப்படி, வீட்டுக்குத் திரும்பிச் சென்று சற்று நேரம் கழித்து, சிதம்பரத்தை மொபைலில் தொடர்பு கொண்டு, விவரத்தைச் சொன்னார்.

முதலில் சிதம்பரம் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தாலும், காஞ்சனியின் காரணம் பற்றி மற்றவர் விளக்கியதும் அமைதியாகிவிட்டார்.

தன் வீட்டில் மூத்த மகளின் நிலைமை, பெற்ற அவர் அறிந்ததுதானே?

அம்மா மாதிரி என்று வந்த சித்தி தேளாகக் கொட்டிக் கொண்டிருந்தாள்.

அப்படி இருக்க, தெரியாத இன்னொரு தளைக்குள் சிக்க அவள் விரும்பாதது ஏன் என்றும் அவரால் இப்போது உணர முடிந்தது.

மகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைந்திருக்குமே என்று அவரது மனம் அடித்துக் கொள்ளத்தான் செய்தது.

ஆயினும், மகள் சுதந்திர வாழ்வை விரும்யிருந்தால், அவர் அமைக்க விரும்பிய வாழ்வும் பொன்னாலான கூண்டாகத்தானே காஞ்சனிக்கு இருந்திருக்கும்!

இருக்கட்டும். மகள் விரும்பிய வாழ்வை இப்போதேனும்

நிம்மதியாக வாழட்டும்.

சுந்தரியும் சேர்ந்து சென்றிருக்கிறாள் என்பதே அவருக்கு ஆறுதலாகத்தான் இருந்தது.

ஆனால், இதில் இன்னொரு பெரிய பிரச்சினை இருக்கிறதே!

அவர் ஜெயதேவனுக்கு விஷயத்தைத் தெரிவித்தாக வேண்டும்.

மகள் செய்த பிழைக்காக அவனிடம் மன்னிப்பும் கோர வேண்டும்.

என்னை மறுப்பதா? இவளை உண்டு இல்லை என்று ஆக்கி விடுகிறேன். இவளை நிம்மதியாக வாழ விட மாட்டேன் என்று எகிறுவதே பெரும்பான்மை ஆண்களின் இயல்பாக இருக்கும்., இந்த ஜெயதேவனும் அப்படித்தானே இருப்பான்?

அதெல்லாம் யோசியாமல் இந்தச் சின்னப் பெண்கள் இப்படிப் பண்ணிவிட்டார்களே என்று எண்ணி உள்ளூர சிதம்பரம் கலங்கினார்.

அதிலும் ஜெயதேவன் தன் முயற்சியால் வளர்ந்த பணக்காரன் வேறு! ஒரு பிடிவாதமும், வெறியும் இல்லாமல் இந்தக் குறுகிய காலத்தில் இவ்வளவு வளர முடியுமா? இவை காஞ்சனிக்கு எதிராகத் திரும்பினால்?

தனியாக உட்கார்ந்து யோசிக்க யோசிக்க, அவருக்கு மனம் பதறக் கூடத் தொடங்கிவிட்டது எனலாம். ஜெயதேவனுடன் பேசுவதற்காக மொபைலை எடுக்கும்போது, பதட்டத்தில் செல்ஃபோன் கை நழுவிக் கீழே விழப் போயிற்று.

சமாளித்து “ஹலோ . .” என்றவரின் குரல், அவருக்கே கேட்கவில்லை, பாவம்!

எப்படியோ ஒருவாறு விஷயத்தைக் கூறி முடித்து, மன்னிப்பும் கேட்டுவிட்டு, தொடர்ந்து வரக் கூடிய இடி, மின்னல் புயலுக்காகக் கலக்கத்துடன் காத்திருந்தார்.

ஆனால், ஜெயதேவன் வேறு மாதிரி இருந்தான்.

அவனே, அவரிடம் மன்னிப்பை வேண்டினான். அவருடைய மகளின் மனநிலை அறியாமல் பெண் கேட்டு வந்ததற்காக!

“உங்கள் மகளுக்கு அவளது விருப்பம் போல வாழ்வு அமையட்டும்.” என்று வாழ்த்து வேறு தெரிவித்தான்.

அவள் வேலை ஏற்றுச் செல்லும் நிறுவனம் நம்பகமானதுதானா என்று அக்கறையுடன் விசாரித்தான்.

அவர் பெயரைச் சொன்னதும், “பரவாயில்லை. பெரிய நிறுவனம்தான். அவர்களோடு நமக்கு வர்த்தகத் தொடர்பு இருக்கிறது. ஏதாவது பிரச்சினை என்றால், எனக்குத் தெரிவியுங்கள். முடிந்த உதவி செய்கிறேன்.” என்று ஜெயதேவன் கூறியபோது அவருக்குக் கண்கள் கலங்கிவிட்டன.

கண்ணால் கூடப் பார்த்திராத பெண்ணைத் தாயின் விருப்பத்துக்காக மணமுடிக்க வந்தவன். பெண்ணுக்குத் திருமணத்தில் விருப்பம் இல்லை, வேலை பார்த்துத் தன்காலில் நிற்கத்தான் ஆசை என்றால், அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் போகிறது என்று பெருந்தன்மையோடு விட்டுவிட்டானே!

இனித் தாய் மனம் குளிரத் தனக்கேற்ற வேறு பெண்ணை பார்த்து மண முடிக்கப் போகிறான்!

ஜெயதேவனோடு சற்ற நேரம் பேசி முடித்த சிதம்பரம் இவ்வாறு கருதும்படி அவர்களது உடையாடல் முடிந்தது.

அவரிடம் மன்னிப்புக் கேட்டு, காஞ்சனிக்கு வாழ்த்துத் தெரிவித்து, அதற்கும் மேலாக உதவி செய்யவும் அவன் முன் வரவே, சிதம்பரத்தின் மனம் “அப்பாடி” என்று அமைதி அடைந்தது.

இவன் மருமகனாகவில்லையே என்று வருத்தம் அதிமானதும் உண்மைதான். ஆனால் அவன் பிரச்சினை பண்ணாதது, எவ்வளவோ ஆறுதலைத் தந்தது.

இந்தக் காலத்துப் பெண்ணின் விருப்பத்தை இந்தக் கால இளைஞன் எளிதாகப் புரிந்துகொண்டுவிட்டான்!

எப்படியோ, அத்தோடு விஷயம் சுமுகமாக முடிவடைந்தது என்று சிதம்பரம் எண்ணினார்.

ஆனால் அப்படி விஷயம் எளிதாக முடிவடையவில்லை!

காரணம், அவருக்கு ஜெயதேவனைப் பற்றிச் சரியாகத் தெரிந்திருக்கவில்லை.

தனது இளமைப் பருவத்திலேயே பல விதமான துரோகங்களைச் சந்தித்தவன், சந்தித்து சமாளித்தவன் என்பதால் ஜெயதேவனால் தன் மனதைக் காட்டாமல் சிதம்பரத்திடம் பேச முடிந்தது.

ஆனால், ஜெயதேவனுக்கு உள்ளூர ரொம்பவே ஆத்திரம்தான். தன்னைப் போய் ஒருத்தி, அதுவும் சற்றே உயர்ந்த மத்தியதர வகுப்பைச் சேர்ந்த சாதாரணப் பெண் மறுப்பதா என்று பெரும் சீற்றம்தான்.

அதுவும் ஒரு சாதாரண வேலையைப் பெரிதாகக் கருதி அவனை ஒதுக்கியிருக்கிறாள். அதே போன்ற ஊதியம், அவன் எத்தனை பேருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறான்!

அதுவும், அவனுடைய தாயார் விரும்பிய மருமகள்!

தானாவது பரவாயில்லை. சொடக்குப் போட்டால் எத்தனையோ பேர் வந்து நிற்பார்கள். அவர்களுள் ஒருத்தியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால்  அன்னையும் சேர்ந்து ஏமாறும்படிச் செய்துவிட்டாளே என்ற கோபம்தான் அவனுக்கு அதிகமாக இருந்தது.

ஆனால் எதையும் அவன் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

கோபத்தையும் தாபத்தையும் வெளியே காட்டிக் கொண்டால், இவன் ஏதேனும் செய்வானோ என்று எதிர் நோக்கி, எதிராளி எச்சரிக்கையாக இருக்கத் தொடங்கி விடுவான். அப்படியின்றி, கவலைப்பட ஒன்றுமில்லை என்று நிம்மதியாக இருக்கும்போது, எதிர்பாராதபடி அடி விழும்போதுதான் வலியும் அதிகமாக இருக்கும். அடித்தது யார் என்பதும் தெரியாது போகும்.

அந்த காஞ்சனியை பழிவாங்குவது ஒன்றும் கடினமான காரியமாக அவனுக்குத் தோன்றவில்லை. அவளுடைய அசட்டுத் தந்தைதான் ஏற்கனவே, காஞ்சனி வேலை செய்ய இருக்கும் நிறுவனத்தின் பெயரை அவனிடம் சொல்லிவிட்டாரே.

அவரிடம் சொன்னது போல அந்த நிறுவனத்துடன் மெய்யாகவே அவனுக்குத் தொடர்பும் இருந்தது. அதன் முக்கியப் பங்குதாரர் ஒருவரோடு நல்ல பழக்கம்.

அவன் ஒரு வார்த்தை அவரிடம் சொன்னால் போதும். சத்தமின்றி காஞ்சனியின் சீட்டைக் கிழித்துவிடுவார். பயிற்சியில் சரியாகச் செய்யவில்லை என்று இலகுவாகக் காரணமும் காட்டி விடுவார்.

எந்த வேலை பெரிதென்று அவனை அலட்சியப்படுத்திவிட்டுக் காஞ்சனி போனாளோ, அந்த வேலை அவளுக்கு இல்லாது போகும்! அது மறைவாக இருந்து அவன் கொடுக்க இருக்கும் பெரிய அடி!

வேலை போயிற்றே என்ற வேதனையோடு,  பயிற்சியின் போது எதிலே தவறு செய்தோம் என்று என்ன தப்பு என்று வேதனைப் புழு காஞ்சனியின் மனதைக் குடைந்து தீர்த்து விடும்.

அது மட்டுமல்ல. வேறு வழி இல்லாமல் பங்களூருவில் இருந்து திரும்பி வந்து, பழையபடி அவளுடைய பொல்லாத சிற்றன்னையின் கொடுமைகளை சகித்துப் வாழ நேரும்! செய்த தப்புக்குப்

படவேண்டியதுதானே?

ஆனால், சிற்றன்னையின் கொடுமைகள் அவள் அனுபவித்துப் பழகி விட்டவை. அவை மட்டுமே அவளுக்குப் போதுமான தண்டனை ஆகுமா?

அவன் மனதில் இன்னொரு திட்டமும் இருந்தது. இந்த முதல் படி நல்லபடியாக முடிந்ததும், அடுத்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதுவும் ஒன்றும் கடினமல்ல.

ஆக, மிக எளிதாகவே தன் பழிவாங்கு படலம் முடிவுறும் என்று ஜெயதேவன் எண்ணினான்.

ஆனால் அது அந்த மாதிரியும் முடிவடையவில்லை!

பங்களூரு செல்லும் பஸ்சில் அமர்ந்திருந்த காஞ்சனிக்கு, முகத்தில் மோதிச் சென்ற காற்றிலேயே ஏதோ சுதந்திர வாசனை வீசுவது போலத் தோன்றியது.

அவள் மூச்சை ஆழ இழுத்து விடுவதைப் பார்த்த சுந்தரிக்குச் சிரிப்பு வந்தது. “மெள்ளடி மெள்ள. நீ காற்றை இழுக்கிற வேகத்தைப் பார்த்து, நீ சாதாரணமாய் மூச்சுதான் விடுகிறாயா, தப்பாக வேறே எதையும் உள்ளே இழுக்கிறாயோ என்று சந்தேகப்படப் போகிறார்கள்!” என்று தோழியை எச்சரித்தாள் அவள்.

“சும்மா மிரட்டாதேப்பா. பெண் என்றும் பாராமல் அப்படியே என் மேல் சந்தேகப்படுவதானாலும், கையில் சிகரட் கூட இல்லையே! “ என்றாள் காஞ்சனா.

“ஐய்யோ கஞ்சித் தொட்டி, நீ எந்தக் காலத்தில் இருக்கிறாய்? சிகரட் எல்லாம் இந்தக் காலத்தில் ரொம்ப சைவமாக்கும்! பெண்கள் பிடித்தாலும் கூட அப்படித்தான். நான் சொல்வது போதை மருந்துப்பா! அதிலே எத்தனையோ ரகம் இருக்கிறதாம். அதிலே ஒன்று, சும்மா உள்ளங்கையில் வைத்துக் கசக்கி ஒரு “தம்” இழுத்தால், உலகத்தையே மறக்கடித்து விடுமாம்! உலகமே மறப்பதானால் . . . அச்சோ! சொல்லு சொல்லு. இப்போது உனக்கு என்னை அடையாளம் தெரிகிறதா? முதலில், நான் யார் சொல்லு.” என்று அவள் படபடவென்று இமைகளைக் கொட்டியவாறு கேட்க, மற்றவள் அடக்க மாட்டாமல் நகைத்தாள்.

தோழியின் சிரிப்பை ரசித்தபடியே, “என்னப்பா, உண்மையைச் சொல்லு. இப்போதே என்னை அடையாளமே தெரியவில்லையா? சும்மாச் சிரிக்க வேறு செய்கிறாய்! அவ்வளவு போதை ஏறிவிட்டதா?

அச்சச்சோ நான் என்ன செய்வேன்? என் அப்பா அம்மாவே, காஞ்சனைப் பொண்ணு வீட்டை விட்டு அதிகம் வெளியே போகாதவள். அவளைக் கவனமாகப் பார்த்துக்கொள் என்று உன் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்களே! இப்போது நான் அவர்களுக்கு என்ன பதில் சொல்லட்டும்? அறியாப் பெண் என்று நினைத்தால், இப்படி என்னை அல்லலில் மாட்டி விட்டுவிட்டாயே! ஐயகோ! ஐயகோ!” என்று காஞ்சனி இடையே பேச இடம் கொடாமலே மேலும் வேகமாகப் புலம்பினாள்.

தன்னை மீறி உரக்கச் சிரித்துவிட்டு, மற்ற பயணிகளின் கவனம் தங்கள் மேல் திரும்புவதை உணர்ந்து, சட்டென வாயைப் பொத்திக் கொண்டாள் காஞ்சனி.

மூடிய விரல்களின் வழியே, “ஏய் சுண்டெலி, நீ வாயை மூடிச் சும்மா இரு. இல்லாவிட்டால், இரண்டு பைத்தியங்கள் என்று நம்மை பஸ்சிலிருந்து கீழே இறக்கி விட்டுவிடப் போகிறார்கள். தயவு பண்ணி உளறிக் கொட்டாமல் பேசாமல் இரு.” என்றாள் அதட்டலாக.

குரலுக்கு நேர் விரோதமாக அவளது கண்கள் சிரிக்க, எதிரொலியாக சுந்தரியின் முகமும் மலர, ஒருவரை ஒருவர் மகிழ்ச்சியோடு நோக்கிவிட்டு, இருவரும் வசதியாக இருக்கையில் சாய்ந்து கொண்டனர்!

ஏதோ, பெரிதாக சாதித்து விட்ட உணர்வு.

சாதனைதான்! எதற்கும் முட்டுக் கட்டை போடும் சிற்றன்னையோடு, அதே வீட்டில் இருந்துகொண்டே படித்து, பட்டம் பெற்று, இப்போது வேலைக்கும் கிளம்பி வந்து விட்டாள்! இதைவிடப் பெரிய சாதனை காஞ்சனிக்கு என்ன இருக்க முடியும்?

சுந்தரிக்கும் பெருமைதான். அவளுடைய அந்த ராட்சசிச் சித்தியிடமிருந்து காஞ்சனி மீள உதவியிருக்கிறாளே! நினைத்து நினைத்துப் பெருமைப்படலாம்!

காஞ்சனியின் மனம் இன்னொரு பெருமையும் பட்டது. சென்னையில் இருந்து அவள் சும்மாக் கிளம்பி விடவில்லை. அந்த ஜெயதேவனைப் போல ஒருவனின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வந்திருக்கிறாள்!

அந்த ஜெயதேவன்தான் என்ன மாதிரி மனிதன்?

அவன் தொழில் நடத்தும் முறை பற்றி அவளுக்குத் திருப்தி இல்லைதான். ஆனால், அது எப்படியோ போகட்டும்.

ஆனால், அவன் திருமணம் பேசிய முறை?

அவன் என்ன அப்பா வீட்டில் கட்டி வைத்திருக்கும் ஆடு, மாட்டையா கேட்கிறான்? அவனைப் போலவே உயிரும் உணர்வும் உள்ள ஒரு பெண்ணை அல்லவா?

பெண் என்றால் விருப்பு வெறுப்பு இருக்கக் கூடாதாமா?

பல இடங்களில் பெண், பிள்ளை இரு வீடுகளிலும் பெரியவர்கள் திருமணம் பேசி முடிப்பது வழக்கமே என்றாலுமே, பெண், பிள்ளையிடமும் சம்மதம் கேட்கும் காலம் இது. இவனானால் தன்னிச்சையாக வந்து திருமணத்தையே முடிவு செய்துவிட்டுப் போயிருக்கிறான்!

அவளுக்கு, அவனைப் பிடிக்காமல் போகக் கூடும் என்று சிறு சந்தேகம் கூட வரவில்லையா? இவனைப் பார்த்தால் எந்தப் பெண்ணும் மயங்கி விழுந்துவிடுவாள் என்று அவ்வளவு நிச்சயமா? முழு தலைக் கனம்!

ஒரு டியோவைப் போட்டுக்கொண்டால் எல்லாப் பெண்களும் “ஹா“ என்று பார்ப்பதாக விளம்பரங்களில் காட்டுகிறார்களே, அது போன்ற பைத்தியக்காரத்தனம்!

ஆனால் . . . திருமணத்தை உறுதி செய்ய வருமாறு யார் யாரை அழைத்தானோ? பாவம்! அத்தனை பேர் முன்னிலையிலும் தலைக் குனிவு! என்றாலும் அவனுக்கு இந்தப் பாடம் அவசியமே!

படட்டும்! ஒரு சறுக்கல் அவனுக்கு நிச்சயமாகத் தேவைதான். அப்போதுதான் இந்தக் காலப் பெண்களுக்கு சுய விருப்பம் என்று ஒன்று உண்டு. பெற்றவர்களே ஆனாலும், மற்றவர்கள் ஆட்டுவிக்கிற மாதிரியெல்லாம் ஆட மாட்டார்கள் என்று புரியும். மிக மிகத் தேவைப்பட்ட பாடம் கற்றுக் கொடுத்திருக்கிறாள்!

போதும். அந்த ஜெயதேவனைப் பற்றிய சிந்தனை போதும். இப்போது அவனது வலையில் இருந்து பட்சி பறந்துவிட்டது. அவ்வளவே.

இனி அவளும் அன்புத் தோழி சுந்தரியும் ஒரே நிறுவனத்தில் வேலை செய்யப் போகிறார்கள்.

சுந்தரி அவளுக்கு எவ்வளவோ செய்திருக்கிறாள். ஒரு பாங்க் போலக் கூட உதவியிருக்கிறாள். சில பல போட்டிகளில் கலந்துகொள்ள முதல் பணம் கொடுத்து உதவியிருக்கிறாள். வேன்று காஞ்சனி கொண்டு வரும் பரிசுத் தொகையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதும் அவளுடைய

குடும்பமே. தீபாவளி, பிறந்தநாளின் போது  பாட்டி மாமா அனுப்பும் தொகையும் பாதியைக் கணக்குக் காட்டிவிட்டு, காஞ்சனி தோழியிடம்தான் கொடுத்து வைப்பாள்.

அதை முதலீடு செய்து பெருக்கியதாகத் தேசிகன் கொடுத்த தொகையும் கணிசமாகவே இருந்தது.

அவனது பணத்தையே பெருக்கிக் கொடுப்பவர்கள் மகளைச் சும்மா அனுப்புவார்களா? கணக்கில்லாமல் கொடுக்கவில்லையே தவிர, முதல் மாத ஊதியம் வரும்வரை சற்றுத் தாராளமாகச் செலவு செய்யும் அளவு இருவர் கையிலும் பணம் இருந்ததும் காஞ்சனிக்கு மகிழ்ச்சி அளித்தது.

இனி வாழ்க்கையில் கவலை அவளை நெருங்கப் போவதில்லை.

பங்களூருவுக்குச் சென்று வேலையில் சேரப் போகிறார்கள்., நன்றாக உழைத்து வேகமாக முன்னேறப் போகிறார்கள். மதிப்பும் மரியாதையுமாக வலம் வரப் போகிறார்கள்!

தம்பி தங்கைக்குப் பரிசுகள் வாங்கிக் கொடுக்கும்போது, ஏன் சித்திக்கே ஒரு சேலை வாங்கிச் சென்றால், அதற்கு மேல் அவளது நாற்ற வாயை மூடிக் கொள்ள் மாட்டாளா, என்ன?

எல்லாவற்றையும் விட, அவளைக் கிள்ளுக் கீரையாக எண்ணிய ஜெயதேவன் கூட, அப்போது அவளை மரியாதையுடன் பார்ப்பான்., பேசுவான்!

எவ்வளவு பெருமையாக இருக்கும்!

ஒளி மயமான எதிர்காலம் பற்றிக் காஞ்சனி சந்தோஷமாகக் கனவு கண்டாள்.

ஆனால், அது போலவும் எதுவும் நடந்தேறவில்லை.

ஏனெனில், அந்த பங்களூரு நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த பஸ், பங்களூருவுக்குப் போய்ச் சேரவே இல்லை! பயணத்தின் கடைசிக் கட்டத்தில் ஒரு விபத்துக்கு உள்ளாகி அந்த இடத்திலே நின்றே போயிற்று!

# அத்தியாயம் -5

பஸ் எப்படி விபத்துக்குள்ளாயிற்று என்று யாருக்கும் எதுவுமே தெரியவில்லை.

எல்லோரும் சேர்ந்து சொன்ன குற்றச்சாட்டு, டிரைவர் செல் ஃபோனில் பேசிக்கொண்டே பஸ்சை ஓட்டினார்., அவரது அரை குறை கவனத்தில் ஓடிய வாகனம், கட்டுப்பாட்டை இழந்து, மரத்தில் இடித்து, இரண்டு குட்டிக்கரணம் போட்டு நின்று போனது.

எல்லோரும் இறங்கி, கோபம் தீர  நன்றாகத் திட்டவேண்டும் என்று  எண்ணிப் போனால், அங்கே அதிக அடி பட்டுப் பேச்சு மூச்சற்றுக் கிடந்தவர் வண்டியோட்டிதான்.

அவரை என்ன சொல்லித் திட்டுவது?

அத்தோடு, அவரது சட்டைப் பையில் துருத்திக்கொண்டிருந்த மொபைலின் உறை கூடப் பிரிக்கப் படாமல் இருந்தது. அதாவது, பலர் உரக்கவே குற்றம் சொன்னது போல, டிரைவர் அவரது செல்ஃபோனில் பேசிக்கொண்டே வண்டியை ஓட்டவில்லை!

இயல்பாகத்தான் ஓட்டியிருக்கிறார். அவரையும் மீறியே விபத்து நடந்திருக்க வேண்டும். பாவம்!

எல்லோரும் என்னென்ன பேசினார்கள், காரோட்டியை அடிக்கவும் எண்ணினார்களே! நல்லவேளை டிரைவர் பிழைத்தார்!

ஆனால் சுந்தரியை எங்கே? இந்தக் களேபரத்தில் அவள் மட்டும் கண்ணிலேயே படவில்லையே!

குட்டிக்கரணம் போட்ட பஸ் ஒருவாறு நிலையாக நின்றதும், அவரவருக்கு அடி பட்டிருப்பதையும் பொருட்படுத்தாமல் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு வேகமாக இறங்கினார்கள்.  அதில் அவளைப் பார்த்ததாகவே காஞ்சனிக்கு நினைவில்லை.

காஞ்சனிக்கும் நெற்றியில், தோளில் அடிதான். ஆனால் பஸ் இன்னும் ஏதேனும் உருளுமோ, புரளுமோ என்கிற பயத்தில் எல்லோரையும் போல அவளும் பஸ்சில் இருந்து அவசரமாக இறங்கிவிட்டாள்.

ஓரமாக உட்கார்ந்திருந்தவளிடம் “சுந்தரி, வா. நாமும் இறங்கி விடுவோம்.” என்று சொல்லியபடிதான் இறங்கினாள். கூட வராமல், சுந்தரி எங்கே போயிருப்பாள்?

சட்டென மூண்ட பயத்தில், காஞ்சனியின் நெஞ்சுக்குள் சிலீரென்றது. அவசரமாகத் திரும்பி பஸ்சை நோக்கி ஓடலானாள்.

“பஸ் கிட்டே போகாதேம்மா. டீசல் கசிந்து, பஸ்சே வெடித்து எரிந்தாலும் எரியக் கூடும். பஸ்சில் ஏறாதே. வந்துவிடு .. “ என்று, அஞ்சிக் கூவிய பல குரல்கள் அவள் காதில் விழுந்த மாதிரியே தோற்றவில்லை.

வண்டியின் உள்ளே ஏறிப் போய்ப் பார்த்தால்,  பஸ் உருண்டதில் ஏற்பட்ட நெளிவு சுளிவுகளில், உட்காரும் ஓர் இருக்கைக்கும் மற்றதற்கும் இடையே சுந்தரி இசகு பிசகாக மாட்டிக் கொண்டிருந்தாள்.

கூடவே அடிபட்டதாலோ என்னவோ, தன் நினைவிழந்து கிடந்த அந்த நிலையிலும் வலி தாங்காதவள் போல முக்கி முனகிக் கொண்டும் இருந்தாள்.

அவளை இந்த நிலையில் விட்டுவிட்டு மற்றவர்களோடு சேர்ந்து வண்டியை விட்டிறங்கி ஓடிவிட்டோமே என்று குற்ற உணர்ச்சியில் காஞ்சனி ஒரு கணம் துடித்துப் போனாள்.

ஆனால் தோழியை இந்த நிலையில் இருந்து விடுவிப்பதுதான் முக்கியம் என்று உடனே உணர்ந்து அதற்கு முயன்றால், சுந்தரியை அசைக்கக் கூட அவளால் முடியவில்லை! அந்த மாதிரி, விபத்து நடந்த விதத்தினால் ஒன்றோடொன்று கிட்டத்தட்ட இணைந்துவிட்ட இரு வரிசை இருக்கைகளின் இடையில் அவளது இடுப்பும் கால்களும் மாட்டிக் கொண்டிருந்தன.

ஓடிப் போய் மற்றவர்களை உதவிக்கு அழைக்கும்போதே, ஆம்புலன்சின் சைரன் ஒலி அவளுக்கு ஆறுதலைத் தந்தபடி சம்பவ இடத்துக்கு வந்து நின்றது. நல்லவேளையாக சமயோசித புத்தியோடு, யாரோ ஆம்புலன்சை அங்கே வரவழைத்திருக்கிறார்கள்.

உடனடியாக மருத்துவ உதவி தேவைப்பட்டவர்கள் சுந்தரியோடு சேர்த்து ஐந்து பேர் இருந்தார்கள். மேலும், காஞ்சனி போலச் சிறு காயங்கள், அதைவிட அதிகம் பாதிக்கப் பட்டவர்கள் என்றிருந்த எல்லோரையும் ஒரு பெரிய மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

சுந்தரிக்குக் காலில் இரண்டு இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. தாங்க முடியாத வலியில், அவள் தவித்துக் கொண்டிருந்தாள்.

மருத்துவப் பணியாளர்கள் வேகமாகவே செயல்பட்டபோதும்,

திடீரென்று மொத்தமாக வந்த அத்தனை பேரையும் கவனிப்பது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது.

யுகம் போலத் தோன்றிய அரை மணி நேரத்தில், அறுவை சிகிச்சை அறைக்கு சுந்தரியை அழைத்துப் போக வந்தார்கள்.

அவளுடைய பெற்றோருக்குத் தகவலைத் தெரிவிக்கலாமா, கூடாதா என்று மனதுள் போராடிக் கொண்டிருந்த காஞ்சனியின் கையை, ஸ்ட்ரெச்சரில் படுக்க வைக்கப்பட்ட சுந்தரி இறுகப் பற்றினாள்.

“பயப்படாதேம்மா. உனக்கு உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லை. வலி தாங்காது என்பதாலே, மயக்கம் கொடுத்து, உடைந்த எலும்பை சரி செய்து மாவுக் கட்டு போடுவார்கள் அவ்வளவுதான்.” என்றாள் கூட்டிப் போக வந்த நர்ஸ்!

“ஒஒரு நிமிஷம் , சிஸ்டர்.” என்று கேட்டுக் கொண்ட சுந்தரி தோழியின் பக்கம் திரும்பினாள். “அம்மா . . அம்மா அப்பாவுக்குச் சொல்லாதே, காஞ்சி. அங்கே பாட்டிகளை விட்டு வரவும் முடியாமல், இங்கே எப்படி இருக்கிறேனோ என்ற கவலையில் மிகவும் தவித்துப் போவார்கள். சிஸ்டர் சொன்னது கேட்டாய் அல்லவா? எனக்கு உயிருக்கு ஆபத்து இல்லை. நாமே சசமாளித்து விடலாம். அங்கே சொசொ சொல் .. லா.தே

மயக்க மருந்து வேலை செய்யத் தொடங்கிவிட்டது!

தோழியின் தவிப்பு புரிந்து, பற்றியிருந்த கையை அழுத்தி, “சொல்ல மாட்டேன், சுந்தரி. சொல்லவே மாட்டேன்!” என்று அவசரமாக வாக்குக் கொடுத்தாள் காஞ்சனி. .

முழு மயக்கம் வருமுன் தான் சொன்னது சுந்தரியின் மனதை எட்டியிருக்க வேண்டுமே என்று சற்று நேரம் காஞ்சனிக்கு ஒரே தவிப்பாக இருந்தது.

மருந்தின் மூலமாய் மயக்கம் வரும்போது நல்லதாக எதையேனும் எண்ணியவாறு உணர்வை இழந்தால், மீண்டும் கண் விழிக்கும்போது மனது திடமாக இருக்குமாம். இல்லாவிட்டால் கெட்ட கனவுகளோடும், பயம் கவலையோடும் மயக்கம் தெளியுமாம்.

காஞ்சனி கேள்விப் பட்டிருக்கிறாள்.

இப்போது சுந்தரி என்ன நிலையில் கண் விழிக்கப் போகிறாள்?

உடல் வேதனையோடு மனக் கஷ்டத்தோடும் எழுவாளா?

சற்று நேரம் குமைந்த பிறகே, அப்படி இருந்தாலும் இந்த

உளம்பலால் ஒரு பயனும் இல்லை என்று அவள் உணர்ந்தாள்.

இருவருக்குமே பயனற்ற இந்தக் கற்பனைகளை ஒதுக்கிவிட்டு, எதிர்காலம் பற்றிக் காஞ்சனி யோசிக்கலானாள்.

இந்த பஸ்சில் பங்களூருவுக்குப் போய், விடுதியில் சேர்ந்து, நன்றாக ஓய்வெடுத்துவிட்டு மறுநாள் நல்ல புத்துணர்ச்சியோடு பணியில் சேர்வதாக இரு தோழியரும் திட்டமிட்டிருந்தனர். வரும்போது பஸ்சில் செய்த சந்தோஷக் கற்பனைகள் வேறு!

காஞ்சனிக்கு மிகவும் வருத்தமே. ஆனால், இனி அது பற்றி எண்ணிப் பார்ப்பது, மனதில் வருத்தத்தையே அதிகப்படுத்தும். அதனால் பிடிவாதமாக மனதைத் திருப்பி, அடுத்து நடக்க வேண்டியதை சிந்திக்கத் தொடங்கினாள்.

பெற்றோரிடம் சொல்லக் கூடாது என்று சுந்தரி வாக்கு வாங்கியதால், இனி அங்கிருந்து எந்த உதவியும் கிடைக்க வாய்ப்பில்லை! கையில் இருக்கிற பணத்தை வைத்துதான் சமாளித்தாக வேண்டும்!

முதல் சம்பளம் வாங்கும்வரை ஓரளவு நிதானமாகவே செலவு பண்ண வேண்டும் என்று, ஏற்கனவே இருவருமாகத் தீர்மானித்திருந்தனர்.

“பேயிங் கெஸ்டா”கத் தங்கும் இடத்திலேயே உணவுக்கும் ஏற்பாடு செய்திருந்தனர்.

அது போகப் போக்கு வரத்து, தேவையான பொருட்கள் என்று அததற்குப் ஒதுக்கி வைத்த பிறகும், அவ்வப்போது ஓர் ஐஸ்கிரீம், வெளியே ஒரு பீட்சா என்று ஓரளவு தாராளமாகச் செலவு செய்யப் பணம் கையில் இருக்கத்தான் செய்தது. ஆனால், இந்த மருத்துவமனைச் செலவு என்ன வருமோ? அது போக என்ன மிஞ்சுமோ?

எப்படியானாலும் இருப்பதை வைத்து சமாளிக்க வேண்டியதுதான் என்று காஞ்சனி முடிவு செய்தாள்.

அடுத்து அலுவலகம்! மறுநாளே வேலையில் அதாவது பணிக்கான முதல் செட் பயிற்சியில் சேர்ந்துவிட வேண்டும் என்றுதான் எண்ணியிருந்தார்கள். ஆனால், இந்த விபத்து காரணமாக எத்தனை நாள் தாமதம் ஆகக் கூடுமோ?

ஏற்பட்ட நிலைமை குறித்து அலுவலகத்துக்குத் தகவல் அனுப்பி வைத்தாள். மருத்துவர் அனுமதித்த மறுநாளே கிளம்பி வந்து பணியில் சேர்வதாகவும், தங்களை மீறி நடந்துவிட்ட கால தாமதத்ததுக்காக

நிர்வாகம் அவர்களை மன்னிக்க வேண்டும் என்று செய்தி அனுப்பினாள். வந்து சேர்ந்ததும் தினமும் அதிக நேரம் இருந்து பயிற்சியையும் முடித்து விடுவதாக உறுதியும்.

அனுப்பிவிட்டுக் கனத்த மனதோடு தோழிக்காகக் காத்திருந்தாள்.

மயக்கம் தெளிந்து வந்த சுந்தரியும், காஞ்சனி எடுத்த முடிவுகள் அத்தனையும் சரியானவை என்று ஒப்புக் கொண்டாள்.

ஆயினும் எலும்பு முறிவோடு ஏற்பட்ட உள் காயங்களால் ஏற்பட்ட வலியும் மிகுதியாக இருக்கவே, வலி நிவாரணிகளின் உதவியோடு அவள் பெரும்பாலும் தூங்கியவாறே இருந்தாள்.

ஒப்பிட்டுப் பார்க்கையில் காஞ்சனிக்குச் சின்னக் காயங்களே என்றாலும் வலி அதிகமாகவே இருந்தது. ஆனால், சுந்தரியின் துன்பத்தை அருகில் இருந்து பார்த்தபின் தன் கஷ்டம் பற்றி வாய்விட்டுச் சொல்லக் கூட இவளுக்குக் கூச்சமாக இருந்தது.

அத்தோடு யாரிடம் சொல்வது? அதுவும், திடுமென வந்து சேர்ந்த புதிய நோயாளிகளால், மருத்துவமனைப் பணியாளர்கள், பெரிய டாக்டர்களில் இருந்து கடை நிலைப் பணியாளர்கள் வரை எல்லோரும் ஓடு ஓடு என்று ஓடிக் கொண்டு இருக்கையில்!

காஞ்சனிக்கும் வெளிக் காயங்களைத் துடைத்து மருந்து, ப்ளாஸ்டர் போட்டார்கள்தான். வலி நிவாரணியாக ஒரு ஆனால் தனி அறை கிடைக்காமல் வார்டில் நோயாளிக்குத் துணையாக இருப்பவருக்காகத் தரப்பட்ட ஒரு நாற்காலியில் உட்கார்ந்தே நாள் முழுவதும் கழிக்க நேரும் என்று தெரிந்ததும், அந்த மாத்திரையைப் போட்டுக் கொள்ளவே அவளுக்குத் தயக்கமாக இருந்தது. ஒருவேளை தூக்கம் வந்துவிட்டால்?

நாற்காலியில் இருந்து விழுந்து, அவள் வேறு எதையாவது இழுத்துக் கொள்ளக் கூடாதே!

சற்று நேரம் நடந்தால் நன்றாக இருக்குமோ என்று தோன்றவும், மருந்தின் வேகத்தால் தூங்கிக் கொண்டிருந்த சுந்தரியைச் சற்று கவனித்துக் கொள்ளும்படி அந்த வார்டு நர்சிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, வெளிப்புறமாக நடந்து சென்றாள்.

மரங்கள் அடர்ந்து அழகிய வனமாக மருத்துவமனையின் முன்புறம் காட்சி தந்தது.

அங்கங்கே மரத்தடியில் உட்காருவதற்கு வசதியாக அடி மரத்தைச் சுற்றிலும் திண்ணை போலக் கட்டி விட்டிருந்தார்கள். ஓய்வுக்கு ஏங்கிய

முதுகெலும்பு கெஞ்ச, கொஞ்ச நேரம் அந்தத் திண்ணையில் சாய்ந்து அமர்ந்துவிட்டுப் போக எண்ணித்தான் காஞ்சனி அந்தத் திண்ணையில் அமர்ந்தது.

ஆனால், மனதிலும் உடலிலும் மிகவும் களைத்திருந்த அவள், சில வினாடிகளிலேயே தன்னையறியாமல் அயர்ந்து உறங்கி விட்டிருந்தாள்.

அந்த நிலையில்தான், அவன் அவளைப் பார்த்தான்!

யோசனையோடு அவளைப் பார்த்தபடி சற்று நேரம் நின்றான்.

இப்போதே பயிற்சிக்குச் சரியான நேரத்தில் வரவில்லை என்று விரட்டி விட முடியும் . . .

எவ்வளவு நேரம் காஞ்சனி அசந்து கிடந்தாளோ?

ஏதோ பறவையின் சத்தத்தில் கண் விழித்தவளுக்குச் சுற்றுப்புறம் புரியச் சற்று நேரம் ஆயிற்று.

புரிந்ததும், ஐயோ சுந்தரி மயக்கம் தெளிந்து தேடியிருப்பாளோ? ஏதாவது மருந்து தேவையாகி இருக்குமோ? எதையும் பாராமல் இப்படித் தூங்கிவிட்டாளே என்று மனம் பதறிவிட்டது!

சுந்தரி இருந்த வார்டுக்கு ஓடோடிப் போனால், அங்கே அவள் இல்லை! அவள் படுத்திருந்த படுக்கைக்கு உறை, போர்வை மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

கணத்தில் தோன்றிய பயங்கரக் கற்பனையில் அவளுக்குக் கண்களை இருட்டிவிட்டது. நிற்க மாட்டாமல் தள்ளாடிப் போய்ச் சுவரில் சாய்ந்து கொண்டாள்.

இல்லை. இராது. அப்படிப்பட்ட ஆபத்து கிடையாது என்று எல்லா மருத்துவர்களும் சொன்னார்களே!

ஆனாலும் மனம் திடம் கொள்ள மறுத்தது. திடீரேன்று ஏதேனும் பின்னடைவு நேர்ந்திருந்தால்?

இதயம் தொண்டைக்குள் வந்து துடிக்க, சுந்தரி எங்கே என்று, உறை மாற்றிக் கொண்டிருந்த ஆளிடம் விசாரித்தாள்.

“எனக்கு என்னாம்மா தெரியும்? இன்ன நம்பர் படுக்கை காலியாவுது., உறையை மாத்துன்னு சொன்னாக்க, ஸ்டோரிலேருந்து எடுத்தாந்து மாத்திட்டுப் போறோம். மத்தது நமக்கு இன்னாத்துக்கும்மா?” என்றான் அவன்.

“அது . . அது பபடுக்கை எப்படிக் காலியாகும்?”

“அதாம்மா, டிஸ்சார்ஜூ ஆகி வூட்டுக்குப் போனாலும் காலியாவும். இல்லாட்டி இங்க இருந்த ஆளு மண்டையைப் போட்டாலும், காலியாவும்.”

தான் சொன்ன ஜோக்கில் பணியாள் தானே சிரித்துக் கொள்ள, காஞ்சனியின் முகம் சுண்ணாம்பாய் வெளுத்தது!

கால்கள் தானாகத் துவண்டு விழப் போவது போன்ற உணர்வில் அவள் தடுமாறுகையில், “ஓ! நீ இங்கே வந்தாச்சுதா? உன் ஆளைத் தனி ரூமுக்கு மாற்றிவிட்டோம். முதல் மாடியிலே ஐந்தாம் நம்பர் ரூம். அதிலே நல்ல வசதி . . முக்கியமாகத் துணைக்கு இருப்பவருக்கு திவான் வசதி கூட உண்டு. அங்கே போய் நோயாளி கூட இரும்மா.” என்றாள் அந்த வார்டில் அதுவரை சுந்தரியைக் கவனித்து வந்த நர்ஸ்!

திவான் இருக்கும் அறை! அப்பாடா! குறைந்த பட்சமாக வசதியாக உட்காரலாம்! ஆனால், எப்படி? தனி அறைக்குப் பணம் அதிகம் ஆகாதா?

வியப்பும் குழப்பமுமாக சுந்தரி இருந்த அறைக்குப் போய்ப் பார்த்தால், அது ஏசி ரூம்! படுக்க வசதியாகப் பெரிய திவானுடன் குஷன் போட்ட பெரிய நாற்காலியும் அங்கே இருந்தது.

அறையினுள் போனதுமே, பழைய எண்ணத்தின் தொடர்பாக, இதற்கு எவ்வளவு பணம் கட்ட நேரும் என்பதுதான் காஞ்சனிக்கு முதலில் தேன்றியது. ஏனெனில், கையில் இருக்கும் பணத்தில், முதல் மாதச் சம்பளம் வரும்வரை பங்களூரில் செலவை சமாளித்தாக வேண்டுமே.

என்னதான் உடம்பு கெஞ்சினாலும், இந்த சுகம் அவர்களுக்குக் கட்டி வராது என்பது நிச்சயம்..

ஒரு பெருமூச்சுடன், அங்கிருந்த “டியூட்டி” நர்சிடம் போய் “ஏதோ தப்பு என்று தோன்றுகிறது. இதற்குப் பணம் கட்ட எங்களால் முடியாது சிஸ்டர்! எப்படியோ, வேறு யாருக்கோ . . .கொடுக்க வேண்டியதை எங்களுக்குத் தந்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். “ என்று கூறினாள் அவள்.

“பெயர் என்ன?” என்று கேட்டுவிட்டு, காஞ்சனி சொன்னதும் ஒரு லெட்ஜரைப் புரட்டிப் பார்த்த நர்ஸ், “இல்லையேம்மா. எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது? காலில் எலும்பு முறிவான சுந்தரிதானே, நோயாளியின் பெயர்? சரியாகத்தான் அறை மாற்றி இருக்கிறார்கள். நோயாளி எழுந்து ஓரளவு தாராளமாக நடமாட இன்னும் ஐந்து நாட்கள்

ஆகும் என்று அது வரையுமே பணம் கட்டியிருக்கிறதே.” என்று விவரம் தெரிவித்தாள்.

யார்? யார் கட்டியிருப்பார்கள்? ஒரு வேளை . . . காஞ்சனியின் கற்பனை சிறகடித்துப் பறந்தது.

சுந்தரிக்கு அடிபட்ட விவரம், பங்களூருவில் அவர்கள் பணி புரிய இருக்கும் நிறுவனத்துக்கு மட்டும்தான் தெரியும். அவர்கள் தங்கள் அலுவலர்களின் நலத்தில் பெரிதும் அக்கறை காட்டுகிறவர்களாக இருந்து இந்த உதவி செய்திருக்க வேண்டும்.

எவ்வளவு நல்லவர்கள்! இவர்களுக்கு உடம்பைச் செருப்பாக . .என்பார்களே, அது போல உழைக்க வேண்டும்!

முதலில் இதற்காக யாரிடம் பேசி நன்றி தெரிவிக்க வேண்டும்? நிறுவனம் சார்பாக என்றாலும் குறிப்பாக யார் என்று தெரிந்தால் நன்றி தெரிவிக்க இலகுவாக இருக்கும்.

“பணம் யார் கட்டினார்கள் என்று தெரியுமா?” என்று மெல்லக் கேட்டாள் காஞ்சனி.

“அது இந்த ரிஜிஸ்டரில் இருக்காதம்மா. நீ வேண்டுமானால் மருத்துவமனை அலுவலகத்திற்குப் போய் விசாரித்துக் கொள். “

நல்லதை உடனே செய்ய வேண்டும்.

அறைக்குள் சென்று எட்டிப் பார்த்தாள். சுந்தரி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

“சிஸ்டர், கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்? நான் இங்கே அலுவலகம் வரை போய் வருகிறேன். ப்ளீஸ்” என்று கேட்டு அனுமதி பெற்றுக்கொண்டு அலுவல் பகுதிக்குச் சென்றாள் .

அங்கே விவரம் கேட்டபோது, “அதோ அவர்தான். நீலக் கலர் ஷர்ட்.” என்று சுட்டிக் காட்டிவிட்டு, மீண்டும் தன் கணக்குப் புத்தகத்தில் மூழ்கினார் அங்கிருந்த அலுவலர்.

அவர் காட்டிய திசையில் பார்த்தால், மொபைலில் ஏதோ பேசி கொண்டிருந்தான், அவர் காட்டிய நீல வண்ண ஷர்ட். அவனை நோக்கி அவள் செல்லும்போதே, பேச்சை முடித்து விட்டான் போல, மொபைல் பாக்கெட்டுக்குள் திணிக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

அவசரமாக ஓடிப்போய், “சார் . . எங்களுக்காகப் பணம் கட்டினீர்களாமே. உங்களுக்கு மிக்க நன்றி சா . . .ர்!” என்று குரலில் சிறு கரகரப்புடன், வேகமாக அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே

அவன் திரும்ப, அவளது பேச்சு தடும்ற்றத்துடன் நின்றது.

“நீங்கள் . .நீங்கள் எங்கே இங்கே? “ என்று திகைப்புற்று வினவினாள்.

“இது நான் கேட்க வேண்டிய கேள்வி!” என்றான் அவன் சுள்ளென்று.

அவன் ஜெயதேவன்!

# அத்தியாயம் -6

நேரில் பார்த்தது இல்லை என்றாலும், ஜெயதேவனைக் காஞ்சனியால் உடனேயே அடையாளம் காண முடிந்தது. ஃபேஸ்புக் உபயம்!

அதனாலேயே அவள் சற்று மிரண்டும் போனாள்.

இவன் சொன்ன சொல்லில் நிற்கிற பிடிவாதக்காரன் ஆயிற்றே., இப்படிப் பின்னாலேயே துரத்திக்கொண்டு வந்து நிற்கிறான் என்றால், கைப்பிடியாகப் பிடித்துப் போய்த் தாலியும் கட்டிவிடுவானோ என்று, ஒருகணம் அவள் மனம் கலங்கியது.

ஆனால் உடனேயே இயல்பான திடமும் திரும்பி வந்து கை கொடுத்தது.

இது ஒன்றும் காட்டுமிராண்டிக் காலம் அல்ல, தலைமுடியைப் பிடித்து இழுத்துப் போய் மனைவியாக்கிக் கொள்வதற்கு.

அத்தோடு, அந்தத் தொழிலாளர்கள் விஷயத்தில் செய்தது போலச் சட்டத்தைக் காட்டி எதுவும் பண்ண முடியாது. வயது வந்த மேஜரான பெண்., விருப்பமில்லை என்று சொன்னால் யாரும் எதுவும் பண்ண முடியாது.

இது இவனுக்கும் தெரிந்துதான் இருக்கும்.

பின்னே ஏன் வந்தான்? மருத்துவமனை பில் பணத்தை ஏன் கட்டினான்? நன்றிக் கடன் பட வைக்கிறானா?

அவனது காரணம் எதுவாக இருந்தாலும், அது பற்றி அவள் சிறிதும் யோசிக்கத் தேவையில்லை. எப்போதானாலும், அவன் செலவு செய்த பணத்தைக் கடனாகக் கருதித் திருப்பிக் கொடுத்துவிட்டால், அத்தோடு விஷயம் தீர்ந்தது!

அவள் விலகிப் போனதை நாகரீகமாக ஏற்காவிட்டால், முகத்துக்கு நேரே "உன்னை மணக்கப் பிடிக்கவில்லை" என்று அவள், ஒரு பெண் சொல்வதையும் கேட்டு, அவன் சகித்துக் கொள்ள வேண்டியதுதான்!

சகிப்பான். அவனது கல்மனம்தான் எதையும் தாங்கும் போலிருக்கிறதே!

என்னதான் துணிவாக எண்ணமிட்டாலும், மிகவும் தேவைப்பட்ட வேளையில் ஜெயதேவன் பணம் கட்டியது, நினைத்ததைச் சொல்ல

முடியாமல் அவளை சற்றுத் தயங்க வைத்தது.

ஒரு கண நேரத்து சங்கடமான அமைதிக்குப் பின், ஒருவாறு “வந்து . . “ என்று அவள் பேசத் தொடங்கியபோது, “பொறு.” என்பது போலக் கைஉயர்த்தி அவளைத் தடுத்தான் ஜெயதேவன்.

“உன் கேள்விக்கு நான் முதலில் பதில் சொல்லி விடுகிறேன். எனக்கு இங்கே பங்களூருவில் ஒரு வேலை. அது விஷயமாக வந்தேன். இந்த பஸ் நிறுவனத்திலும் என் முதலீடு இருக்கிறது. வழியில் இந்த பஸ் விபத்துக்குள்ளாகி நிற்பதைப் பார்த்ததும், என்னவென்று விசாரிக்க இங்கே வந்தேன். விபத்தில் சிக்கியவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் செய்ய வேண்டும் அல்லவா? எதையும் முடிந்த வரை நேரிடையாகப் பார்ப்பது, என் வழக்கம். அப்படி வந்த இடத்தில்  . . .” என்று முடிக்காமல் விட்டுவிட்டு, இனி நீ சொல் என்பது போல சைகை செய்தான்.

அதாவது, ஜெயதேவன் அவளைத் தொடர்ந்து வரவில்லை என்பதே காஞ்சனிக்கு ஆறுதலாக இருந்தது.

விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவி செய்ய வந்தவன், அவர்களைப் பார்த்திருக்கிறான். அவனது நிறுவனத்தில் எல்லோருக்கும் செய்வது போல அவர்களுக்கும் உதவியிருக்கிறான்.  அவ்வளவே. இவனிடம், அவள் எண்ணியது போலக் கடுமையாக எப்படிப் பேசுவது?

தயக்கத்துடன், “வந்து . . .எனக்குத் திருமணமே பிடிக்கவில்லை. எங்கள் இருவருக்கும் இங்கே வேலையும் கிடைத்துவிடவே . . .கிளம்பி வந்துவிட்டோம். ஆனால் வழியில் . .இப்படி விபத்தாகிவி . . விட்டது.” என்று சமாளித்தாள் காஞ்சனி.

லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். “நாகரீகமாகச் சொல்லிவிட்டே வந்திருக்கலாம். பின்னோடு வந்து தலைமுடியைப் பிடித்து இழுத்துப் போவதற்கு, இது ஒன்றும் காட்டிமிராண்டிகள் காலமில்லையே! ஆனால் . . போகட்டும். பரவாயில்லை.” என்றவன், பாக்கெட்டில் இருந்து ஒரு கார்டை எடுத்துக் கொடுத்தான்.

“ஏதேனும் தேவைப்பட்டால் தொடர்புக்கு என் எண் இருக்கிறது. எதையேனும் எண்ணித் தேவையற்றுத் தயங்க வேண்டாம். “

தான் நினைத்த வார்த்தைகளையே முதலில் ஜெயதேவன் சொல்லவும் சில கணங்கள் காஞ்சனி திகைத்துப் போனாள். கூடவே, அவன் சொன்ன தினுசில் அவள் அல்லவா அசட்டுக் கதாநாயகி ஆகிப் போனாள்!

எடுத்துச் சொல்லியிருக்க வேண்டுமோ? சொல்லி, இவன் மறுத்திருந்தால் கூட, அப்படி என்ன செய்திருக்க முடியும்? பழங்காலத் திரைப்படக் கதாநாயகி போல வீட்டை விட்டு ஓடி . . .இதற்குச் சித்தி என்ன வண்ணம் தீட்டுகிறாளோ?

தயக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தால், அவன் திரும்பிப் போய்க் கொண்டிருந்தான். இங்கிருந்து கிளம்புகிறானா?

இவன் சென்னைக்குப் போய் முதல் காரியமாக என்ன செய்வான்? அவளுடைய தந்தையிடம், உங்கள் மகளைப் பார்த்தேன் என்று சொல்வதுதானே இயல்பு? அடுத்து அந்த விவரம் எங்கே போகும்?

“சார் . .சார், ஜெஜெ . .ஜெயதேவன் சார் . . “ அவன் பின்னோடு ஓடிப் போய் அவனை நிறுத்தினாள் காஞ்சனி.

“என்ன?”

“வவந்து எங்கள் வீட்டில் எதுவும் அதாவது இந்த விபத்து பற்றி எதுவும் சொல்லி விட வேண்டாம், சார். . .” என்று வேகமாகக் கூறியவள், அவன் கேள்வியாக நோக்கவும், “அது . .காரணம் சுந்தரி சார். என் தோழி. நீங்கள் அறை வசதி செய்து கொடுத்திருக்கிறீர்களே . . .அவள் வீட்டுக்கு எதுவும் தெரிந்துவிடக் கூடாது.” என்று விளக்கினாள்.

“ஏன்?”

உள்ளூர எரிச்சல் வந்தது அவளுக்கு. வேண்டாம் என்றால் விட்டுவிடக் கூடாதா? ஏன், என்ன என்று எல்லா விவரமும் அறிந்தாக வேண்டுமா?

ஆனால் உதவி செய்திருக்கிறானே! ரொம்பவும் தேவைப்பட்ட உதவி!

கடுப்பை விழுங்கிக்கொண்டு, காஞ்சனி விவரம் சொன்னாள்.

கேட்டாயல்லவா, படு என்று நீட்டி முழக்காமல், சுந்தரியுடைய இரண்டு பாட்டிகளுக்காக அவளுடைய பெற்றோர் வீட்டிலேயே இருந்தாக வேண்டிய கட்டாயம் அதனால் அவர்களுக்கு விபத்து விவரம் தெரிந்தால் தவித்துப் போவார்கள்., காஞ்சனியுடைய தந்தைக்குத் தெரிந்தால்,அது உடனே தேசிகன் அங்கிளுக்குப் போய்விடும்., அதனால் சென்னைக்குத் தெரியப்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்தது எல்லாம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

இதுவே அவனுக்குப் போரடித்துப் போயிருக்கும்.

சொல்லி முடித்துவிட்டு அவன் முகத்தைப் பார்த்தால் , அங்கிருந்து எதையும் அவளால் கண்டுகொள்ள முடியவில்லை.

அவளது கோரிக்கையை ஏற்பதா வேண்டாமா என்று யோசிக்கிறானா?

“எங்களால் சமாளித்துக் கொள்ள முடியும் என்கிறபோது, எதற்காக அவர்களைக் கஷ்டப்படுத்துவது என்றுதான் . . .”

சமாளிப்பதா? அதுதான் அவன் உள்ளே வரும்போதே பார்த்தானே! “ஹோ” என்று கிடந்ததை ஒரு ஃபோட்டோ எடுத்துக் காட்டியிருந்தால், இந்தப் பேச்சு சொல்லத் துணிவிராது!

எதையும் காட்டிக் கொள்ளாமல் லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன்.

“உங்கள் வீட்டுப் பெரியவர்கள்! அவர்களை எப்படி நடத்துவது என்று உங்களுக்குத்தான் தெரியும். அதில் நான் ஏன் தலையிடுவது? அங்கே சில கணக்குகள் தயார் பண்ணி வைக்கச் சொல்லியிருந்தேன். . “ என்று உரைத்தவாறே மீண்டும் மருத்துவமனை அலுவலறை நோக்கி நடந்தான்.

உன்னோடு பேச்சு முடிவடைந்தது என்கிறான். மேலே நின்று பேச விருப்பமில்லை என்பது போலவும்.

அலட்சியப் படுத்தப்பட்ட மாதிரி லேசான உறுத்தலோடு, தோழியை நாடிச் சென்றாள் காஞ்சனி.

நல்லகாலமாக சுந்தரி விழித்திருந்தாள். தலைப் பக்கம் படுக்கையை உயர்த்தி, சாய்ந்து உட்கார வைத்திருந்தார்கள்.

காஞ்சனியைக் கண்டதும் விழிகளைச் சுற்றிலும் சுழற்றி, “என்னப்பா, ஏதேனும் “ஜிபூம்பா”வா? இதெல்லாம் எப்படி?” என்று கேட்டாள் அவள்.

காஞ்சனி விவரம் சொல்லவும், புருவம் சுளித்துத் தீவிரமாக யோசித்தாள்.

வலி நிவாரணிகள் தந்த மந்தத்தை மீறி யோசித்துவிட்டு, “ஊகூம். ஒத்து வரவில்லையே!” என்றாள்.

“எனக்கும் அப்படித்தான் சுந்தா தோன்றியது. பணம் கட்டியது யார் என்று தெரிந்ததும், கொஞ்சம் மனது படபடத்தும் விட்டது. ஆனால், அந்த பஸ் நிறுவனத்தில் அவருக்குப் பங்கு இருக்கிறதாம். விபத்து நடந்தால் அடி பட்டவர்களுக்கு வழக்கப்படி செய்வதுதான் என்றார். . .”

மறுப்பாகத் தலையசைத்தாள் சுந்தரி. “இந்த ஏசி, டீவி எல்லாம் உள்ள அறையா? அடிபட்ட எல்லோருக்கும் கொடுத்திருக்கிறார்களா என்று விசாரித்தாயா? என்னால் நம்ப முடியவில்லை. இதில் ஏதோ உள் நோக்கம் இருக்கிறது என்று தோன்றுகிறது. “

ஜெயதேவன் சொன்னபோது, இது போல அவளுக்குத் தோன்றவில்லையே!

சற்று யோசித்தாள். பிறகு, “இப்போது எனக்கும் ஒரு மாதிரிதான் இருக்கிறதுப்பா. ஆனால், இங்கே வந்தது வந்துவிட்டோம். இது வேண்டாம் என்று திரும்பிச் செல்ல என்ன காரணம் சொல்வது? அதை விட, இதைக் கடனாக ஏற்று, செலவான தொகையைப் பிறகு திருப்பிவிட்டால் என்னப்பா?” என்று தோழியிடம் கேட்டாள்.

சுந்தரியின் முகம் லேசாக மலர்ந்தது. “நல்ல ஐடியாப்பா. செலவான காசைத் திருப்பிக் கொடுத்துவிடும்போது, அந்த ஜெயதேவனின் பிச்சையில் வாழ்வது ஆகாது. அத்தோடு, இது எதுவுமே வேண்டாம் எனறு மறுத்துவிடடுப் பழையபடி வார்டுக்குச் சென்று கஷ்டப்படவும் முடியாது. அதனால், இதுதான் வழி.” என்றாள் சுந்தரி.

“உனக்கும் கஷ்டமாக இருந்ததா, சுந்தரி?” என்று பரிவுடன் கேட்டாள் காஞ்சனி.

“ஊகூம். அடிபட்ட உடம்பு வலிக்கு மேல், பெரிதாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால், அங்கே பக்கத்தில் கிடந்த, கையில்லாத சின்ன நாற்காலியில் நீ சிரமத்தோடு உட்கார்ந்திருந்ததை ஒரு தரம் கண்ணைத் திறந்தபோது பார்த்தேன். என்னால்தானே என்று மனதுக்கு வேதனையாக இருந்தது.” என்று சுந்தரி சொன்னபோது காஞ்சனிக்குக் கண்ணைக் கரித்தது.

“அப்படிப் பார்த்தால், எனக்குத் துணை வந்துதானே நீ விபத்தில் மாட்டியதே! என்னால்தான் உனக்கு அடிபட்டதே!” என்றாள் குரல் கம்ம அவள்.

சற்று நேரம் தோழியைப் பார்த்துவிட்டு, “ஏய், விடுப்பா. நாம் இரண்டுபேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் இப்படிப் பேசுவது அசட்டுத்தனம். எங்கள் வீட்டு சூழ்நிலை தெரியும்தானே? அதற்குள்ளேயே இருந்தால், நானும் நோயாளியாக, வயதானவளாக உணரத் தொடங்கி விடுவேன் என்று பெரியவர்கள் நாலு பேரும் சேர்ந்துதான் உன்னோடு என்னைக் கிளம்பச் சொன்னார்கள். அந்த வகையில் ஒருவருக்கொருவர் உதவிதான்.

என்னவோ சொல்வார்களே, பாயாசம் ஊற்றப் பேப்பர் கப்பா, அல்லது பேப்பர் கப் பறக்காமல் இருக்கப் பாயசத்தை ஊற்றி வைப்பதா என்பது போலத்தான் நாம் இருவரும் சென்னையில் இருந்து கிளம்பி வந்தது. மற்றபடி, யாராலும் யாருக்கும் துன்பம் இல்லை! எனவே இது போலப் பேச்சு இனிமேல் கூடாது. ஓகேவா?" என்று சுந்தரி அதட்டிக் கேட்க, மற்றவளும் ஒப்புதலாகப் புன்னகை செய்தாள்.

நனைந்த இமைகளினூடே கார் காலப் புன்னகை!

அவ்வளவு நேரம் பேசியது தாங்காமலோ என்னவோ, சுந்தரியின் தலை சோர்வுடன் துவண்டது.

"ஏய், என்னப்பா? . . " என்று அவசரமாக எழுந்த காஞ்சனியும், ஒன்றுமில்லை என்பது போல மெல்லத் தலையசைத்த சுந்தரியும் அறை வாயிலில் அரவம் கேட்கவே, பார்வையை அங்கே திருப்பினர்.

வந்தவன் ஜெயதேவன். அந்தப் பகுதிக்குரிய வார்டு நர்சுடன் பேசியவாறே வந்தான்.

கூரிய விழிகள் இருவரையும் படம் பிடிக்க, " . . . எனவே, கான்டீனில் இருந்து உணவை அறைக்கே அனுப்பி விடுங்கள்." என்று நர்சிடம் கூறி முடித்தான் அவன்.

"நர்ஸ், பேசிக் கொண்டிருக்கும்போதே, சுந்தரியின் தலை இப்படி ஆடிச் சரிந்தது." என்று செய்து காட்டினாள் காஞ்சனி.

அருகில் வந்து பல்ஸ் பார்த்தவாறே, "அசதிம்மா. அடிபட்டது, அறுவை சிகிச்சை, ஆன்டிபயாட்டிக் . . . கொஞ்சம் அப்படித்தான் இருக்கும். தோழிகள் இரண்டு பேரும் ரொம்பப் பேசினீர்கள் போல! இனி ஒரு டோஸ் மருந்தோடு, நோயாளி சற்றுத் தூங்கட்டும்." என்றார் நர்ஸ்.

சோர்ந்திருந்த சுந்தரியை இயல்பாகப் படுக்க வைத்துவிட்டு, "இயன்றவரை தூக்கமும், நிறையத் தண்ணீர் குடிப்பதும்தான், இந்த அசதியைக் குறைக்கும். அத்தோடு, சார்தான் உங்களுக்கு வேண்டியதெல்லாம் செய்து கொடுத்துவிட்டாரே! சாப்பாடு வரை! காஞ்சனி, உங்களுக்கும் உள் காயம் இருக்கிறது. அதனால், இரண்டு பேருமே கவலையற்று நிம்மதியாகத் தூங்குங்கள்." என்று புன்னகையோடு கூறினார்.

அவர்களிடம் சொன்னதோடு நில்லாமல், ஜெயதேவனிடமும் திரும்பி, "சார், பணம்தான் வந்துவிட்டதே, இனி என்ன என்று நோயாளிகளிடம் அலட்சியம் காட்டுகிற மருத்துவமனை இது அல்ல.

இங்கே பணியில் சேருகிறபோதே, மருத்துவம் உன்னதத் தொழில்., உன்னதத் தொழில் என்று உருப் போட வைத்து விடுவார்கள். ரொம்பச் சொல்வானேன்? அடுத்து நீங்கள் பார்க்க வருகிறபோது, உங்கள் உறவினர் இருவருமே எங்களை ஓஹோ என்று பாராட்டுவதை நீங்கள் கேட்கத்தான் போகிறீர்கள்.” என்று பெருமையும் பேசினார்.

உறவினரா? கவலையற்று நிம்மதியாகத் தூங்குவது வேறா? எப்படி முடியும்? உணவுக்கும் பணம் கொடுத்துப் பயங்கரக் கடன்காரர்களாக ஆக்கிவிட்டானே!

கடன் பட்ட நெஞ்சம் எப்படிக் கலங்கும் என்று எப்போதோ கம்பர் எழுதி வைத்திருக்கிறாரே!

இவன் பணத்தைப் பைசா விடாமல் கொடுத்துவிட வேண்டும். கொடுக்காதவரை அவர்கள் பிச்சைக்காரர்கள்! அது இன்னும் கேவலம்!

காஞ்சனியின் பார்வை மின்னலாய் சுந்தரியின் கண்களைச் சந்தித்து மீண்டது.

ஜெயதேவனின் பார்வையும் கூர்மையில் குறைந்தது அல்லவே!

இந்த இருவரும் சேர்ந்து அவனுக்கு எதிராக அப்படி என்ன பேசியிருக்கக் கூடும்? அவனைப் பார்த்ததும் அந்த விழி விழித்தார்களே! நனைந்த கண்கள் வேறு!

நர்சைப் பார்த்து முறுவலித்து, “எங்களால், உங்கள் வேலை கெட வேண்டாம். நீங்கள் போங்கள் சிஸ்டர். அடுத்து வரும்போது சென்னையில் இருந்து என்னென்ன பொருட்கள் எடுத்து வருவது, அங்கிளிடம், ஆன்ட்டியிடம் எதெது கேட்பது என்று விவரம் தெரிந்துகொண்டு, நானும் கிளம்புகிறேன்.” என்று மரியாதையும் பிரியமும் கலந்த குரலில் அவன் கூற, “ஓகே சார்.” என்று சந்தோஷமாகச் சிரித்தபடியே அந்த அம்மாள் தன் வேலையைப் பார்க்கப் போனார்.

கதவைச் சாத்திவிட்டு நர்ஸ் சென்றதுமே, எந்த விதமான நகாசு வேலையும் இல்லாமல், ஜெயதேவன் கேட்டான். “என்ன விஷயம்? ரொம்ப சீரியசான பேச்சு போல இருந்ததே? இங்கே என்ன பிரச்சினை உங்களுக்கு?”

இந்த நேரடிக் கேள்வியில் ஒரு கணம் திணறிவிட்டு, “வவந்து நிறைய்யப் பணம் கட்டியிருக்கிறீர்களாமே! எங்களால், உங்களுக்கு ரொம்பச் செலவாகியிருப்பது . . . வவந்து கஷ்டமாக இருந்தது. அஅதுதான் பேசிக் கொண்டோம். நீங்கள் கட்டாயமாக எல்லாம் முழுத்

தொகையையும் எங்களிடம் வாங்கிக் கொள்ள வேண்டும். “ என்றாள் காஞ்சனி, சற்றுப் பிடிவாதமான குரலில்.

என்ன பெரிய பணம்? இது கூடச் செய்ய மாட்டேனா? அப்படி இப்படி என்று ஏதாவது பேசித் தன்னை உயர்த்திக்காட்ட முற்படுவான் என்பது, தோழியரின் எண்ணம். கடன் பட்டவர்களால் எதிர்த்துப் பேச முடியாதல்லவா? பணத்தால் அடிப்பதே அவனது திட்டமாக இருக்கும். அந்தப் பிடியை விட மனம் வராது. அதனால் செலவழித்த காசைத் திரும்பப் பெற விரும்ப மாட்டான் என்று காஞ்சனி நினைத்தாள்.

ஆனால் ரொம்பவும் சாதாரணமாக, “ஓகே. கணக்குகளைப் பார்த்து மொத்தம் எவ்வளவு என்று சொல்கிறேன். தந்து விடுங்கள்.” என்று அவன் தயக்கமின்றிக் கூறவும் பெண்கள் இருவருமே சற்றுத் திணறிப் போனார்கள்.

பரவாயில்லையே! வாங்கிக் கொள்கிறான் என்றால், தப்பு நோக்கம் இருக்க வாய்ப்பில்லை!

ஆனால் தொகையைச் சொல்லாமல் தள்ளிப் போடுகிறானே. பணத்தைக் கட்டியவனுக்கு, எவ்வளவு கட்டினான் என்று தெரியாமலா இருக்கும்?

மீண்டும் சந்தேகம் வந்தது.

அயர்ந்திருந்த சுந்தரி யோசிக்க முடியாதவளாகக் கண்களை மூடிக் கொள்ள, காஞ்சனி தன் சந்தேகத்தை மாற்றிக் கேட்டாள்.

“சுமார் எவ்வளவு என்று கூடச் சொல்ல முடியாதா?” என்று, விடாமல் தொடர்ந்து வினவினாள்.

அப்போதும் அவன் தயங்கவே இல்லை.

“கஷ்டம்மா.” என்றான் வெகு இயல்பாக. “உனக்கு ஒரு விதமான கணக்கு. உன் தோழிக்கு இன்னொரு விதம். கால் எலும்பு ப்ளேட் வைத்து சேர்த்துக் கட்டியதற்கு வேறு மாதிரி. முதலில் இருந்த வார்டுக்கு ஒரு கட்டணம். . .இது வேறு விதம். இவைகளில் நீ ஏற்கனவே கட்டியதைக் கழிக்க வேண்டும். அதையும் முழுதாகக் கட்ட முடியுமா என்று தெரியவில்லை. இப்படிப் பார்க்கும்போது, மனக்கணக்கு எனக்குக் கஷ்டம். வரிசையாக எழுதி, கால்குலேட்டர் உதவியோடுதான் கூட்டிச் சொல்ல முடியும் என்று நினைக்கிறேன். ஆனால் கவலை வேண்டாம். பெரிய பிரச்சினை ஒன்றும் இல்லை. கம்ப்யூட்டர் பில்தானே? ரொம்பத் தாமதம் ஆகாமல் பார்த்துவிடலாம். “

இப்போது காஞ்சனி இன்னொரு விதமாக அதிர்ந்து போனாள்.

கம்ப்யூட்டர் பில்! நாலு பட்டனைத் தட்டினால் எல்ல விவரமும் வந்துவிடும்.

இந்தா கணக்கு என்று அதை நீட்டி, இவன் இப்போதே பணத்தைக் கேட்டால் என்ன செய்வது?

பெரிய வீராப்பாய் வாங்கிக்கொள்ளச் சொல்லிவிட்டு, கையில் இல்லை என்று எப்படிச் சொல்வது?

அவன் கேட்டு இப்போது கையில் பணம் இல்லை என்று நேரடியாகச் சொல்வதை விட . . .                முகம் கன்ற, “ககட்டாயமாக வாங்கிக் கொள்ள வேண்டும். எவ்வளவு என்றாலும்,  வேலையில் சேர்ந்ததும் முமுதல் மாத ஊதியத்திலேயே தந்து விடுவோம்.” என்று தட்டித் தடுமாறி, நிலைமையை ஜாடையாகக் கூறி முடித்தாள் அவள்.

“நோ ப்ராப்ளம்!” என்று அப்போதும் ஜெயதேவன் தயக்கமின்றியே உரைத்தான்.

என்னமோ சொல்வார்களே, பட்டம் கட்டிக்கொள் என்றபோதும், அரசுரிமை கிடையாது காட்டுக்குப் போ என்றபோதும் _ராமனின் முகம் அன்றலர்ந்த தாமரை போல மாறாமல் இருந்ததாக ராமாயணத்தில் வருமாம்.

அது போலப் பணத்தை வாங்கிக்கொள் எனும்போதும், இப்போது இல்லை பிறகு வாங்கிக்கொள் என்றாலும், ஒரே மாதிரி முகத்தை வைத்துக் கொள்கிறானே!

ஜெயதேவன் ஒன்றும் பெரீய்ய ஆளில்லை., அவதார புருஷனான ராமனுடன் இவனை ஒத்து நோக்குவதே தவறு என்றாலும், இவனும் பணத்துக்கு அதிக மதிப்புக் கொடுக்கவில்லை என்பது நிஜம்தானே?

இது நிஜமா, நடிப்பா?

ஒரு வேளை தோழிகளின் சந்தேகம்தான் சரியோ?

எப்படியோ, அவன் பணத்தைத் திருப்பிக் கொடுத்த பிறகுதான் முழு நிம்மதியோடு இருக்க முடியும். அது மட்டும் காஞ்சனிக்கு நிச்சயமாகத் தெரிந்தது!

ஒருவாறு தன்னை சமாளித்துக்கொண்டு, “ரொம்ப நன்றி சார். ஒரு மாதம் அவகாசம் கொடுத்ததற்குச் சொல்கிறேன். வந்து . .நீங்கள் செய்திருக்கும் எல்லா உதவிகளுக்குமே நன்றிதான் சார். அஅதற்குள் நீங்களும் தொகை என்ன என்று கணக்கிட்டு விடுங்கள் சார்.” என்று தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்தாள் காஞ்சனி.

“நிச்சயம்!” என்று அதே முறுவலோடு கூறி ஜெயதேவன் விடைபெற்றான்!

ஆனால் இப்போது முறுவல் இன்னமும் விரியாமல் கட்டுப் படுத்த அவன் சற்று சிரமப்பட வேண்டியதாயிற்று.

ஏனெனில், அவன் காட்டில் அல்லவா இப்போது மழை பெய்கிறது!

கையில் பணமே கிடையாது. அப்படியிருக்க இவ்வளவு திமிரா?

ஒரு வகையில் பார்த்தால், காஞ்சனி பாவம்தான். அவள் “ஹோ” என்று கிடந்தது பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது.

ஆனால் அவள், ஜெயதேவனைச் சீண்டியிருக்கக் கூடாது. எப்போது சீண்டினாளோ, அப்போது அதற்குரிய தண்டனையை அனுபவித்துத்தானே ஆக வேண்டும்?

# அத்தியாயம் -7

அன்று ஜெயதேவன் பங்களூருக்குக் காரில் செல்லவில்லை.

செல்லும் வழியில் அந்த விபத்து பற்றி அறியவும் இல்லை.

காஞ்சனியுடைய தந்தை சிதம்பரத்துடன் பேச்சுக் கொடுத்ததன் பலனாக அவள் பணியேற்றுச் செல்லும் நிறுவனத்தின் பெயரை அறிந்துகொண்டு, அந்த வேலை அவளுக்குக் கிட்டாமல் செய்யும் எண்ணத்தோடுதான் நேரே அங்குதான் சென்றான்.

இப்போதெல்லாம் ஒரு தொழிலில் வெற்றி பெறுகிறவர்கள், அத்தோடு திருப்தியாக இருந்து விடுவதில்லை. இயன்றவரை அதை விரிவாக்கம் செய்வதோடு, இன்னும் லாபம் தரும் பலவற்றிலும் கால் பதிப்பார்கள்.

கூடவே, தொழில் அதிபர்கள் சங்கங்கள், கூட்டங்கள், பொது விழாக்கள் என்று உயர் மட்டப் பழக்கங்கள் பெருகும். குடும்ப விழாக்களுக்கும் அழைப்புகள் வரும். ஒருவருக்கு ஒருவர் கை கொடுப்பது, காலை வாருவது, கொடுக்கல் வாங்கல் எல்லா வகையிலும் அவர்களுள் தொடர்புகளும் பெருகும்.

அந்த வகையில் விரைந்து முன்னேறிவிட்ட இளைஞனான ஜெயதேவனுக்கும் மேல் மட்டத்தில் பலரோடு அறிமுகமும், பல தொழில்களில் முதலீடும் இருந்தது.

இந்த வகையில், காஞ்சனிக்கும் சுந்தரிக்கும் வேலை கொடுத்திருந்த நிறுவனத்துடைய பெரிய பங்குதாரர் மாணிக் குரானா, அவனுக்கு நன்கு பழக்கமானவரே.

பயிற்சியின் போதே, திறமையில்லை என்று காஞ்சனியை வெளியேற்றிவிடுமாறு

அவரிடம் கேட்க வேண்டும் என்ற திட்டத்தோடுதான் அவன் பங்களூருவுக்குச் சென்றான்.

இது ஒன்றும் ஓசி உதவியாக இருக்காது., திருமணத்தில் எழுதும் மொய்க் கடன் போலப் பதிலுக்கு எப்போதாவது, ஏதாவது செய்ய வேண்டியிருக்கும் என்று அவனுக்குத் தெரியும். ஆனால், அதுவும் இந்த அளவுக்குள்தான் இருக்கும். பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினான்.

ஆனால், காஞ்சனி பற்றிப் பேச்செடுக்கும்போதே, அவள்

பயிற்சிக்கு வந்து சேரவில்லை என்று அவனுக்குத் தெரிய வந்தது.

அவளும், அவளோடு சேர்ந்து வந்த இன்னொருத்தியும் விபத்தில் மாட்டிக் கொண்டதாகவும், பயிற்சிக்கு வர முடியாத நாட்களை அதிகப்படி நேரம் இருந்து செய்து விடுவதாகவும் காஞ்சனி மெயில் அனுப்பி இருந்தாள்.

செய்தியில் உண்மை இருந்தது. நம்பகத் தன்மைக்காகவே, சிகிச்சை தரும் மருத்துவமனையின் விவரங்களையும் அவள் கொடுத்திருந்தாள்.

“ரெஸ்யூமேயில் இவளது குறிப்புகளைப் பார்த்ததில் ரொம்பக் கெட்டிக்காரியாகத் தெரிந்தது. நேர்காணலிலும், இந்த இரண்டு பேருமே நன்றாகச் செய்திருந்தார்கள். ஒருத்திக்குத்தான் பெரிய அடி. ஆனால் அதற்காக, இந்தப் பெண்ணும் நாள் கணக்கில் பயிற்சிக்கு வர முடியாது என்றால் . . “ என்று மாணிக் குரானா யோசிக்கவும் ஜெயதேவனுக்கு உள்ளம் துள்ளியது.

அவன் கேளாமலே, அவன் விரும்பியது நடக்கப் போகிறது.

ஆனால், தொடங்குமுன்னே புஸ்வாணமாகப் போய்விட்டால், அப்புறம் அவனுக்குத் திரில் என்ன இருக்கும்? அவனது செயல் என்று எண்ணிப் பெருமைப்பட, மகிழ ஒன்றுமே இராதே!

“அதை விடவும், இரண்டு பேரும் வந்து சேர எத்தனை நாட்கள் ஆகக் கூடும் என்றும் தெரியவில்லை. இதைச் சாக்கு காட்டிவிட்டு, இவர்கள் பங்களூருவைச் சுற்றினார்கள் என்றால்? அந்தப் பெண்களுக்காக எத்தனை நாள் காத்திருக்க முடியும்? இப்போதைய தேவையில் இரண்டு பேர் குறைந்தும் போகும்!” என்று புலம்பினார் மாணிக்!

“பொறுங்கள் மாணிக். எனக்கு அந்தப் பக்கம் ஹோசூரில் ஒரு வேலை இருக்கிறது. இந்த மருத்துவமனை வழியில் இருப்பதுதானே? நேரிலேயே போய்ப் பார்த்து சொல்கிறேனே!” என்று ஜெயதேவன் பெரிதாக அவருக்கு உதவ முன்வந்தான்.

மாணிக் குரானாவின் நன்றியை நியாயமற்று பெற்றுக்கொண்டு, மருத்துவமனையை நாடிப் போனான். அப்படிப் போனபோதுதான் ஓய்ந்து கிடந்த காஞ்சனியை, அவன் பார்த்தான்.

இப்போதே ஓங்கி அடித்து விடலாம்தான். நசுங்கிவிடுவாள். ஆனால் செத்த பாம்பை அடிப்பதில் என்ன வீரம் இருக்கிறது?

காஞ்சனி முழுப் பலத்தோடு, எப்படிப்பட்ட பலத்தோடு முன்தினம்

அவனை அலட்சியப்படுத்திவிட்டு வந்தாளோ, அதே பலத்தோடு இருக்கும்போது அடித்து விழத் தட்டினால் அல்லவா அவன் வீரன்!

சுந்தரி பற்றியும், ஏற்கனவே அவன் ஓரளவு அறிந்திருந்தான்.

எதையும் முழுமையாகச் செய்கிறவன் என்பதால், காஞ்சனியைக் கண்டு பிடிக்கிற வேலையைச் செய்தபோது, அவளது தற்போதைய பழக்க வழக்கங்கள் பற்றியும் விசாரிக்கச் செய்திருந்தான்.

அவன் கல்யாண ஏற்பாடுகளைச் செய்கிறபோது, அவள் காதல் கீதல் என்று ஏதாவது சொல்லி விடக் கூடாதே என்ற முன்னெச்சரிக்கை காரணமாக விசாரித்தது.

அப்போதுதான் உயிர்த் தோழியாக ஒருத்தி இருப்பது தெரிய வந்தது. அவள் தோழன் இல்லை என்கிற அளவில், அவனுக்குத் திருப்தியே. அதற்கு மேல் அந்த சுந்தரியை அவன் நினைக்கக் கூட இல்லை.

ஆனால், காஞ்சனியோடு அவளும் சேர்ந்தல்லவா கிளம்பியிருக்கிறாள்!

அல்லது, தூண்டியவளே அவள்தானோ? அப்படியிருந்தால், அந்தப் பெண் சுந்தரிக்கு ஏற்கனவே தண்டனை கிடைத்துவிட்டது. இனி அவள் நேராக நடப்பதற்குச் சில பல நாட்களாகும்!

இன்னும், பெற்றவர்கள் கவலைப்படக் கூடாது என்று இவ்வளவு வலியைத் தனியே பொறுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறாள்.

அத்தோடு, ஜெயதேவனோடு அவள் நேரடியாக சம்பந்தப் படவும் இல்லை! எனவே, இத்தோடு போய்த் தொலையட்டும்!

ஆனால் காஞ்சனி விஷயம் வேறு!

அவள் வருந்த வேண்டும் வருத்தப்பட்டே ஆக வேண்டும்!

வரப் போகிற மருமகளுக்காக வைரமாலை வரை வாங்கி வைத்த தாயிடம், அவளது ஆசை நிறைவேறாது என்று சொல்வதற்கு, அன்று அவன் எவ்வளவு வருத்தப்பட்டான்!

அந்த வருத்தத்தை, அவளுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டாமா?

ஆனால் இதற்குள், காஞ்சனியைப் பழிவாங்குவது பற்றிய அவனது கருத்து சற்று மாறியிருந்தது.

இவ்வளவு வசதி செய்து கொடுத்திருக்கிறான்., இப்போதும் அவனிடம் மன்னிப்புக் கேட்க அவளுக்குத் தோன்றவில்லையே!

என்னமோ, அவனுக்குச்  சம நிலையில் இருப்பவள் போலப் பணத்தைத் திருப்பித் தருகிறாளாம்!

இவளுக்காக ஒரு கணம் மனம் இரங்கியதே தப்பு!

வெறுமனே பழைய துன்பத்துள் தள்ளினால் மட்டும் போதாது. இன்னும் அதிகமாக அவள் துடிக்க வேண்டும்.

அவனுடைய தாய் அடைந்த ஏமாற்றம், அதை அளிக்க நேர்ந்தபோது அவன் அனுபவித்த வலி! இரண்டிற்காகவும் அவள் துடிக்க வேண்டும்.

கண்ணிழந்தான் பெற்றிழந்தான் என்று கம்பர் சும்மா எழுதி வைக்கவில்லை! அந்த வலி அவளுக்குத் தெரியட்டும்.

காஞ்சனி செய்த அநியாயம் மறந்து அவளுக்காகத் தன் மனம் இளகியதற்கும் சேர்த்து அவளைப் பழி வாங்கத் துடித்தது அவன் மனம்.

அதற்கான திட்டமும் அவனுள் தயாராயிற்று.

பயனாக, தோழிகளுக்கு ஓரளவு சாதகமாகவே மாணிக் குரானாவுக்குத் தகவல் அனுப்பினான் ஜெயதேவன். கூடவே மறுநாள் நேரில் வந்து சந்தித்து மேலே பேசுவதாகவும்.

அதன்பின் பெண்கள் இருவரையும் மறுபடியும் போய்ப் பார்த்தான்.

அவனது அதிருஷ்டமோ என்னவோ, சுந்தரி இன்னும் கொஞ்சம் தெளிந்திருந்தாள்., நல்ல ஓய்வுக்குப் பின் காஞ்சனி கிட்டத்தட்ட இயல்புக்குத் திரும்பியிருந்தாள்., இருவருமே அவர்களுக்கு அப்போது மிக முக்கியமான அவர்களது வேலை பற்றியே பேசிக் கொண்டும் இருந்தார்கள்!

பயிற்சிக்குப் போக முடியவில்லை  அது பற்றிக் காஞ்சனி அனுப்பிய தகவலுக்கு அங்கிருந்து பதில் ஏதும் வரவில்லை. ஏதும் பிரச்சினை ஆகுமோ என்பதுதான்  இருவரின் பெரும் கவலையாக இருந்தது.

“உன் கால் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறேன், சுந்தா. அதற்குப் பணம் கட்டிய ரசீதையும் அனுப்பினேன். ஆனால் என் விஷயம்தான் பெரிதாக நினைக்க ஒன்றுமில்லையே என்று எண்ணக் கூடும். உனக்குத் துணை தேவை என்று எழுதினேன். ஏற்பார்களோ என்னவோ? “ என்று காஞ்சனி கவலைப்பட்டாள்.

“என்னைப் பற்றியும்தான் ஒன்றையும் காணோமே. ஆனால், நீயாவது உடனே வந்து பணியில் சேர் என்று கூப்பிட்டால் போய்விடு,

காஞ்சி. என்னைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இரண்டு பேருக்கும் வேலையில்லாமல் போய்விடக் கூடாது. “ என்றாள் சுந்தரி.

“ஆனால் இங்கே உன்னைத் தனியே விட்டுவிட்டு எப்படிப் போவேன், சுந்தா? “ என்று கலங்கிய காஞ்சனி சட்டெனச் சிரித்தாள்.

சற்றே ஏளனம் கலந்த சிறு நகை.

கேள்வியாய் நோக்கிய தோழியிடம், “பின்னே, என்ன அசட்டுத்தனம் பாரேன்! என்னவோ எனக்கு பணியில் வந்து சேருமாறு யாரோ கூப்பிட்டுவிட்ட மாதிரி, உன்னை விட்டு எப்படிப் போவேன் என்று கலங்குகிறேனே! அந்த வகையில் இருவரும் ஒரே நிலையில்தானே இருக்கிறோம்! இதில், அந்த ஜெயதேவனின் பணத்தை வேறு திருப்பிக் கொடுக்க வேண்டும். இதற்கு மேல் அவரிடம் தவணை கேட்பது மகா அசிங்கம்!” என்றது காஞ்சனியின் குரல்.

அறை சுத்தமோ, ஆள் சுத்தமோ, அல்லது மருந்தோ, உள்ளே வந்துவிட்டுப் போனவர், கதவைச் சரியாக மூடிவிட்டுச் செல்லததால், உள்ளே நடந்த பேச்சு, ஜெயதேவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

உள்ளே செல்ல வேண்டிய தருணம் என்று தோன்ற, கதவை லேசாகத் தட்டி, அனுமதியோடு அறைக்குள் சென்றான்.

இருவருமே திகைத்தபோதும், “ஆயுசு நூறு.” என்று தன்னை மீறிச் சொல்லிவிட்டு, காஞ்சனி நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

“நூறாயுசு?” என்று புருவத்தை உயர்த்திக் கேட்டுவிட்டு, “அப்படியானால் நடந்தது என்னைப் பற்றிய பேச்சு. அது என்ன என்று கேட்டால், அநாகரீகமாக இருக்குமோ? “ என்று கேலி போல விவரம் கேட்டான் ஜெயதேவன்.

“அது . .அது . . . “ என்று திணறிய காஞ்சனி முகம் சற்றே கன்ற, “வவந்து . .. வந்து பணத்துக்குத் தவணை கேட்பதாகத் தயவு செய்து நினைக்க வேண்டாம். ஆனால் எங்களுக்கு வருமானத்தைத் தரக் கூடிய வேலை என்ன ஆகுமோ என்று சற்றுக் கவலையாக இருக்கிறது.” என்றாள்.

ஏன் என்று நன்றாகத் தெரிந்திருந்தபோதும், “என்ன விஷயம்?” என்று அக்கறை காட்டி ஜெயதேவன் விவரம் கேட்டான்.

மறைப்பதில் ஏதாவது பயன் இருந்தால் சொல்லாமல் இருக்கலாம்.

அத்தோடு, பல உதவிகள் செய்திருப்பவனிடம் சொல்லத் தயங்குவது கூட ஒரு மாதிரியாக இருக்கவே, சொன்னார்கள்.

தாடையைத் தடவி, “விபத்து விவரம் தெரிவித்தும், நிறுவனத்தில் இருந்து பதிலே வரவில்லையா? ஒரு வேளை நம்பவில்லையோ? “ என்று உரக்க யோசித்தான் அவன்.

தான் அனுப்பிய சிகிச்சை, மருத்துவமனை விவரங்களைக் காஞ்சனி கூறவும், “உன் தோழி சுந்தரி விஷயம் சரி. ஐந்து நாட்கள் முழு ஓய்வு, கால் நடக்க முடியாதது எல்லாம் சரிதான். ஆனால் உனக்கு? உனக்கு அதெல்லாம் தேவையில்லைதானே? நிறுவனத்தில் அதை யோசிக்க மாட்டார்களா?” என்று ஜெயதேவன் தன் கருத்தைத் தெரிவித்தான்.

முகத்தில் அறை வாங்கிய மாதிரி காஞ்சனி திகைத்தாள்.

ஓஹோ! அதனால்தான் நிறுவனம் மௌனம் சாதிக்கிறது!

இதன் பொருள், அவளது விதிப்படி நடக்கட்டும் என்று சுந்தரியை விட்டுவிட்டு, அவள் போய் வேலையில் ஒட்டிக் கொள்ள வேண்டும்! கெஞ்சிக் கூத்தாடியேனும்! ஜெயதேவன் சொல்லாமல் உணர்த்துவது இதைத்தான்.

“ஆனால், இந்த நிலையில் சுந்தரியைத் தனியே விட்டு நான் எப்படிப் போவேன்? அவளால் தனியாக சமாளிக்க முடியாதே! நர்ஸ் உதவியோடு ஓரளவு இயலக் கூடும் என்றாலும், அவளைப் பிரிந்து என்னால் எப்படிப் போக முடியும்? ஐயோ, என்னால் முடியாதே!” என்று தவித்தாள்.

சுந்தரிக்குமே அதே நிலைதான் என்பது, அவள் கண்களை இறுக மூடி விறைத்திருந்த விதத்தில் தெரிந்தது.

சற்று நேரம் பேசாமல் பார்த்திருந்துவிட்டு, “நட்பை முன்னிறுத்திப் பார்த்தால் பாராட்ட வேண்டியதுதான். ஆனால், எந்த நிறுவனமும் அதனதன் வேலையைத்தானே பெரிதாக எண்ணும்? அந்த வேலைக்கு நல்ல விலையும் கொடுக்கிறபோது, அதைத் தவறு என்றும் சொல்ல முடியாது! “ என்றான் ஜெயதேவன் இதமான குரலிலேயே.

“நீங்கள் முதலாளி நிலையில் நின்று பார்க்கிறீர்கள்.” என்று காஞ்சனி குற்றம் சாட்டினாள்.

“அதெப்படியோ? ஆனால் முதலாளிதானே ஊதியத்தைக் கையிலிருந்து கொடுப்பவன்?தான் கொடுக்கிற பணத்துக்கு ஈடாக வேலை நடக்க வேண்டும் என்று அவன் எதிர்பார்ப்பது தவறா?”

காஞ்சனியின் கை லேசாக நடுங்குகிறதோ என்ற சந்தேகம் ஜெயதேவனுக்கு.

நிச்சயமாகக் கண்களில் அச்சமேதான். சுந்தரியும் அதற்கு மேலாகத்தான் இருந்தாள். அவளது ஒரு கை நீண்டு வந்து, காஞ்சனியின் கரத்தை இறுகப் பற்றியிருந்தது.

மிரட்டியது போதும் என்று தோன்றிவிட, "உங்கள் நிறுவனத்தின் பெயரைச் சொல்லுங்கள். ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கலாம்." என்றான் ஜெயதேவன்.

அவர்களது போல, பங்களூருவில் எத்த்தனையோ நிறுவனங்கள். அவர்களைப் பணியில் ஏற்ற நிறுவனம் அவற்றில் ஒன்று.

சொல்லாமல் கிடைக்கப் போவது ஒன்றும் இல்லை என்கையில், சொல்வதில் என்ன கெட்டுவிடப் போகிறது? சொன்னார்கள்.

நாலு பேர் சேர்ந்து, ஒரு பெரிய நிறுவனத்தின் பங்களூரு கிளையின் பொறுப்பை முழுதாக ஏற்று நடத்துகிறார்கள். அதன் ஒரு பங்குதாரர்தான், ஜெயதேவனுடைய நண்பர் மாணிக் குரானா.

இந்த விவரத்தையோ, காலையில் அவரைப் பார்த்ததையோ எதுவும் சொல்லாமல், "அதன் பங்குதாரர்களில் ஒரு நண்பர் இருக்கிறார். அவர் மூலமாக உங்களுக்கு சாதகமாக ஏற்பாடு செய்ய முயற்சிக்கிறேன்." என்றான் ஜெயதேவன்.

"ப்ளீஸ சார்! இன்றைய எங்கள் நிலைமையில், இந்த வேலை எங்களுக்கு மிகவும் தேவை! எங்களுக்குச் சாதகமாகச் செய்து கொடுத்தீர்கள் என்றால், மனப் பூர்வமான நன்றி, சார்! " என்று காஞ்சனி தழைந்து பேசினாள்.

"என்னால் இயன்றதை நிச்சயமாகச் செய்வேன், காஞ்சனி. கவலையே பட வேண்டாம்!" என்றான் ஜெயதேவன் உறுதியான குரலில்.

"கட்டாயம் செய்வேன், பெண்ணே! நான் செய்கிற இந்தச் சின்னச் சின்ன நலன்களால் என்னைக் கடவுளாகக் கருதி, மனம் உருகி மறுகி என்னிடம் வந்து, என் காலடியில் நீ வந்து விழுவாய் பார், அப்போது, நான் யாரென்று உனக்குக் காட்டுகிறேன்." என்று அவன் உள்ளூரக் கறுவியது தெரியாமல், கண்களில் நீர் திரையிட, காஞ்சனி அவனுக்கு நன்றி கூறினாள்.

ஜெயதேவன் சொல்லிச் சென்றது போல, மறு நாளே பணியிடத்திலிருந்து காஞ்சனியின் லாப்டாப்புக்கு மெஸேஜ் வந்தது.

சுந்தரிக்குக் குணமானதும் நிறுவனத்துக்கு வந்து பணியேற்றுக் கொள்ளும்படியும், முன்னரே காஞ்சனி தெரிவித்தபடி அதிக நேரம்

இருந்து, விடுபட்ட பயிற்சியையும் முடித்து விடும்படியாகவும்.

அதிலிருந்த வாசகங்களைப் பார்த்ததுமே, ஜெயதேவனின் தூண்டுதல் என்று பெண்கள் இருவருக்கும் புரிந்தது.

இவ்வளவு உதவுகிறானே, இவனை நாம் நடத்திய முறை தப்போ என்று காஞ்சனிக்குத் தோன்றியது. அவனே சொன்னது போல, நாகரீகமாக நேரடியாகச் சொல்லிவிட்டே வந்திருக்கலாமோ என்று எண்ணினாள்!

சுந்தரியும் சேர்ந்துதான் அதைப் படித்தாள். அவளுக்கும் ஓர் எண்ணம் தோன்றியது.

அவளது இக்கட்டான நிலை புரிந்து அவர்களுக்குத் தேவைப்பட்ட உதவி செய்கிறானே! இவ்வளவு நல்லவனை வருத்தப்படுத்திவிட்டோமே என்று காஞ்சனியைக் கழிவிரக்கம் கொள்ள வைப்பது ஜெயதேவனின் நோக்கமோ என்று அவள் யோசித்தாள்.

நினைத்ததைத் தோழியிடம் சொல்ல விரும்பி அவள் புறம் திரும்பினால், காஞ்சனி தன் மொபைலில் ஜெயதேவனிடம் நன்றி சொல்லிக் கொண்டிருந்தாள்!

ஜெயதேவன் விரும்பியபடி காஞ்சனி ஆடிவிட்டாள் என்றே சுந்தரிக்குத் தோன்றியது! ஆனால் தோழியின் மனதில் நன்றியுணர்ச்சி நிரம்பியிருக்கும் இந்த வேளையில் அதைச் சொல்வதால் பயன் இராது என்று உணர்ந்து சும்மா இருந்துவிட்டாள்.

மருத்துவமனையில் சுந்தரியின் காலுக்காகச் சில பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்து அவளை “டிஸ்சார்ஜ்” செய்தார்கள். அந்தப் பயிற்சிகளின் மூலம், ஊன்று கட்டையின் உதவியோடு அவளால் நடக்க முடிந்தது.

டிஸ்சார்ஜ் ஆனதும் பங்களூரு செல்ல டாக்சி எடுக்கலாம் என்று காஞ்சனி முடிவு செய்தாள்.

செலவை எண்ணித் தயங்கிய சுந்தரியிடம், “இது ஓர் தவிர்க்க முடியாத ஒரு தேவை சுந்தரி. பஸ்சில் ஏறி இறங்குவது உனக்குக் கடினம் என்பதை விடவும், நம் துணிமணி மூட்டை முடிச்சுகளை பஸ்சில் ஏற்றி இறக்கி, பங்களூருவில் மறுபடியும் நம் இருப்பிடத்துக்கு அவைகளைக் கொண்டு போவது, லேசில் முடியாது. வரவேற்பில் கேட்டபோது இங்கே நல்ல நிறுவன டாக்சிகள் கிடைக்கும் என்றார்கள். கட்டணத்திலும் அவர்கள் ஏமாற்ற மாட்டார்களாம். அதனால் டாக்சியிலேயே போய் விடலாம்ப்பா.” என்று காஞ்சனி எடுத்துரைக்க, ஒரு பெருமூச்சுடன்

மற்றவளும் தலையாட்டினாள்.

இந்தச் செலவு பெரும்பாலும் தனக்காக என்று புரியாத முட்டாள் அல்ல அவள். அதைச் சொன்னால் காஞ்சனி கோபப்படுவாள். உன் நிலையில் நான் இருந்தால் செய்ய மாட்டாயா என்று கேட்பாள். சுந்தரியும் செய்திருப்பாள்தானே?

எனவே அடுத்தவள் சொன்ன சில்லறை சுகங்களை எண்ணி சந்தோஷப் படுவது போல, அவளும் காட்டிக் கொண்டாள்.

வரவேற்பில் சொல்லி டாக்சியைக் கூப்பிடப் எண்ணினால், அதற்குள் வரவேற்பிலிருந்தே அறை எண்ணில் கூப்பிட்டு, அவர்களை பங்களூருவுக்கு அழைத்துச் செல்ல ஒரு டாக்சி வந்திருப்பதாகச் சொன்னார்கள்.

விபத்துக்காளான பஸ் நிறுவனம் அனுப்பி வைத்திருக்கிறதாம்!

அதாவது ஜெயதேவனின் ஏற்பாடு!

காஞ்சனியின் முகம் பூவாய் மலர்ந்து விகசிக்க, சுந்தரி அவளை யோசனையோடு பார்த்தாள்.

சினேகிதியிடம் சொல்லாவிட்டாலும், காஞ்சனி இதை ஓரளவு எதிர்பார்த்தாள் எனலாம். ஏதேதோ பார்த்துப் பார்த்துச் செய்கிறானே., இந்தப் பெண்கள் பங்களூருவுக்கு எப்படிப் போவார்கள் என்றும் யோசிப்பான் என்று எண்ணினாள்.

கண்ணில் படுகிறபோது மட்டும் ஆஹோ ஓஹோ என்றுவிட்டு, மற்றபடி ஆளை அடியோடு மறந்து விடுகிற ரகமில்லை!

காரை ஓட்டி வந்தவன் பொருட்களை எடுத்து வைத்ததில் ஆகட்டும், செல்லும் வழியில் உணவு பானங்கள் வாங்கி வந்து கொடுத்தபோதும், அவர்கள் தங்குமிடத்தில் மீண்டும் சாமான்களைத் தூக்கி வந்து வைத்துவிட்டு அவர்கள் கொடுக்க முன்வந்த பணத்தை மறுத்த விதத்திலாகட்டும், அந்தக் காரோட்டி நடந்துகொண்ட முறையில் ஒரு தரம் தெரிந்தது.

வழியில் வாங்கி வந்த உணவுக்கேனும் பணம் வாங்கிக் கொள்ளும் படி வற்புறுத்தியதையும் அவன் ஏற்கவில்லை.

“இல்லீங்கம்மா. எல்லாத்துக்கும் பணம் தந்துதான் அனுப்பினாங்க. வேண்டிய உதவி செய்யும்படிதான் எனக்கு உத்திரவு. அதுக்குக் காசு வாங்கக் கூடாதும்மா. நான் கிளம்புறேன் தாயி.” என்றதோடு சென்றுவிட்டான்.

அது பற்றி காஞ்சனி உயர்வாகப் பேசும்போது, “ஆனால் நாம் வசிக்கும் இடம் அந்த ஜெயதேவனுக்குத் தெரிந்துவிட்டதே, காஞ்சி. அதை யோசித்தாயா?” என்று மெல்லக் கேட்டாள் சுந்தரி.

மற்றவள் திகைத்து நோக்குகையில், “அதை அறிவதற்காகவே டாக்சி அனுப்பி இருக்கலாம் அல்லவா? நீ அறியாதது அல்ல. நாம் இருவரும் தெரியாத ஊரில் தனியே வசிக்கப் போகிறோம். கொஞ்சம் எச்சரிக்கையோடு இருப்பது எப்போதுமே நல்லதுப்பா.” என்றாள் தொடர்ந்து.

ஜெயதேவனுக்கு நன்றியுரைக்க மொபைலை எடுத்த காஞ்சனி சற்றுத் தயங்கினாள்.

“நீ சொல்வது சரிதான் சுந்தா. இரண்டு பெண்களாய் நமக்கு நாம்தான் துணை என்றால் எச்சரிக்கையோடுதான் இருக்க வேண்டும். ஆனால் உதவியை ஏற்ற மட்டில் நன்றியும் தெரிவித்தாக வேண்டும் அல்லவா? “ என்றவள் சுருக்கமாக நன்றி தெரிவித்ததோடு பேச்சை முடிக்க முயன்றாள்.

ஆனால் எதிர் முனையில் அவன் ஏதோ சொல்ல, குரல் வாங்கியைப் பொத்தி, “உன்னிடம் பேச வேண்டுமாம்.” என்று கூறி, சுந்தரியிடம் மொபைலை நீட்டினாள்.

யோசனையுடனேயே மொபைலை வாங்கிப் பேசிய சுந்தரியின் முகமும் சற்று இலகுவாக மாறியது. “இல்லை ஜெயதேவன் சார். பயணம் கஷ்டமாகவே இல்லை. சொல்லப் போனால் மிகவும் சுகமாகவே இருந்தது. ரைட். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். மிக்க நன்றி. “ என்று பேச்சை முடித்தாள்.

“என்ன பார்க்கப் போகிறாய்?” என்று ஆவலாகக் கேட்ட காஞ்சனியிடம், “அலுவலகம் பக்கத்திலேயே யாரோ ஃபிசியோதெரப்பிஸ்ட் இருக்கிறாராம். எதற்கும் காலைக் காட்டி, அபிப்பிராயம் கேட்கச் சொன்னார்.” என்று உரைத்தவள் முகத்தில் மீண்டும் யோசனை படர்ந்தது.

“ஜெயதேவனைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியவில்லை, காஞ்சி. நமக்கு நல்ல முகம் காட்டினாலும், நாம் அறிந்த தகவல்கள் மாறாக இருக்கின்றன. அதனால் . .” என்று அவள் இழுக்க, “நாம் கவனத்துடனேயே இருந்து கொள்வோம். சரிதானா, மேடம் எச்சரிக்கை?” காஞ்சனி கேலியாகக் கேட்க சூழ்நிலை இலகுவாக மாறியது.

கவனத்தோடு இருப்பதன் அங்கமாகத் தங்கும் இடத்தை மாற்ற எண்ணி, அது வேண்டாம் என்றும் முடிவு செய்தார்கள்.

எப்படியும் அலுவலகத்தில் அவர்கள் தங்கும் இடத்து முகவரி இருக்கும். மாற்றினாலும் அந்த முகவரி கொடுக்க வேண்டும். ஜெயதேவனுக்கு அலுவலகத்தோடு தொடர்பு இருக்கையில் , இடத்தை மாற்றுவதில் பயன் என்ன?

ஆனால் சுந்தரி அஞ்சியது போல, அவர்கள் தங்குமிடத்துக்கு ஜெயதேவன் வரவில்லை.

சொல்லப் போனால், அவர்களது அலுவலகத்துக்கு வந்து போனவன், இரு பெண்களில் யாரையும் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

கான்டீனுக்குப் போய் சுந்தரிக்காகக் காஃபி வாங்கிவந்த காஞ்சனியை எதிரே பார்த்தபோதும், அவன் நின்று ஒரு வார்த்தை பேசவில்லை. கூட வந்த யாருடனோ பேசியவாறே போய்விட்டான்.

மருத்துவமனையில் சாதாரணமாகப் பேசியதாலோ என்னவோ, காஞ்சனிக்கு  மனதில் உறுத்திவிட்டது.

ஆனால் அவனுக்கு எத்தனையோ தொழில் விவகாரங்கள் அவளைச் சந்திப்பது அவசியம் இல்லையே. சொல்லப் போனால், அவன், அவளைத் தேடி வந்து சந்தித்தால்தானே, என்ன திட்டமோ என்று கவலையுற வேண்டும்?

எனவே வருந்துவது மடத்தனம் என்று காஞ்சனி தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

ஆனால் ஜெயதேவன் அலுவலகத்துக்கு வந்து சென்றபின், வேலையும் பயிற்சியுமாகக் கழுத்தை நெறித்தற்கு, இப்போது வேலை இலகுவாக இருப்பதாக அவள்  உணர்ந்தாள். கற்பனையோ என்று அவள் நினைக்கையில், சுந்தரி தந்த தகவல் வேறு சொன்னது.

இப்போது சுந்தரி ஊன்று கட்டை இல்லாமல் நடக்கத் தொடங்கி இருந்தாள். ஆனால் நடை கொஞ்சம் மெதுவாக இருக்கும்.

அப்படி அவள் மெதுவாக நடந்து தாமதமாக வருகையில், நிறுவனத்து எம்டியே அவர்கள் பிரிவு லீடரைக் கூப்பிட்டுப் புதிதாக வந்தவர்களுக்கு சற்று இலகுவான வேலை கொடுங்கள் என்று சொல்வதைக் கேட்க நேர்ந்ததாம்.

இது நடந்தது, ஜெயதேவன் வந்து சென்ற மறுநாள்! இதற்கு மேல்

ருசு என்ன வேண்டும்? அவன், அவர்களுக்கு நல்லது செய்யத்தான் விரும்புகிறான்!

ஒருவேளை, அவள் தரவேண்டிய பணத்தை நினைவூட்டுவதாகத் தோன்றுமோ என்று பேசாமலே போயிருப்பான்!

ஆனால் இதை சுந்தரி ஒப்புவாளோ, என்னவோ?

ஒரு வாக்குவாதத்தை விரும்பாமல், சுந்தரியிடம் சொல்லாமலே ஜெயதேவனிடம் காஞ்சனி நன்றி தெரிவித்தாள்.

கூடவே, மருத்துவமனைப் பணக் கணக்கைத் தரும்படியும். இன்னும் ஒரு வாரத்தில் முதல் ஊதியம் வந்துவிடும் என்பதால், அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க விரும்புவதாகவும் கூறினாள்.

அதற்குள் பணக் கணக்கைத் தயார் செய்து விடுவதாகக் கூறிய ஜெயதேவன் சுந்தரியைப் பற்றி விசாரித்துவிட்டு உரையாடலை முடித்தான்.

சுந்தரியிடம் இது பற்றிச் சொல்வதா வேண்டாமா என்று யோசித்துவிட்டு, அப்படி உடனடியாகச் சொல்ல வேண்டிய எதுவுமில்லை., பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று காஞ்சனி முடிவு செய்தாள்.

தாயார் கொடுத்த காஃபியை அருந்தியபடி மொபைல் பேச்சை முடித்த ஜெயதேவன் தன்னை மீறிச் சிரித்தான்.

அத்தோடு, டிராவல் ஏஜென்சி வைத்திருந்த அவனுடைய நண்பனைக் கூப்பிட்டு, இரண்டு நாளில் பங்களூருவுக்கு ஒரு டிக்கட் போடச் சொன்னான்.

இரண்டு நாட்கள் கழிந்தபின் பயணத்துக்குத் தயாராகக் கிளம்பி வந்த மகனைத் தேவகி கூர்ப் பார்வையால் ஆராய்ந்தாள்.

ஜின்சும் டீஷர்ட்டுமாக இயல்பு போலக் காட்டிக் கொண்டாலும் அவனுக்கு மிகவும் பாந்தமான உடை! பணக்காரக் களை! கவர்ச்சிகரமான புதிய ஹேர்கட்! வெட்டியது போலவே தெரியாமல் வெட்டி, ஆயிரக் கணக்கில் பில் வரும் சிகை அலங்காரம்! ஏற்றவாறு விலை உயர்ந்த கைக்கடிகாரம்! உதடுகளில் உல்லாசமான ஓர் அரைப் புன்னகை!

எல்லாம் கவனித்த தேவகி தன்னை மீறிக் கேட்டாள். "என்னடா, என் மருமகள் பங்களூருவில்தான் இருக்கிறாளா?" என்று.

மெல்லத் திரும்பித் தாயைப் பார்த்த மகனின் புன்னகை

மறைந்தது. “மருமகள்?

அது யாரம்மா?” என்று மெதுவாகக் கேட்டான்.

சற்றுத் திகைத்தபோதும், “அவள்தானடா காஞ்சனி. வாரத்துக்கு இரண்டு நாள் அவளைப் பார்க்கத்தானே போகிறாய்? “ என்று ஆவலாகக் கேட்டாள் அன்னை.

“ஆமாம்! அவளைப் பார்க்கத்தான் போகிறேன். ஏனென்றால் . . .” என்றவனின் குரல் பாம்பின் சீறலாக வெளிப்பட்டது. “திருமணத் தொடர்பாக ஒரு விழாவை வைத்துக்கொண்டு கடைசி நேரத்தில் கண் மறைந்து போனாளே, சம்பந்தப் பட்டவர்களுக்கு அந்த வலி எப்படி இருந்திருக்கும் என்று அவளுக்குத் தெரிய வேண்டாம்? அவள் விதைத்த வினை.அவள்தானே அறுத்தாக வேண்டும்?”

தாயார் திகைத்து நிற்கையிலேயே அவன் கிளம்பிச் சென்றுவிட்டான்.

# அத்தியாயம் -8

மகன் கிளம்பிச் சென்று வெகு நேரம் தேவகி அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

ஜெயதேவனுக்குக் கொஞ்சம் . . கொஞ்சமென்ன, நிறையவே பழி வாங்கும் வெறி உண்டுதான்.

படிப்பை நிறுத்திவிட்டுத் தாயுடன் சேர்ந்து தொழிலை ஓரளவு நிமிர்த்தியதுமே, தந்தை இறந்ததும் மோசம் செய்த உறவினர்களைப் பழி வாங்க அவன் துடித்தான்.

ஆனால் தேவகிக்கு அது பிடிக்கவில்லை. காரணம், பெரும் தியாகியாக அவர்களை அவள் முழுதாக மன்னித்துவிட்டாள் என்பதல்ல.

மைத்துனர்களும் நாத்தனாரும் செய்தது அநியாயம்தான் பெரும் துரோகமே.

அதிலும் உல்லாசமாகக் கழிக்க வேண்டிய கல்லூரி மாணவப் பருவத்தில் மகன் இரவு பகல் பாராமல் உழைத்ததைப் பக்கத்தில் இருந்து பார்த்ததால், அவள் மனமும் கொதிக்கத்தான் செய்தது.

ஆனால் அவள், அன்றைய நிலையைத் தாண்டி, நீண்ட எதிர்காலம் பற்றி யோசித்தாள்.

இப்போது ஓரளவு நிமிர்ந்துவிட்டாலும், இதை இன்னமும் நிலைப்படுத்திக் கொள்ளாமல் மற்றவர்களைத் தாக்குவதில் சக்தியைச் செலவு செய்வது கூடாது என்று அவள் நினைத்தாள்.

மகனிடமும் அதையே சொன்னாள்.

"இவர்களை உண்மையிலேயே பழி வாங்குவது எப்படி என்று நினைக்கிறாய், கண்ணா? சொத்து பெரிது என்று நம்மை அலட்சியப்படுத்திய இவர்கள் கண் முன்னே எட்டமுடியாத உயரத்துக்கு வளர்ந்து காட்டுவதே ஆகும். அப்படி வளர்ந்துவிட்ட பிறகு, உள்ளே எரிந்தாலும், வெளியே அவர்கள் இணக்கமாகக் காட்டித்தானே ஆக வேண்டும்?

"அப்படி இளித்துக்கொண்டு வர நேரும்போது, இவனைக் கிள்ளுக் கீரையாக எண்ணித் தூக்கிப் போட்டோமே என்ற குன்றல் வராமல் போகாது. அப்படி அவர்களைக் குன்ற வைப்பதுதான் உன் உண்மையான வெற்றி. " என்று மகனின் கோபத்தை வளர்ச்சி வழித் திருப்பி, மேன்மேலும் அவனை வளர வைத்தவள் அவள்தான்.

மற்றவர்களால் எட்ட முடியாத நிலை வந்தபின், மற்ற உறவினர் மகன் சொல்லுக்கு ஆடுவதையும், அவ்வப்போது ஜெயதேவன் சுள்ளென்று ஏதாவது சொன்னாலும் அவர்கள் அதைக் கண்டும் காணாமல் விட்டுவிடுவதையும் பார்க்கும்போது தேவகிக்கு வேடிக்கையாக இருக்கும்.

ஓரளவு திருப்தியே என்று கூடச் சொல்லலாம். அன்று எதிர்காலம் என்ன ஆகுமோ என்று மலைத்துக் கலங்கியது, அவளும்தானே?

ஆனால் என்ன முயன்றும் அவளால் காஞ்சனி மீது ரொம்பக் கோபம் கொள்ள முடியவில்லை.

மகனோடு அவளையும் காஞ்சனி அவமானப்படுத்திவிட்டுப் போயிருக்கிறாள் என்றபோதும், என்ன நிலையில் அப்படிப் போனாளோ என்றும் அவளது யோசனை ஓடியது.

அவளைப் பார்த்த இரு தருணங்களையுமே தேவகி அடியோடு மறந்ததில்லை.

அத்தோடு காஞ்சனியின் விருப்பம் பற்றிய பேச்சு எழுந்த மாதிரியே இல்லையே!

படித்து, தன் காலில் நிற்கக் கூடிய ஒரு பெண், பழைய காலம் போல, யார் என்றே தெரியாத ஒருவனுக்குக் கழுத்தை நீட்டு என்றால் செய்வாளா? ஜெயதேவன் திருமணம் பேசி முடித்த விதமும்

அப்படிப்பட்டதுதானே?

தாயென்று தனக்கு மரியாதை தரும் மகன் மற்ற பெண்களை மதிக்கவில்லை என்ற வருத்தம், இந்தத் திருமண விஷயத்தில் தேவகிக்கு இருந்தது.

மகனுமே தன் தவறை உணர்ந்து, காஞ்சனியைச் சந்தித்து நல்லபடியாகப் பேசிப் பழகி அவளது அன்னைப் பெற முயற்சிக்கிறான் என்றுதான் அவள் நினைத்திருந்தாள். அவளுக்கு அதில் மிகுந்த மகிழ்ச்சியும் கூட!

ஆனால் எல்லாம் பொய்யாகி, அவளைப் பழிவாங்குவதே அவனது நோக்கம் என்றால், அந்தச் சின்னப் பெண் எப்படித் தாங்குவாள்?

முடிவு செய்துவிட்டால், யார் சொல்லியும் மகன் கேட்க மாட்டான்.

அந்தக் காஞ்சனியைத்தான் எச்சரித்தாக வேண்டும். ஆனால் எப்படி?

வெகு நேரம் யோசித்துவிட்டு, சிதம்பரம் குடும்பத்தோடு பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தேவகி முடிவு செய்தாள்.

அது, அவ்வளவு கடினமாகவும் இல்லை. மகன் சொல்லியிருந்த சில விவரங்களை வைத்து, சிதம்பரத்தின் வீட்டருகே இருந்த கோயிலுக்கும் சூப்பர் மார்க்கெட்டுக்கும் ஓரிரு தரம் போய் வந்தாள்.

பெரிய காரில் வந்து சென்ற தேவகியிடம் பேசிப் பழக யார் மறுப்பார்?

பழகிய அளவில், காஞ்சனி மீது இன்னும் பரிவும் பிரியமும் அவள் மனதில் வளர்ந்தன.

அந்த ஒரு மாதத்துக்குள் ஜெயதேவன் ஐந்து முறை பங்களூருக்குப் போய் வந்தான்.

ஒரு சமயம் காஞ்சனியிடம் நின்று பேசுவான். அடுத்தத் தடவை, அவனது முதுகைத்தான் அவள் பார்க்க முடிந்தது. வந்த வேலை முடிந்து, அவன் வெளியே போய்க் கொண்டிருந்தான்.

இன்னொரு தரம் சுந்தரியிடம் கால் எப்படி இருக்கிறது என்று விசாரித்ததாக அவள் சொன்னாள்.

அடடா, அவனைப் பார்த்துப் பேச முடியாமல் போய்விட்டதே என்று காஞ்சனி வருத்தப்பட, அவளை ஏறிட்டுப் பார்த்து “அவரிடம் நீ என்ன பேச வேண்டும்?” என்று சுந்தரி கேட்டாள்.

“அஅது . . வந்து நீயே கூடக் கேட்டிருக்கலாமே. அந்த ஹோசூர் மருத்துவமனைச் செலவுக் கணக்கு எவ்வளவு ஆயிற்று என்று அவர் சொல்லவே இல்லையே! இன்னும் நாலு நாட்களில் சம்பளம் வந்ததும் கொடுக்க வேண்டாமா?” என்று காரணம் கண்டு பிடித்துச் சொன்னாள் காஞ்சனி.

“ம், நான் கேட்டேன்பா. அவர் ரொம்ப பிசியாம். இன்னும் அந்தக் கணக்கைப் பார்க்க முடியவில்லையாம். ரொம்ப பிசியாம்.” என்றாள் மற்றவள் நம்பாத குரலில்.

அவள் யாரை நம்பவில்லை? ஜெயதேவனையா? அல்லது தோழியான தன்னையேவா? விளக்கம் கேட்கக் காஞ்சனிக்கு விருப்பம் வரவில்லை.

ஒரு மாதம் முடிந்துவிட சம்பளம் கைக்கு வந்தது. இரண்டு பேருக்கும் ஒரே சந்தோஷம்.

அநத ஒரு மாதமுமே, மிகவும் கணக்காகத்தான், தேவைக்கு மட்டும் சிக்கனமாகவே இருவரும் செலவு செய்தனர்.

“பேயிங் கெஸ்ட்” ஆகத் தங்கிய இடத்திலேயே உணவு அலுவலகம் போய்வர அவர்கள் அனுப்பிய கார், தவிர மிகவும் அவசியப்பட்ட பொருட்கள் தவிர எதையும் வாங்கியது இல்லை. எதிர்பாராமல் நேர்ந்த விபத்தும் அதனால் ஏற்பட்ட செலவும், கையில் பணம் வைத்திருப்பதன் அவசியத்தை அவர்களுக்குப் போதித்திருந்தன.

அவரவர் கணக்கில் போடப்பட்ட பணத்தை ஒருவருக்கொருவர் காட்டி இருவரும் மகிழ்ந்தனர்.

சுயக் கட்டுப்பாட்டைக் கொஞ்சம் தளர்த்தி, அன்று கொஞ்சம் ஷாப்பிங், வெளியே சாப்பாடு என்று திட்டமிட்டார்கள். .

தங்கியிருந்த இடத்தில் இரவு உணவு தேவையில்லை என்று ஏற்கனவே சொல்லியிருந்தனர்.

அவர்கள் தங்கியிருந்த இடத்துக்கு வெளியே வந்து பஸ்சுக்காக நிற்கும்போது தோழிக்கு பஸ் ஏறுவது கடினமாக இருக்கும் என்று காஞ்சனி உணர்ந்தாள்.

எனவே, “நாம் டாக்சியில் போவோம்ப்பா. இன்று ஒரு நாள் ஜாலியாகச் செலவு பண்ணுவோமே! “ என்றாள்.

அங்கே பிரபலமாக இருந்த டாக்சி நிறுவனத்தின் எண்ணக் கூப்பிட்டு டாக்சிக்குச் சொன்னார்கள்.

அனுப்பப்படும் டாக்சி எண், டாக்சி ஓட்டி வருகிறவரின் மொபைல் எண்ணை நிறுவனம் கொடுக்க, காஞ்சனி செல்லில் பதிவு செய்துகொண்டாள்.

சீக்கிரமே அந்த எண்ணில் இருந்து டாக்சி டிரைவர் அழைத்தது இருவருக்கும் ஒரே சந்தோஷம். ஆனால் அந்த சந்தோஷம் சில வினாடிகளிலேயே மறைந்து போயிற்று. ஏனெனில் அந்த டிரைவர் பேசியது கன்னடத்தில்!

அவர்கள் இருக்கும் இடம் வருவதற்கான வழியை . .. லான்ட் மார்க்கைக் காரோட்டி கேட்பது இருவருக்கும் ஒருவாறு புரிந்தது. ஆனால் அந்த இடத்தைப் பற்றிய விவரத்தைக் கன்னடத்தில் எப்படி விளக்குவது? ஆங்கிலத்தில் சொன்னாலோ, டாக்சி டிரைவருக்குப் புரியவில்லை.

சில நிமிஷங்கள் திணறியபின் சுந்தரி, அதே பஸ் நிறுத்தத்தில் சற்றுத் தள்ளி நின்ற மனிதனை, "ஹலோ சார். . " என்று அழைத்து, "ஓர் உதவி செய்ய முடியுமா?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

சில நிமிஷங்களாக அவர்கள் பட்ட பாட்டை அவனும் சற்றுக் கவனித்திருப்பான் போலும்.

"என்ன, ஏதாவது பிரச்சினையா?" என்று விவரம் கேட்டான் அவன்.

"டாக்சி புக் பண்ணினோம். டிரைவருக்கு ஆங்கிலம் தெரியவில்லை. அவரிடம் இந்த இடம் பற்றி விவரம் சொல்ல முடியுமா?" என்றாள் அவள்.

முன் பின் தெரியாத ஆளிடம் கேட்கிறாளே என்று இருந்தபோதும், வேறு வழி தெரியாமல் காஞ்சனி பேசாமல் நின்றாள்.

"கொடுங்கள்." என்று செல் ஃபோனை வாங்கிய மனிதன் கன்னடத்தில் மடமடவென்று பேசினான்.

பேசிவிட்டு, செல்ஃபோனை சுந்தரியிடம் கொடுத்தான். "இரண்டு தெரு தள்ளிதான் டாக்சி நிற்கிறதாம். உடனே வருவதாகச் சொன்னார். ஆனால், எங்கே போக வேண்டும் என்று டிரைவரிடம் எப்படிச் சொல்லுவீர்கள்?" என்று கேட்டான்.

"கமர்ஷியல் ஸ்ட்ரீட்!" என்றனர் இருவரும் கோரசாக. உள்ளூரப் பெருமையாகவும்.

அவர்கள் இருவர் முகங்களையும் யோசனையாகப் பார்த்தான்

அந்தப் புதியவன்.

பிறகு, “பாருங்கள், நீங்கள் ஊருக்குப் புதியவர்களாகத் தெரிகிறது. காமர்ஷியல் ஸ்ட்ரீட் பெரிய இடம். ஆனால் அதற்குள் ஆட்டோ செல்லாது. அங்கே சஃபீனா ப்ளாசா என்று சொன்னால் . .அங்கே இறக்கி விடுவார்கள். சுற்றிச் சுற்றி உங்களுக்கு வேண்டிய பொருள் எல்லாம் வாங்கலாம். ஆனால், சஃபீனா ப்ளாசாவில்தான் இறங்கியாக வேண்டும். எனவே, டிரைவரிடம் அந்த இடத்தையே சொல்லி விடுகிறேன்..” என்று கூறினான்.

“ஓ!” என்று திகைத்துவிட்டு, “ரொம்பத் தாங்க்ஸ், சார்” என்று காஞ்சனி நன்றி உரைக்க, “ஆமாம் சார் ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்!” என்று முகத்தில் மகிழ்ச்சியைக் காட்டி சுந்தரி கூறினாள்.

கூறிவிட்டுத் தோழியின் பக்கம் திரும்பி, “நல்லவேளைப்பா, இந்த மனிதரிடம் உதவி கேட்டோம். இல்லையானால், மறுபடியும் டாக்சி ஓட்டியிடம் விழி விழியென்று விழித்துக் கேவலமாகிப் போயிருக்கும்! “ என்றாள் நிம்மதியோடு.

பிரச்சினை தீர்ந்த ஆறுதலில் அவள் பேசியது தமிழில்.

ஆனால் ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்த அந்த மனிதனும் பளிச்சென்று முகம் மலர்ந்து , “நீங்கள் தமிழா?” என்று ஆவலாகத் தமிழில் கேட்டான்.

பெண்கள் இருவரும் வியப்புடன் நோக்க, அவன் தொடர்ந்து பேசினான். “நானும் தமிழ்தான். ஆனால் இங்கே இருப்பதானால் ஹிந்தி அல்லது கன்னடம் பயில்வது நல்லது.” என்று எடுத்துச் சொன்னான். “நானும் அப்படிப் பயின்றவன்தான்.”

டாக்சி வந்து நிற்கவும், “பாருங்கள், நான் சொன்ன சஃபீனா ப்ளாசாவில் டாக்சியை நிறுத்தச் சொல்லுகிறேன். அங்கே போய்விட்டால் உங்களுக்கே தெரியும். விருப்பம் போல வேண்டியதை வாங்கலாம். “ என்று புன்னகையோடு அவர்களிடம் கூறிவிட்டு, அதன்படியே டாக்சி ஓட்டியிடமும் கன்னடத்தில் விவரம் தெரிவித்தான்.

அத்தோடு வேகமாக சட்டைப் பையில் இருந்து சின்ன நோட்பாட் ஒன்றை எடுத்து ஏதோ எழுதி, அந்தக் காகிதத்தைக் கிழித்து அவர்களிடம் கொடுத்தான்.

“இது என் மொபைல் எண். ஏதாவது தேவை என்றால் தொடர்பு கொள்ளுங்கள்.”என்றான்.

காஞ்சனி முதலில் டாக்சியில் ஏறி, உட்புறம் நகர்ந்து கொள்ள,

அடுத்து ஏறப் போன சுந்தரி திடுமெனத் திரும்பி அந்த பஸ் ஸ்டான்ட் மனிதனைப் பார்த்து,

“நீங்கள் எங்கே போக வேண்டும்?” என்று விசாரித்தாள்.

“கன்டோன்மென்ட் ஸ்டேஷன்.” என்று அவன் பதில் கூறினான்.

அறியாத மனிதனிடம் இதை ஏன் கேட்கிறாள் ? வேண்டாமே என்று காஞ்சனி நினைக்கும்போதே, “அது எங்கள் வழிதானே, சார்? ஏறுங்கள். உங்களை அங்கே இறக்கி விட்டுவிட்டுப் போகிறோம்.” என்று அவனை டாக்சியில் ஏறச் சொல்லிவிட்டாள் சுந்தரி.

அவன் உடனே ஏறிவிடவில்லைதான். “அது . . .” என்று தயங்கினான்தான்.

ஆனால், “பெரிய உதவி செய்தீர்கள் சிறு கைமாறு. என்ன காஞ்சி, அப்படித்தானே? சும்மா வாருங்கள், சார்!” என்று வற்புறுத்தி அழைத்தாள் சுந்தரி.

காஞ்சனிக்குப் பிடிக்காவிட்டாலும், சினேகிதி இவ்வளவு சொன்ன பிறகு சும்மா இருந்தால் நன்றாக இராது என்று எண்ணி அவளும் “ஆமாம் சார். நீங்கள் இல்லாவிட்டால் ரொம்பத் திண்டாடி இருப்போம். இந்த ஒரு சின்ன உதவியாவது செய்கிறோமே. ஏறிக் கொள்ளுங்கள்.” என்றாள்.

“நான் செய்தது பெரிய உதவி அல்ல. ஆனால் வழிதான் என்பதால் மறுக்கத் தேவையில்லை என்றும் தோன்றுகிறது.” என்று டாக்சியில் முன்புறம் ஏறிக் கொண்டான் அவன்.

மறுக்கிற மாதிரி பெரிய பிகு பண்ணினாலும் கூட ஏறிக் கொண்டானே என்று காஞ்சனிக்கு எரிச்சல் வந்தது.

ஆனால் செல்லும் வழியில், “கடைகளில் பெரும்பாலும் தமிழ் பேசுவார்கள். அதனால் பொருட்களை வாங்குவதில் உங்களுக்குப் பிரச்சினை இராது. ஆனால் . . . உங்களிடம் ஒன்று சொல்லியே ஆக வேண்டும். இப்படி என்னை ஏற்றிய மாதிரி, வேறு யாரையும் நம்பி ஏற்றாதீர்கள். இரண்டு பேருமே சின்னப் பெண்களாகத் தெரிகிறீர்கள்., ஊருக்கும் புதிது. அதனால் எப்போதும் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது.” என்றான் அவன் தமிழில்.

அதாவது, அவர்கள் ஊருக்குப் புதியவர்கள் என்று டாக்சியோட்டிக்குப் பறை சாற்றவில்லை!

பரவாயில்லைதானோ என்று எண்ணினாள் காஞ்சனி.

அவன் இறங்கிச் செல்லும்போது, “பாருங்கள், இருப்பிடத்துக்குத் திரும்பிச் செல்லும்போது, டாக்சி வரவழைப்பதானால், எம்ஜி ரோடு மெட்ரோ ஸ்டேஷன் என்று காத்து நிற்கும் இடத்துக்கு அடையாளம் சொல்லுங்கள். அந்த இடம் தெரியாத ஆட்டோ, டாக்சி எதுவும் இராது. அதே போல உங்கள் ஷாப்பிங் முடிந்ததும் அருகில் வரும் ஆட்டோவைக் கூப்பிட்டு, இந்த ஸ்டேஷனில் இறக்கிவிடச் சொல்லுங்கள். டாக்சியில் திரும்பிச் செல்லும்போது, உங்கள் இடத்துக்கு வழி தெரியும் அல்லவா? பத்திரமாகப் போங்கள்.” என்று சொல்லிவிட்டுப் போனான்.

பரவாயில்லை என்று தான் நினைத்ததைச் சொல்ல அவள் வாயெடுத்தபோது, “ரொம்ப நல்லவர் காஞ்சி.” என்றாள் சுந்தரி.

மறுநாள் விடுமுறை நாள் என்பதால் நிதானமாகக் கொஞ்சம் வின்டோ ஷாப்பிங், கொஞ்சம் நிஜ ஷாப்பிங் என்று கொஞ்சம் பணத்தையும்  ஊதிவிட்டு இருவரும் சந்தோஷமாக இருப்பிடத்துக்குத் திரும்பிச் சென்றார்கள்.

மாடியில் இருந்த அவர்களது அறையை அடைந்ததுமே, மொபைலை எடுத்து, “பிரச்சினை எதுவும் இல்லாமல் திரும்பி வந்துவிட்டோம்.” என்றாள் சுந்தரி.

அவள் வீட்டுக்கு என்று எண்ணிக் காஞ்சனி முறுவலோடு பார்க்க, “உங்கள் யோசனைப்படி முப்பது நாட்களில் கன்னடம் படிப்பதற்கு ஒரு புத்தகமும் வாங்கி வந்துவிட்டோம். “ என்று சுந்தரி தொடர்ந்து கூறவும், மற்றவள் திடுக்கிட்டுப் போனாள்.

புதிய, மொழி அறியாத இடத்தில் இரு பெண்களாகத் தனியே இருக்கப் போகிறோம் என்று, சில பலப் பாதுகாப்பு வரை முறைகளை இருவரும் வகுத்து வைத்திருந்தனர்.

டக்கென்று அவைகளைக் காற்றில் வீசுகிறாளே!

அதிர்ந்து போனவள், சுந்தரி பேச்சை முடித்ததும  “அந்த மனிதரோடு ஏன் பேசினாய், சுந்தரி? இப்போது நம் செல் எண் அவரிடம் இருக்குமே.” என்றாள் கவலையோடு.

“இருக்கட்டுமே காஞ்சி. அவரைப் பார்த்தால் ரொம்ப நல்லவராகத்தானே தெரிகிறது?” என்று கேள்வியையே, அறிவிப்பு போலச் சொன்னாள் மற்றவள்.

“அதெப்படிக் கண்டுபிடித்தாய், சுண்டெலி? அவர் நெற்றியில் நல்லவர் என்று எழுதி ஒட்டியிருந்ததை நான் பார்க்கவில்லையே!”

என்று அதிசயித்தாள் காஞ்சனி.

இலகுப் பேச்சாக எண்ணிச் சிரித்துவிட்டு, "செய்கைகள் சரியாக இருந்தால் எழுதி ஒட்டாமலேயே தெரியும். மூளைக்குக் கொஞ்சமேனும் வேலை கொடுத்து யோசி, காஞ்சிம்மா.

இதுதான் சாக்கு என்று வழி காட்டுவதாகச் சொல்லி கமர்ஷியல் ஸ்ட்ரீட்டுக்கு நம்மோடு கூட வரவில்லையே. இதிலிருந்தே தெரியவில்லையா?" என்று புன்னகையுடனேயே கூறிவிட்டு, வாங்கி வந்த துணிமணிகளை சந்தோஷமாகப் பிரித்துப் பார்க்கலானாள் சுந்தரி.

"ஏய், இந்த உன் டாப் பிரமாதம்ப்பா. எனக்குப் பொருந்துகிற கலரில் இல்லாமல் போய்விட்டது பார்! ஆனால் என்னுடைய இந்த ஷார்ட் குர்த்தி ரொம்ப நன்றாக இல்லை?" என்று கலகலத்தவளின் பேச்சில் இயல்பு போலக் கலந்து கொண்டாலும், உள்ளூரக் காஞ்சனிக்குச் சற்றுக் கலக்கமாகவே இருந்தது.

பொதுவாக சுந்தரி ஆண்களைப் பெரிதாக மதிப்பதில்லை. தந்தை தேசிகன் மட்டுமே விதி விலக்கு.

அவ்வளவு உதவிகள் செய்தபோதும், ஜெயதேவனை அவள் நல்லவனாக ஒத்துக் கொண்டதில்லை. என்னவோ உள் நோக்கம் இருக்கிறது., ஜாக்கிரதையாக இரு என்று காஞ்சனிக்கே எச்சரிக்கை செய்வதுண்டு.

ஒரே முறை பார்த்த, மொழி தெரிந்ததால் ஒரு சாதாரண உதவி செய்த இந்த மனிதனை இவ்வளவு உயர்வாக எண்ணுகிறாளே! அவன் இளைஞன் என்பது வேறு நினைவு வர, காஞ்சனிக்குள் கவலை பிறந்தது.

தொடர்ந்த நாட்களில் அந்தக் கவலை வேகமாக வளரவும் செய்தது.

பயிற்சி முடிந்து பணியில் அமர்த்தியபோது, தோழியர் இருவருக்கும் வெவ்வேறு பிரிவில் வேலை செய்யும் நிலை ஏற்பட்டது. யார் முதலில் முடித்தாலும் அடுத்தவரைப் போய்ப் பார்த்து, இருவருமாகச் சேர்ந்து தங்குமிடத்துக்குத் திரும்பிச் சென்றனர்.

ஒரு நாள் காஞ்சனியின் வேலை முடிந்திருக்கவில்லை. ஆனால் தன் வேலையை முடித்துவிட்டு வந்த சுந்தரி, சும்மா காத்திருக்கும் நேரத்தில் எதிர்ப்புறம் இருக்கும் ஒரு சிறு கடையில், எப்போதேனும் பசித்தால் கொறிப்பதற்கான பிஸ்கட், கடலை பாக்கெட்வாங்கி வருவதாகச் சொல்லிப் போனாள்.

விடுமுறை நாட்களில் டீவியில் எதையாவது பார்த்தபடி இப்படிக் கொறிப்பதுண்டு. ஆனால் எதையுமே அளவு மீறி உண்ண மாட்டார்கள்.

காஞ்சனி அவளது வேலையை முடித்து, கடையில் கூட்டமோ என்று எண்ணிப் பத்து நிமிஷங்கள் காத்திருந்துவிட்டு, எதற்கும் கடைக்கே போய்ப் பார்க்க வேண்டியதுதான் என்று கிளம்புகிற வேளையில் சுந்தரி திரும்பி வந்து சேர்ந்தாள்.

காத்திருந்த எரிச்சலே இல்லாமல் மலர்ந்த முகத்தோடு!

“காஞ்ச், இன்று நான் கடையில் யாரைச் சந்தித்தேன் தெரியுமா?” என்று சுந்தரி உற்சாகமாகக் கேட்கும்போதே, காஞ்சனிக்கு வயிற்றினுள் பிசையத் தொடங்கிவிட்டது.

வேறு யார் அங்கே தெரிந்தவர்? அதுவும் சுந்தரி இவ்வளவு உற்சாகம் காட்டும் அளவுக்கு?

அவள் அஞ்சியது போலவே, அந்த சுகேசன்தான்!

இதற்குள்ளாக மொபைல் பேச்சின் மூலமாகவே, அந்தக் கன்னட மொழி அறிந்திருந்தவனின் பெயர் தெரிந்திருந்தது. கஷ்டப்பட்டு சுந்தரி கன்னடம் படித்துக் கொண்டும் இருந்தாள்.

நல்லது என்பதால் காஞ்சனியும் சேர்ந்து பயின்றாள் என்றாலும் தினமும் இரண்டொரு வார்த்தைகளேனும் படித்தாக வேண்டும் என்ற தூண்டுதல் சுந்தரியினதுதான்.

மொபைல் தாண்டி, இப்போது நேரிலும் சந்திப்பா?

கொஞ்சமும் பிடிக்காவிட்டாலும், தோழிக்காக அவளும் உற்சாகம் காட்டி, “அதிசயமாக இருக்கிறதே! அவர், இங்கே எங்கே வந்தார்?” என்று வினவினாள் .

ஒரு வார்த்தைக்காகக் காத்திருந்தது போல, சுந்தரி படபடவென்று பொழிந்து தள்ளிவிட்டாள்.

சுகேசனும் இந்தப் பகுதியில்தான் வேலை பார்க்கிறான். அத்தோடு அவன் வசிப்பதும், அவர்கள் இருக்கும் இடத்துக்கு இரண்டு தெரு தள்ளித்தான். கூடவே பணி புரியும் நாலு பேராகச் சேர்ந்து ஒரு ஃப்ளாட் எடுத்து வசிக்கிறார்கள்.

“முறை போட்டுக்கொண்டு வீடு சுத்தம் செய்வது பாத்திரம் கழுவுவது எல்லாம் செய்வார்களாம், காஞ்சி. பாத்ரூம் கூட, ஆளுக்கு ஒரு நாள் கழுவுவார்களாம். “நம் வேலை., நாம் செய்கிறோம். இதில் கௌரவம் பார்க்க என்ன இருக்கிறது” என்று கேட்கிறார்டி. எனக்கு என்

அப்பாவிடம் மாதிரி அவர் மேல் ரொம்ப மரியாதையே வந்துவிட்டது.” என்று புகழ்ந்து தள்ளிவிட்டாள்!

இன்னொரு நாள், அவர்கள் பணி புரியும் அலுவலகத்துக்கே வந்து, ஆறு செவ்வாழைப் பழங்களைக் கொடுத்துவிட்டுப் போனான்.

அந்த வார இறுதிக்கு ஊருக்குப் போய் வந்தானாம். “அங்கே எங்கள் தோட்டத்தில் காய்த்தது. என் பெற்றோரிடம் உங்களைப்பற்றிச் சொன்னேன். தனியாக இருக்கிறார்களா? முடிந்தவரை உதவி செய் என்றார்கள் !” என்றான்.

இப்போது சுகேசனுடைய குடும்பமே புகழுக்கு உரியதாக ஆயிற்று!

எல்லாமே அந்த சுகேசன் சொல்வதுதானே? அவன் நம்பத் தகாதவனாக இருந்து இவளை ஏமாற்றிவிட்டால்?

இந்தக் கவலையோடு தன் சஞ்சலமும் சேர்ந்துகொள்ள காஞ்சனிக்கு மூச்சு முட்டியது.

இடையிடையே ஜெயதேவனை சந்திக்க நேர்ந்திராவிட்டால், இந்தக் கவலையில் மூழ்கி அவளுக்கு என்னமாவது நேர்ந்திருக்கும் என்றே சொல்லலாம். அந்த அளவு காஞ்சனி தவித்துப் போனாள்.

நல்லவேளையாக அது போல எதுவும் நேராமல், ஜெயதேவனோடான சந்திப்புகள் அவளைக் காத்தன.

ஒரு நாள் வழியில் பார்த்த ஜெயதேவன் அப்படியே அசந்து போனது போல “ஹோ!” என்றான்.

அவள் நின்று அவனைப் பார்க்கவும், “என்ன, பங்களூரு புத்தாடையா? ஆளை அசத்துகிறதே!” என்றாள் பாராட்டுதலாக.

முன்பு எப்படி எடுத்திருப்பாளோ? இப்போது சுந்தரி பற்றிய ஏக்கத்தில் இருந்தவளுக்கு, இந்தப் பாராட்டில் உச்சி குளிர்ந்து போனது.

கூடவே அவனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை வேட்டு விடுவதாக எண்ணுவானோ என்று தோன்றவும், “புதிதுதான் சார். ஆனால் உங்களுக்குத் தரவென்று தனியாகப் பணம் எடுத்து வைத்திருக்கிறோம். அந்தக் கணக்கு எவ்வளவு ஆயிற்று சார்? சொன்னால் உடனே தந்துவிடுவோம்.” என்றாள்.

“அடடா! அந்தக் கணக்கைப் பார்க்க நேரமே இல்லாமல் ஒரே வேலை! மிகவும் பிஸி! ரொம்ப சாரி!” என்றான் அவன்.

“ஐயோ, என்ன சார் நீங்கள் ! அன்றைக்கு சுந்தரியிடமும்

இதையே சொன்னீர்களாமே. . . .” என்று அவள் சொல்லும்போதே புரியாதவன் போல நோக்கி, “யார் சுந்தரி?” என்று கேட்டான் அவன்.

விழிகள் அகல “எஎன்ன சார் . . . “ என்று காஞ்சனி தொடங்க, அவளை இடை வெட்டி, “ஓ, உன் சிநேசிதியில்லை? அவளிடம் சொன்னேனாமா? எப்போது? அவளைப் பார்த்ததே  நினைவில் இல் . . அவளை இந்த அலுவலகத்தில் வைத்துப் பார்த்திருப்பேனோ? யா, இந்த அலுவலகத்தில் . .ஆமாம். பார்த்தேனே! கரெக்ட்! அவளிடம் அவளது கால் பற்றிக் கேட்ட ஞாபகம்! கூட உன்னைக் காணோமே என்று நினைத்தது கூட நினைவிருக்கிறது. மற்றது சாரி, நினைவில்லைப்பா.” என்று அவன் முடித்தபோது, அவளுக்கு ஒரு மாதிரி ஆறுதலாக இருந்தது.

அவளைக் காணோமே என்று எண்ணினானாமே! பண விஷயம்தான் ஜவ்வு மாதிரி இழுக்கிறான். ஒரு வேளை . . .

ஒருவேளை அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டுவிட்டால், அப்புறம் தொடர்பு விட்டுப் போய்விடும் என்று எண்ணுகிறானா?

சுந்தரி சொல்வது போல ஏதோ உள் நோக்கம்?

மணக்க விரும்பியவன்தானே? இன்னமும் அந்த எண்ணம் இருக்கக் கூடுமா?

ஏனோ சற்று மூச்சு வாங்கியது அவளுக்கு.

எதற்கும் சுந்தரியிடம் ஜெயதேவனைப் பற்றிப் பேசினால் மனம் தெளியுமோ என்று முயன்றால், ஒன்று அவள் சுகேசனோடு பேசிக் கொண்டிருந்தாள் அல்லது சுகேசனைப் பற்றிப் பேசினாள்.

அவனுடைய உறவினர், நண்பர்கள் , ஊர் வீட்டின் அமைப்பு எல்லாமே இப்போது காஞ்சனிக்கும் அத்துபடி! சொல்லளவில்!

சுந்தரியைப் பற்றியும் காஞ்சனிக்கு இப்போது கவலையாக இருந்தது. இந்த சுகேசன் பழக்கம் சுந்தரிக்குக் கெடுதலாக இருந்தால்?

இப்போது அவள் என்ன செய்ய வேண்டும்? அதுவும் புரியவில்லை. எச்சரிக்கையாக ஏதாவது சொன்னால், சுந்தரி கேட்பதாகவும் இல்லை.

இந்த நிலையில், ஜெயதேவனது வரவுகள் அவளது அலைபாயும் மனதுக்கு ஆறுதல் அளித்தது உண்மை.

எனவே அவன் கவனிக்காமல் சென்றால்கூட, அவளே அவனைத்

தேடிச் சென்று பேசலானாள்.

அப்படித்தான் ஒருநாள், ஒரு கப் கிரீன் டீயைப் பிடித்துக் குடித்துவிட்டுத் திரும்பிய காஞ்சனி,  காரிடாரில் ஜெயதேவனைப் பார்த்தாள்.  எம்டியோடு பேசிவிட்டுப் போகிறான்.  வெளியே போகிற வழி!

தன்னிடம் பேசாமலே போய்விடுவானோ என்ற எண்ணம் தோன்றியபோதே அவளால் தாங்க இயலவில்லை.

எனவே அவன் பின்னோடு ஓடி, “சார்  . . ஜெயதேவன் சார் . .” என்று கூப்பிட்டாள்.

காது கேளாத மாதிரி நடை தொய்யாமல் அவன் மேலும் இரண்டெட்டு எடுத்து வைக்கவும் அவளுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

கூப்பிட்டது தப்போ? அதிகப்படி உரிமை எடுப்பது போல நினைத்துவிட்டானோ?

ஒரு கணம், பூமி பிளந்து தன்னை விழுங்கி விழுங்கி விடாதா என்று தோன்றிவிட அவளது மனம் கன்றிப் போயிற்று.

ஆனால் அதற்குள்ளாகவே அவன் நின்று திரும்பி, “என்னையா கூப்பிட்டாய்?” என்று, ஏதோ புரியாதவன் போல லேசாகப் புருவம் நெறித்து அவளிடம் கேட்டான்.

பின்னோடு வந்த வேகத்தில் மூச்சு வாங்கியபடியே “ஆமாம்” என்று காஞ்சனி  கலக்கத்துடன் தலையாட்டிவிட்டு, “வந்து சாரி, உங் . .களைப் பெயர் சொல்லிக்

கூப்பிட்டுவிட்டேன்.” என்றாள் சின்னக் குரலில்.

புருவ நெறிப்பு சட்டென மறைய, “ஓ, முழுப்பெயர்! அதனால்தான் குழம்பிவிட்டது.” என்று

இப்போது அவள் குழப்பமாக விழிக்க, அவன் விளக்கம் கொடுத்தான்.

பொதுவாக என்னையாரும் “ஜெயதேவன் சார்” என்று நீட்டி முழக்கி அழைப்பதில்லை. அலவலகத்தில் வெறும் சாரோடு நிறுத்திவிடுவார்கள்.  . .அம்மா , நண்பர்கள்  எல்லோரும் ஜெய், தேவ், தேவா என்று இப்படிக் கூப்பிடுவார்களா? அதனால் உன் அழைப்பு யாரையோ கூப்பிடுவது போலத் தோன்றிவிட்டது.” என்றான் புன்னகையோடு.

தன் நட்பு வட்டத்தில் சேருமாறு ஜாடையாய்ச் சொல்கிறான்!

ஆனால் . . .எப்படி முடியும்? எம்டியையே சர்வ சாதாரணமாக வந்து பார்த்துப் பேசிவிட்டுப் போகிறவன் அவன். இங்கே பணி புரிகிறவள், அதிலும் சேர்ந்து ஒரு மாதமே ஆன ஒருத்தி எப்படி அப்படி அழைக்க முடியும்?

“என்ன பதிலையே காணோம்? என் பெயர் அவ்வளவு பயங்கரமானதாகவா இருக்கிறது?” என்று தணிந்த குரலில் நகையோடு அவன் கேட்க, காஞ்சனிக்குத் தலை சுற்றிவிட்டது. .

சற்றுப் பொறுத்தே அவன் பதிலுக்காகக் காத்திருப்பது புரிய, “அஅப்படியில்லை சா ர். அப்படியெல்லாம் கூப்பிட்டால் என்னை விடச் சின்ன ஆளைக் கூப்பிடுவது போல இருக்கும் . . . “ என்று அவள் தடுமாற, வேண்டும் என்றே தவறாக எடுத்து, “ஓஹோ இப்போது புரிகிறது!” என்று நகைத்தான் அவன்.

“என்னை விட வயதானவளாக உன்னை மற்றவர்கள் நினைத்து விடுவார்களே என்கிற கவலையாக்கும்!” என்று கேலி பேசினான்.

“ஐய்யோ, அப்படி இல்லை என்று உங்களுக்கே தெரியும்!”

“இல்லையே ! விளக்கம் ரொம்பத் தேவை!”

“அது . .நீங்கள் சமூகத்தில் பெரிய மனிதர். எங்கள் எம்டியோடு சம நிலையில் பழகுகிறவர்! . .”

“ஆனால் நம் இருவருக்கிடையே சமூகம் . . அதுவும் தொழில்துறை சமூகம் எங்கிருந்து வந்தது? நம் இருவரின் அ. . . .அதாவது நம் நட்புக்கிடையே அது போன்ற தடைகள் வரலாமா?” என்று, அவளது கண்களைக் குறுகுறுவென்று பார்த்து ஜெயதேவன் கேட்டபோது, சமூகமென்ன, ஊர் உலகமே அவளுக்கு மறந்து போயிற்று!

கடைசியாக, அவள் அவனைத் “தேவன்” என்று அழைப்பதாக முடிவாயிற்று.

உள்ளூர அவளுக்கு இன்னொரு குறுகுறுப்பு!

நட்பு என்று சொல்லுமுன் சற்று நிறுத்தினானே! அன்பு என்று சொல்ல வந்திருப்பானோ? கன்னங்கள் சிவந்தன அவளுக்கு.

இதை சுந்தரியிடம் சொல்வதா வேண்டாமா என்ற யோசித்தவாறு பார்த்தபோது,

சுந்தரி படுப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

“குட்நைட்.” சொல்லிப் படுத்தவள், அவளது மொபைலைத் தோழிக்கு எதிர்ப்புறமாக, அவளது கையை ஒட்டி வைப்பதைக் கண்டு

காஞ்சனி திடுக்கிட்டாள்.

அன்று வரை இது பழக்கமில்லை. இருவரின் செல்ஃபோன்களும் பொதுச் சொத்து போல நடுவில்தான் கிடக்கும்.

காஞ்சனி தன் மொபைலைத் தன்புறமாக வைத்தாள் என்றால், சுந்தரிக்கு ஜெயதேவனைப் பிடிப்பதில்லை. தோழியின் மொபைலில் அவனது எண்ணைப் பார்த்தால் அவனுக்கு எதிராக ஏதாவது சொல்வாள் என்று இந்தப் பக்கம் வைத்தாள்.

ஆனால் சுந்தரி, தனக்குத் தெரியாமல் என்ன ரகசியம் மறைக்க எண்ணுகிறாள்?

சுகேசன் பற்றித்தானிருக்கும்! சுந்தரி ஏதாவது தப்பு முடிவை எடுத்து விடுவாளா?

என்ன செய்வது என்ன செய்வது என்று வெகு நேரம் தவித்துவிட்டு, காஞ்சனி ஒரு முடிவுக்கு வந்தாள்.

அதன்படி மறுநாள் காலையில் சுந்தரி குளிக்கப் போன பிறகு, மொபைலில் ஜெயதேவனை அழைத்தாள். “நீங்கள் சமீபத்தில் பங்களூரு வந்தால் என்னைச் சந்திக்க முடியுமா?” என்று கேட்டாள்.

அவன் கணம் கூடத் தாமதிக்கவில்லை. “நான் இன்று அங்கே வருவதாக ஏற்கனவே புரோகிராம் இருப்பதால் இன்றே கட்டாயம் சந்திக்கிறேன். “ என்றான்.

தோட்டத்தில் பூஜைக்குப் பூப் பறித்துக் கொண்டிருந்த தேவகியின் காதில் இந்தப் பேச்சு விழுந்தபோது, அவள் அதைப் பெரிதாக எண்ணவில்லை. ஆனால், சற்று நேரத்திலேயே பொது நிர்வாகியை அழைத்து அவன் பேசியதும் அவள் மனம் கலங்கிப் போயிற்று.

# அத்தியாயம் -9

வெளியே செல்லத் தயாராகி வந்த ஜெயதேவன், அலுவலகப் பொது நிர்வாகியை ஃபோனில் அழைத்து, “நான் அவசரமாக பங்களூரு செல்ல வேண்டியிருக்கிறது. எனவே அலுவலகம் வர மாட்டேன். எல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள். அவசியம் என்றால் மட்டும் கூப்பிடுங்கள்.” என்று ஜெயதேவன் கூறியபோது, தேவகி பூஜையை முடித்துக்கொண்டு வந்து காஃபி அருந்த உட்கார்ந்திருந்தாள்.

மகன் கூறியது தெளிவாகக் கேட்டதோடு, அதன் பொருளும் அவளுக்குப் புரிந்தது. அதாவது, ஜெயதேவ் காஞ்சனியைப்

பார்க்கப் போகிறான்.

காலையில் காதில் விழுந்ததோடு சேர்த்துப் பார்க்கும்போது, அந்தப் பெண்ணே அவனை அழைத்த மாதிரி அல்லவா தெரிகிறது!

அந்தப் பெண் முட்டாள்த்தனமாக இவனிடம் மயங்கி விட்டாளா?

இவன் பழிவாங்கவே நாடகம் ஆடுகிறானோ என்று அவள் எண்ணிப் பார்க்கவே இல்லையா?

அவள் கூப்பிடுவதும், இவன் மற்ற வேலைகளை ஒதுக்கிக்கொண்டு உடனே போவதும் . . . ஒன்றும் நல்லதற்கல்ல என்று தேவகிக்குத் தோன்றியது.

மகனின் மனதை அறிந்திருந்ததாலேயே காஞ்சனிக்காக அவள் மிகவும் கவலைப்பட்டாள். ஆனால், இதில் அவள் என்ன செய்யக் கூடும்?

காஞ்சனியுடைய சிற்றன்னை ஈசுவரியோடு பேசிப் பழகத் தொடங்கியதில் இருந்தே, தேவகிக்குக் காஞ்சனியிடம் உள்ள பரிவும் பிரியமும் பலமடங்கு அதிகமாகி இருந்தது.

சும்மாவே வந்து வந்து பேசிய அந்த ஈசுவரி,தன்னை நியாயப்படுத்திக்கொள்ள என்னவெல்லாம் சொன்னாள்!

தேவகியும் சேர்ந்து பேசுவாள் என்று எதிர்பார்த்தாள் போலும்! ஆனால் நிலைமை அறியவே பெரியவள் வந்தது அவளுக்கு என்ன தெரியும்?

“இரண்டாம் தாரமுங்க. அதை நினைவுபடுத்திக்கொண்டே இருக்கிற மாதிரி ஒரு பெண் வேறு! எனக்கு எப்படி இருக்கும்? எனக்கு மட்டும் வயசாகி, பழசாகிப் போன புருஷன். ஆனால் அவளுக்கு? பதினாறு வயசிலேயே ஆண்பிள்ளைகளை ஒரு மாதிரி பார்த்துக்கொண்டு நிற்பாள். அசிங்கப்படுத்து முன்னாலே, நல்ல பணக்கார இடத்திலே, இப்பவே  கொடுக்கலாம்னு பார்த்தால், அந்தக் கழுதை எங்களைத்தான்  கேவலப் படுத்திவிட்டாள்.அப்ப எங்களை., இப்ப உங்களை! திமிர்ப் பிடிச்சவள்! அடங்கி வாழவே மாட்டாள். நாசமாகத்தான் போவாள்! ஓடுகாலி! இனிமேல்கொண்டு, அவளுக்குக் கல்யாணம் என்று பேசவே படாது என்று என் வீட்டுக்கார் கிட்டே கண்டிப்பாகச் சொல்லிட்டேன்! “ என்றாள் ஒருதரம்.

“பெங்களூரிலே வேலை பார்க்கிறாளாம். வேலைதான் பார்க்கிறாளோ, வேறே தொழில் என்னமும் செய்கிறாளோ? யார் கண்டது? அவள் செய்கிறது யாருக்கும் தெரியக் கூடாது என்றுதானே

விலாசம் கூடத் தர மாட்டேன் என்கிறாள்!" என்று சேறு பூச முயன்றாள் இன்னொரு முறை.

"அவள் சினேகிதக்காரி ஒருத்தி. அவளுக்கும் திண்ணக்கம் ரொம்ப! ரெண்டு பொண்ணுங்களாப் போய் வெளியூரிலே தடிமாடுங்க மாதிரி உட்கார்ந்திருக்குதுங்க பாருங்களேன்! மானம் கெட்டதுங்கள்." என்றாள் மறுமுறை பார்க்கையில்.

கடைசித் தடவைதான் பெரும் கொதிப்பு. "பாருங்களோன், வெறும் ஆயிரம் ரூபாயை அனுப்பி வைத்திருக்காள். நாப்பது ஐம்பது சம்பாதனையாம். குடும்பத்துக்கு இல்லாத, இவள் மினுக்குவதற்கா அவ்வளவு பணமும்? அல்லது . . . ஒருவேளை தன் கல்யாணத்துக்குச் சேர்க்கிறாளா? இனிமேலே அப்படி ஒன்று நடந்திடுமா? நான்தான், ஜென்மத்துக்கும் நடக்க விட்டிடுவேனா?"

ஜெயதேவனின் பழிவாங்குதலின் பலனாக மனம் ஒடிந்து போய்த் திரும்பி வந்தால், காஞ்சனியின் கதி என்னவான இருக்கும் என்று அடிக் கோடிட்டுக் காட்டியது ஈசுவரியின் பேச்சு.

ஆனால், அந்தக் குடும்பத்துக்குமே காஞ்சனியின் இருப்பிடம் தெரியாதபோது, தேவகியால் என்ன செய்ய முடியும்?

அந்த சினேகிதி ஒருத்தி பற்றி ஒரு வார்த்தை வந்திருக்கிறது. மேலே ஏதேனும் வருமா என்று காத்திருக்க வேண்டியதுதான். ஏனெனில் சும்மாவே வாய் கிழியப் பேசுகிற மட்டும் சேற்றை வாரி இறைக்கும் ஈசுவரி, காஞ்சனி பற்றி மற்றவர் ஏதாவது விவரம் கேட்டால், பேயாகவே மாறி விடுவாள்.

ஆத்திரமாக நோக்கி, "எதுக்குக் கேட்கிறே? சம்பாதிக்கிறதாலே அவளோடு ஒட்டிக் கொள்ளவா? இன்னும் ஏதாவது உதவி பண்ணிக் கமிஷன் வாங்கப் போகிறியா? எப்படி வந்தாலும் பணம்தானேன்னு பார்க்கிறியா?" என்று நேரடியாக, உரக்கக் கேட்பாள்.

இந்தக் கொடு நாக்குக்குப் பயந்துதான் சிதம்பரம் வாய் மூடிப் போயிருப்பாரோ என்றுகூட தேவகிக்கு சந்தேகம்!

எனவே, அப்படியா அப்படியா என்று கேட்டபடி, ஈசுவரியின் அடுத்த கவனப் பிசகுக்காகக் காத்திருந்தாள்.

ஆனால் அது காலம் தாழ்த்தி வந்துவிடக் கூடாதே என்ற கவலை அவளுக்கு இப்போது வந்தது.

ஆனால் அன்று பங்களூருவில் நடந்தது தெரிய வந்திருந்தால், தேவகி இவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டாள்.

ஏனெனில், அப்போது காஞ்சனிக்குத் தன்னைப் பற்றிய எண்ணமே அதிகம் இருக்கவில்லை.

அலுவல் நேரத்தில் சுந்தரிக்குத் தெரியாமல் வெளியே போவது கடினம் என்பதால், இரவு சரியாகத் தூங்காததால் மந்தமாக இருப்பதாகவும், பேசாமல் படுத்துத் தூங்கப் போவதாகவும் சொல்லி மற்றவளைக் காஞ்சனி தனியே வேலைக்கு அனுப்பி வைத்தாள்.

ஜுரமோ என்று அவளைத் தொட்டுப் பார்த்து, தானும் வேண்டுமானால் விடுப்பு எடுத்துக் கொள்ளவா, சுகேசனிடம் கேட்டு யாராவது நல்ல மருத்துவரிடம் போகலாமா என்றெல்லாம் சுந்தரி கவலைப்பட்டது காஞ்சனிக்கு உள்ளூர ஆறுதலாகவே

இருந்தது.

தோழியிடம் சுந்தரியின் அன்பு ரோம்பக் குறைந்துவிடவில்லை என்பதற்கான ருசு அல்லவா? ஆனாலும் இதை இப்படியே விட்டுவிட முடியாது!

எனவே சுந்தரியை வற்புறுத்தி வேலைக்கு அனுப்பி வைத்துவிட்டு, ஜெயதேவனின் அழைப்புக்காகக் காஞ்சனி காத்திருந்தாள்.

மதியம் தாண்டியே அவன் அழைத்தான்.

அவள் பணிபுரிந்த அலுவலகத்துக்கும் அவள் தங்கியிருந்த இடத்துக்கும் சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு காஃபி ஷாப்புக்குள் போய் ஒதுங்கினாற்போல உட்கார்ந்து, இரண்டு காஃபிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, காஞ்சனியிடம் திரும்பி, "என்ன பிரச்சினை?" என்று விசாரித்தான்.

"சார் . .வந்து தேவன், உங்கள் வேலையைக் கெடுத்து இங்கே உட்கார வைத்திருக்கிறேனோ என்று ஒரு மாதிரிதான் இருக்கிறது. ஆனால், உங்களைத் தவிர வேறு யாரிடமும் இது பற்றி நான் பேச முடியாது, சார்." என்றாள் தொடக்க உரையாக.

"ரைட். என்னிடம்தான் சொல்ல முடியும் என்றால், அது என்ன என்று சீக்கிரமாகச் சொல்லத் தொடங்கலாம் இல்லையா? " என்று புன்னகையோடு ஊக்கினான் அவன்.

"இதோ, சொல்லி விடுகிறேன். தேதேவன், இது என் தோழி சுந்தரியைப் பற்றியது." என்றுரைத்துவிட்டு, அவனைப் பார்த்தாள்.

"ம்ம்ம். . ." என்று மேலே சொல்லுமாறு சைகை செய்தான்

ஒரு பெருமூச்சுடன், சுகேசனின் அறிமுகம், மற்றும் பழக்கம் பற்றிக்

காஞ்சனி சொல்லலானாள். தோழி அவனிடம் அதிகமாக . . . அவனை அதிகம் நம்புகிறாளோ என்று தன் கவலை பற்றி எடுத்துரைத்தாள்.

“வந்து தேவன் சார், இது காதலா . . . சுந்தரி அவரைக் காதலிக்கிறாளா என்று எனக்குத் தெரியாது. ஆனால், அவன் பக்கம் அவள் சாய்வது நன்றாகத் தெரிகிறது. எஙங்களுக்கிடையே ஒளிவு மறைவே இதுவரை இருந்தது கிடையாது. எந்த மொபைல் என்றாலும் இருவரும் எடுத்துப் பயன்படுத்துவோம். இரண்டுமே பொது இடத்தில்தான் கிடக்கும். இப்போது அவளதை அவள் பக்கமாக வைத்துக் கொள்கிறாள். ஒன்று அவரோடு பேசுகிறாள். அல்லது, அவரைப் பற்றியே பேசுகிறாள். இந்திரன், சந்திரன் என்கிற மாதிரி. . . .”

காஞ்சனி சீரியசாகப் பேசுவதைக் கண் கொட்டாமல் பார்த்தபடி கேட்டுக் கொண்டிருந்த ஜெயதேவனின் கண்கள் இடுங்கி உதடுகள் லேசாகத் துடிக்கலாயின.

அதை அடக்கி, “இப்போதென்ன? அவர்களது நட்பை வெட்டி விட வேண்டுமா?” என்று அவளைப் போலவே சீரியசாகக் கேட்டான்.

ஆனால் அவன் எண்ணியதற்கு மாறாகக் காஞ்சனி பதறி விட்டாள். “ஐயோ! அப்படி இல்லை சார்! எஎனக்கு வேண் . .டியதெல்லாம் சுந்தரி ஏமாந்துவிடக் கூடாது என்பதுதான். சுகேசன் பற்றி உண்மை தெரிய வேண்டும். சுந்தரி கூறுவது எல்லாம், கிளிப் பிள்ளை போல அவர் சொன்னதைத் திருப்பிச் சொல்வதுதானே? சுகேசன் பேச்சு நிஜமா என்று விசாரிக்க வேண்டும். இதையெல்லாம் ரகசியமாக அறிந்து சொல்வதற்கு உரிய துப்புத் துலக்கும் நிறுவனங்கள் இருக்கிறதாமே! அப்படி யார் மூலமாவது, வெளியே தெரியாமல் விசாரிக்க வேண்டும். சுந்தரிக்குத் தெரியாமல் நான்மட்டும் தனியாகப் போய், இதை எல்லாம் விசாரிப்பது ரொம்பக் கஷ்டம். அ . .த்தோடு . . வந்து . .வந்து சார், இன்னும் . .இதற்கெல்லாம் நிறையப் பணம் ஆகும் என்று நினைக்கிறேன். எஎன்னால் இப்போது அதிகப் பணம் தர முடியாது. ஆனால் தோழி ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பது முக்கியம். அதனால் அதனால் இப்போது நீங்கள் கொடுத்துவிட்டு, மருத்துவமனைக் கணக்கோடு சேர்த்து வாங்கிக் கொள்ளுங்கள்! பெரிய தொகை ஆகிவிடும் என்று நினைக்கிறேன். ஆனால் இது இரண்டையும் சேர்த்து, மாதாமாதமாகத் தந்து விடுகிறேன். “ என்று ஒருவாறு சொல்லி முடித்தாள்.

இப்போது அவனுக்குச் சிரிப்பை அடக்குவது கடினமாக இருந்தது. ஆனாலும் சமாளித்து, “அடடா!” என்றான் கவலையாக.

“எஎன்ன சார்? என்ன ஆயிற்று? அது போல விசாரிப்பது கஷ்டமா?” என்று பதறினாள் காஞ்சனி.

“ஊகூம். அப்படியில்லை. வந்து . . . நீ ஏதோ அவசரம் போலக் கூப்பிடவும், என் பணத்தைத் திருப்பித் தரத்தான் கூப்பிடுகிறாயோ என்று நினைத்துவிட்டேன். கைச் செலவுக்காக அந்தப் பணத்தை நம்பி வந்துவிட்டேனா, இப்போது என்ன செய்வது என்று மலை . .ப்பாக இருக்கிறதே.” என்றான் அவன் பாவனையோடு.

காஞ்சனி பயந்துவிட்டாள்.

“ஐயையோ! இப்போது என்ன செய்வது, தேவன்? இப்போது எங்கள் கையில் இருக்கும் பணத்தை எடுத்து வந்து தந்து விடட்டுமா? சுந்தரியிடம் சொல்லி, இரண்டு பேரும் சிக்கனமாக மாதச் செலவை சமாளித்துக் . . ஏன் சிரிக்கிறீர்கள்?”

அவனுக்காக யோசித்துத் தீர்வு தேடிக் கொண்டிருந்த காஞ்சனி, ஜெயதேவன் அடக்க மாட்டாதவன் போல் திடுமெனச் சிரிக்கவும் காரணம் கேட்டாள்.

அவன் மேலும் சிரித்துவிட்டே பதில் சொன்னான். “பின்னே சிரிக்காமல்? நிச்சயமில்லாத ஒரு வரவை நம்பி வெறும் கையோடு வருவதானால் அப்புறம் நான் என்ன வெற்றிகரமான தொழில் அதிபன்? சொல்லு!” என்று அவன் கேட்கவும், காஞ்சனி திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

அவனது கண்களில் சிரிப்பு இன்னமும் மறையவில்லை.

ஜின்ஸ் பான்டும் டீஷர்ட்டும் லேசாகக் கலைந்திருந்த சிகையும் . . .அதுவே பார்லர் உபயமோ? இன்றைய எத்தனையோ இளைஞர்களின் தோற்றமே என்றாலும், இவனிடம் கூடக் கொஞ்சம் . . அதை என்னவென்று சொல்வது . . . கவர்ச்சியா . . கூடவே கொஞ்சம் கம்பீரம்? ஆனால், இவனை வெறும் தொழில் அதிபன் எனறு யாரால் சொல்ல முடியும்?

சற்று அதிக நேரம் வெறித்துப் பார்த்துவிட்டோமோ என்று அவளே முகம் லேசாகக் கன்றுகையில் அவன் கேட்டான்

“என்ன? தொழிலுக்கும் எனக்கும் சம்பந்தம் இருப்பதாகவே காண வில்லையாக்கும்? ஆனால் நான் யார் என்று உனக்குத் தெரியும்தானே?”

கணத்தில் அன்னியனாகி விட்டவனாக அவன் தோன்ற, அவள் திகைத்தாள்.

என்ன கேட்கிறான்? நான் எவ்வளவு பெரிய மனிதன் என்று உனக்குத் தெரியுமே என்கிறானா? என்னைப் போய் இந்த மாதிரி வேலைக்காக அழைப்பாயா என்று கோபப் படுகிறானா?

முகம் மேலும் கன்ற, "சா . .சாரி சார். உ உங்களை இதற்கெல்லாம் நான் கூ . . . கூப்பிட்டிருக்கக் கூடாது . . .ஆஆனால், உங்களைப் பார்க்கும்போது, அப்படி பந்தாவாக இல்லாமல் சாதாரணமாக . . . வந்து நீங்கள் இயல்பாகப் பழகவும் . . .நானும் அப்படியே எண்ணிக் கேட்டுவிட்டேன். மன்னித்து விடுங்கள், சார்." என்று தட்டித் தடுமாறினாள் காஞ்சனி.

"ஹே காஞ்சனி, என்ன மன்னிப்பெல்லாம் கேட்டாகிறது? "சார்" மழை வேறு! ஒரு கேலியைப் புரிந்துகொள்ள மாட்டாயா? உன் பாட்டியும் என் பாட்டியும் சினேகிதிகள். அப்படித் தோழமையாக நினைத்துக் கிண்டலடித்தால், என்னென்னவோ சொல்கிறாயே! " என்று இலகுவாக அவன் கேட்கவும், அவள் மேலும் திகைத்தாள்.

விழி விரித்துப் பார்த்து "இது கிகிண்டலா?" என்று வியப்புடன் வினவினாள் லேசாகத் தோளைக் குலுக்கி, "கிண்டலேதான். ஒரு சின்ன ஜோக்! ஒரு ஜோக்குக்கு அர்த்தம் கேட்டு அதைக் கொலையே செய்துவிட்டாயே! நியாயத்துக்கு செக்ஷன் முன்னூற்றி இரண்டில் உன்னைக் கைது செய்திருக்க வேண்டும். ஏதோ நான் புகார் கொடுக்காததால் நீ தப்பித்தாய்!" என்று பெருந்தன்மை போலப் பேசினான் ஜெயதேவன்.

"ஏன்? புகார் கொடுத்துத்தான் பாருங்களேன் . ." என்று சொல்லும்போதே காஞ்சனிக்குச் சிரிப்பு பீறிட்டது.

காவல் நிலையத்துக்குப் போய் காஞ்சனி என் ஜோக்கைக் கொன்றுவிட்டாள் என்று அவன் புகார் கூறினால், என்ன நடக்கக் கூடும்? அங்கிருக்கும் அதிகாரிகள் அவனைப் பைத்தியமோ என்று . . .அவள் யோசிக்கும் போதே அவன் சொன்னான்.

"ஆஹா ! என்னைப் பைத்தியக்கார விடுதிக்கு அனுப்ப என்னமாய்த் திட்டம் போடுகிறாய்! ஆனால் நான் தனியாகப் போவேனா? இவள்தான் புகார் கொடுக்கச் சொன்னாள் என்று உன்னையும் சேர்த்து அனுப்ப ஏற்பாடு செய்து விடுவேனே! சும்மாவே என்னைத் தேவன் என்று கூப்பிடுவதாக ஒப்புக்கொண்டுவிட்டு, சார் மோர் என்றெல்லாம் சேர்த்து என் பெயரை வேறு கொலை செய்திருக்கிறாய். பாவம், தோழிக்காக மனது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாயே என்று அந்தக் கொலையை வேறு மன்னித்து

விட்டிருக்கிறேன்.  இதற்கு மேல் எந்தத் தப்பையும் நடவடிக்கை எடுக்காமல் சும்மா விட மாட்டேன். அதனால் ஜாக்கிரதை! இனி அழைப்பு ஒழுங்காக இருக்கட்டும்! “  என்றான் அதிகாரமாக.

என்ன அதட்டல்? இவன் மட்டும் ஒன்றுமே . . .சட்டென நினைவு வர, “நீங்கள் மட்டும் என்ன தேவன் சார்? அந்த மருத்துவமனைச் செலவுக் கணக்கைத் தந்து பணத்தை வாங்காமலே இருந்து எங்களை ஏமாற்றவில்லையா?” என்று கேட்டாள் அவள்.

“என்னது?” என்று கண்கள்ள பளபளக்கக் கேட்டுவிட்டு அவன் உரக்க நகைத்தான். “ஐயோப்பா, இது பயங்கரக் குற்றச்சாட்டாக இருக்கிறதே! எல்லாரும் பணத்தை வாங்கிக்கொண்டு ஏமாற்றியதாகத்தான் குற்றம் சுமத்துவார்கள், கேஸ் போடுவார்கள். நான் பணத்தை வாங்காமலே ஏமாற்றினேனா? பிரமாதம்! இதற்கும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிதான்!”

இருவரும் எதற்குச் சிரித்தார்களோ? அவனோடு சேர்ந்து விழுந்து விழுந்து சிரித்தபின் மனம் மிகவும் லேசான மாதிரிக் காஞ்சனி உணர்ந்தாள்.

இருவருமாகச் சிரித்தபடியே ஆறிப்போன காஃபியையும் சொட்டு விடாமல் குடித்து முடித்தபின், சுகேசனது முகவரியை வாங்கிக் கொண்டு ஜெயதேவன் கிளம்பினான்.

சென்றவன் ஒரு வாரத்துக்குள்ளாகவே திரும்பிவிட்டான்.

இந்த முறை சுந்தரிக்குத் தெரியாமல் செல்ல வேண்டும் என்று காஞ்சனி நினைக்கவில்லை. நல்லதோ கெட்டதோ, ஜெயதேவன் கொண்டு வரும் செய்தி எதுவானாலும், அது சுந்தரிக்குத் தெரிய வேண்டியதே என்று அவள் நினைத்தாள்.

எனவே அவள் பகுதிப் பொறுப்பாளரிடம் இரண்டு மணி நேரம் அனுமதி பெற்றுக்கொண்டு போய், ஜெயதேவனைச் சந்தித்தாள்.

இப்போது ஜெயதேவன் அவளை ஒரு ரோட்டோர ஈட்டரிக்குக் கூட்டிப் போனான். பெரிய வண்ணக் குடைகளின் அடியில் இரண்டு, நாலு என்று தேவைக் கேற்ப இருக்கைகள் போடப் பட்டிருந்தன.

உயரமான முக்காலியில் அமர்ந்ததும், படபடப்பை அடக்க முயன்றபடி காஞ்சனி கேட்டாள். “சொல்லுங்கள் தேதேவன். சுகேசன் எப்படிப்பட்டவர்?” என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

ஜெயதேவனின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. “ரொம்ப அவசரம் போல? நானும் கண்டேன் சீதையை என்ற அனுமாரைப் போல முதலில்

விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். உன் . . சுகே . . அதாவது உன் தோழியுடைய அந்த சுகேசன் ரொம் . .ப ரொம் . .ப நல்லவன் என்று சொல்ல மாட்டேன். . .” என்றவனைக் காஞ்சனி அவசரமாகக் குறுக்கிட்டுப் பேசினாள்.

“சா . . ர் அப்படியானால் சுகேசன் கெட்டவரா? சுந்தரி தாங்க மாட்டாளே!” என்றவளின் முகத்தில் வியப்பு, வருத்தம், ஒரு மாதிரியான மகிழ்ச்சி எல்லாமே தெரிந்தன.

“ஹே, கண்டேன் சீதையை என்றால் நல்ல விஷயம். நீ எதிர்மறையாய் யோசிக்கிறாயே!”

“பின்னே நீங்கள்தானே, அவர் ரொம்ப நல்லவர் இல்லை என்று சொன்னீர்கள்?”

“இப்போதும் அதையேதான் சொல்லுவேன். சுகேசன் ரொம்ப ரொம்ப நல்லவர் இல்லை. ஆனால், ரொம்ப ரொம்ப ரொம்ப நல்லவர்! மனிதர் பயங்கர சைவம்!”

“சைவமா? ஆனால், சுந்தரிக்கு சிக்கன் ரொம்பப் பிடிக்குமே!”

“கடவுளே! நீ சுகேசனை விட சைவம் போலத் தெரிகிறதே!”

ஒரு கணம் புருவம் சுருக்கி யோசித்துவிட்டு, “ஓ! சுகேசனுக்குக் கெட்ட பழக்கங்கள் இல்லை நல்லவர் என்கிறீர்களா?” என்று காஞ்சனி கேட்டாள்.

“அப்பாடி! ஒரு வழியாகக் கண்டுபிடித்தாயே!” என்று பெரிதாக மூச்சு வாங்கினான் அவன்.

காஞ்சனி பேசாதிருக்கவும், அவனே தொடர்ந்தான். “சுகேசன் மிகவும் நல்லவர், காஞ்சனி. தண்ணி, போதை, சிகரெட் எதுவும் இல்லை. பெண்கள் பற்றிப் பேசவே கூடாது. பயங்கர சுத்தமான ஆத்மா! நாலு ஆண்டுகளாக இங்கே வேலை பார்க்கிறார். ஒரு தப்புத் தண்டா பண்ணவில்லை. இங்கே ஒரு ஃப்ளாட் வாங்க முன்பணம் கட்டி இருக்கிறார். அவன் பழகும் நண்பர்கள் நாலு பேருமே கிட்டத்தட்ட இப்படித்தான். ரொம்ப நல்ல . . .ஹேய், நல்லதாகத்தானே சொல்கிறேன், ஏன் இந்தக் கண்ணீர்?” என்று, காஞ்சனியின் கண்களில் இருந்து திரண்டு இரு பெரிய கண்ணீர்த் துளிகள் உருண்டு விழவும் வியப்புடன் கேட்டான்.

அவசரமாகக் கண்ணீரைத் தட்டி விட்ட காஞ்சனி, மேலும் மேலும் கண்களில் நீர் பெருகவும் துடைப்பதை நிறுத்திவிட்டுக் தலையைக் குனிந்துகொண்டாள்.

மேஜையில் வைக்கப்பட்டிருந்த அடுக்கில் இருந்து ஒரு டிஷ்யூவை எடுத்து அவள் கையில் கொடுத்துவிட்டு, தண்ணீரையும் அவள் பக்கம் நகர்த்தி வைத்தான் ஜெயதேவன்.

சில கணங்களில் காஞ்சனி ஒருவாறு தன்னை சமாளித்துக்கொண்டு, "சாரி." என்றாள் சின்னக் குரலில். "நான் கொஞ்சம் அசடு போல நடந்துவிட்டேன்."

அதை விடு என்பது போலத் கையால் ஒரு சைகை செய்தவன் அவளிடம் கேட்டான். "ஆனால் ஏன் காஞ்சனி? நான் நல்லதுதானே சொன்னேன், ஏன் இந்தக் கண்ணீர்?" என்று கேட்டான்.

மேஜைமேல் கோத்திருந்த விரல்களைப் பார்த்தபடி அவள் சொன்னாள். "நல்லதுதான். என் தோழிக்காக மனதில் சந்தோஷம்தான். ஆனால், எனக்கு என்று இருக்கும் ஒரே ஜிவன் அவள்தான். சிறு வயதில் இருந்து எனக்குப் பக்க பலமாக இருப்பவள். சித்தி எப்போதும் என் வயிற்றில் அடிப்பாள். அதைப் புரிந்துகொண்டு, அவர்கள் வீட்டில் என்ன பலகாரம் செய்தாலும் ரகசியமாகக் கொண்டு வந்து தருவாள். பள்ளிக்கு உணவு இரு மடங்கு கொண்டு வருவாள். சுந்தரி சொல்லி, அவள் அம்மா, அப்பாவும், பாட்டிகளும் கூட என்னிடம் மிகவும் பிரியமாக இருப்பார்கள்.

"உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். பதினேழு வயதில் எனக்குக் கல்யாணம் செய்யப் பார்த்தார்கள். முப்பத்தைந்து வயது மனிதனோடு. வெளியே காட்டிக் கொள்ளாமல் போலீசுக்கு விஷயம் எட்டுமாறு தேசிகன் அங்கிள்தான் ஏற்பாடு செய்தார். உபகாரச் சம்பளங்களுக்கு ஏற்பாடு, போட்டிகளில் வெல்லும் பணத்தை முதலீடு செய்து பெருக்குவது . . . இன்னும் எவ்வளவோ சொல்லலாம்.

"இன்னும் . .என் கூட துணையாக இருப்பதற்காகவே சுந்தரியும் வெளியூரில் என் கூடவே வேலை தேடினாள். இங்கே வரக் கூட அங்கிள்தான் எங்களை பஸ்சில் ஏற்றி விட்டார். . . ஆனால் . . .

"சுந்தாவுக்கும் சுகேசனுக்கும் திருமணம் ஆகிவிட்டால், அவளால் முன் போல . . . .இப்போது போல என்னோடு பழக முடியாது இல்லையா? என் பாலைவன வாழ்க்கையில் ஓயாசிஸ் மாதிரி அவளது அன்பு இல்லாவிட்டால் இவ்வளவு காலம் நான் பிழைத்திருக்கக் கூடுமா என்பதே சந்தேகம். ஆனால் இப்போது . .

"அவளுக்குத் திருமணம் ஆன பிறகும் நான் அந்த அன்பை எதிர்பார்ப்பது பெரும் தவறு. கூடவே கூடாது. ஆனால், என் அம்மா இல்லாமல் போன அந்தச் சமயம் போல, நான் மறுபடியும் அனாதை

ஆகிவிடுவேனே என்று நினைத்தேன் . . .

“ஆனால் அப்படி எண்ணுவதே சுயநலம் இல்லையா? இப்போது சுந்தரியின் சந்தோஷம்தான் முக்கியம். அவளது எதிர்காலம் பற்றித்தான் நான் எண்ணிப் பார்க்க வேண்டும்.

“சுகேசன் நல்லவர் என்றால் . . .அவர் படித்தவர், நல்லவர், குடும்பமும் குறை சொல்ல முடியாதது எனும்போது, இதைத் தேசிகன் அங்கிளிடம் சொல்லி அவர்களது திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். “ என்று கண்ணீர் கீழே வடியாமல் தவிர்க்க முயன்றவாறே கூறி முடித்தாள்.

கையில் சிறு அழுத்தத்தை உணர்ந்து பார்த்தால், அவளது கரம் அவனது பிடியில் இருந்தது.

என்னவோ, அந்த அழுத்தத்தில் மனதின் பாரம் குறைவது போல உணர்ந்து, காஞ்சனி அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

“தாங்க்ஸ்!” என்று சற்றுப் பொறுத்து அவள் தன் கையை விலக்கிக்கொண்ட போதும் அவன் தடுக்கவில்லை.

ஜெயதேவனின் அந்தச் செயல், அவள் தனியாக இல்லை., அவளுக்கு ஒரு பெரிய துணை இருப்பது போன்ற உணர்வைக் காஞ்சனிக்கு ஏற்படுத்தி, அவளது நொந்த மனதுக்குப் பெரும் ஆறுதலையும் அளித்தது.

இதுவுமே அவளுக்கு இடும்பையைத்தான் கொண்டு வரப் போகிறது என்று அவளுக்கு அப்போது தெரியாது!

# அத்தியாயம் -10

அன்றிரவே சுந்தரியிடம் தன் கண்டுபிடிப்பைக் காஞ்சனி சொன்னாள்.

ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு, “என்ன பாடு பட்டிருக்கிறாய்! ஆனால் எனக்குச் சுகேஷிடம் சந்தேகமே வரவில்லையேப்பா!” என்றாள் மற்றவள்.

“அதுதான் என் கவலையே! காதல் உன் கண்களை மூடிவிட்டதோ என்று பயந்துதான் விசாரிக்கச் சொன்னேன். இப்போதென்ன? ஃப்ளாட்டுக்குப் பணம் கட்டி கைக்கு வரப் போகிறதாமே. இனித் தாமதம் செய்யாமல் அங்கிளிடம் சொல்லி டும்டும் கொட்ட வேண்டியதுதானே?” என்று காஞ்சனி இலகுவாகப் பேச, சுந்தரியின் கன்னங்கள் அழகாகச் சிவந்தன.

“சுகேஷ் கூட அதேதான் கேட்டார்ப்பா. அவர் வீட்டில் கூடச் சொல்லிச் சம்மதம் வாங்கிவிட்டாராம்!” என்றாள் வெட்கத்துடன்.

நெஞ்சுக் கூடு காலியாவது போன்ற உணர்வைப் பிடிவாதமாகத் தடுத்தபடி, “பரவாயில்லையே! சுகேசன் நிச்சயமாகச் சோம்பேறி இல்லை! நாம் மட்டும் சோடை போகலாமா? இன்றிரவே அங்கிளிடம் சொல்லிவிடலாம்!” என்று உற்சாகமாகத் திட்டமிட்டாள்.

தோழியின் அருகே வந்து அவளை அணைத்துக் கொண்டாள் சுந்தரி. “உண்மையான சினேகிதி என்றால் நீதான் காஞ்சி. என் நன்மையில் எவ்வளவு அக்கறை உனக்கு!” என்று சொல்லவும் காஞ்சனிக்கும் மனம் உருகிவிட்டது.

அதற்கு மேல் எந்த விதமான சுணக்கமும் இல்லாமல் சுந்தரி சுகேசனின் திருமண வேலைகள் வேகமாக நடக்கலாயின.

இதில், இங்கே அங்கே என்று ஜெயதேவனும் உற்சாகமாகவே கலந்து கொண்டான்.

தேசிகன் தம்பதியால் பெரியவர்களை விட்டு அதிகம் வெளியே சுற்ற முடியாது என்பதால், திருமண மண்டபம், பந்தல், விருந்து என்று பல வேலைகளை அவனே கவனித்துக் கொண்டான்.

பரிசாகக் காஞ்சனியின் நன்றியையும் பெற்றுக் கொண்டான்.

இருவருமாகவே மெகந்தி, வரவேற்பின்போது சில பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டார்கள்.

பெங்களூருவுக்கும் சென்னைக்கும் மாற்றி மாற்றி, ஜெயதேவன் பறந்தவாறே இருந்தான்.

வீட்டில் இருக்கும்போதும், மொபைலில் திருமணம் தொடர்பாக நிறையப் பேசினான்.

தாயின் பார்வையில் திகைப்பு கூடவும், "பயப்படாதீர்கள் அம்மா. இது உங்கள் மகனின் திருமணத்துக்கான ஏற்பாடு அல்ல. ஒரு நட்புக்கான வேலை. ஆனால், சீக்கிரமே . . .அனேகமாக இன்னும் ஒரு மாதத்திலேயே உங்கள் மகனுக்காகவும் இதே வேலைகளைச் செய்ய நேரும் என்று நினைக்கிறேன்!" என்று உற்சாகத்துடன் கூறினான்.

தேவகி அதிர்ந்து நிற்கும்போதே, மொபைல் அழைக்க, "இதோ, இதோ வருகிறேன். வரவேற்புக்கு உங்கள் இசை இருக்க வேண்டும் என்று கல்யாணப் பெண்ணுடைய தாயாரின் விருப்பம். அதனால் . . " என்று பேசிவாறே, தாயிடம் ஒரு தலையசைப்புடன் அவன் கிளம்பிச் சென்றுவிட்டான்.

ஒரு மாதத்தில்! அதாவது, இன்னும் முப்பதே நாட்களில் காஞ்சனியை மகன் அவமானப்படுத்தப் போகிறான். எவ்வளவு சந்தோஷமாகச் சொல்கிறான்!

பழி வாங்குவதில் இவனுக்கு இவ்வளவு உற்சாகமா? தாய் மனதுக்கு வருத்தமாக இருந்தது.

"இது பாவம்ப்பா. வேண்டாம்" என்றால், "அவள் செய்யவில்லையா" என்று கேட்பானே தவிர, அந்த முயற்சியால் வேறு ஒரு பயனும் இராது. எப்படியாவது, அந்தப் பெண் காஞ்சனியைக் கண்டுபிடித்து, அவளிடம்தான் எச்சரிக்கை செய்தாக வேண்டும்!

ஈசுவரி பற்றி அறிந்திருந்ததால், காஞ்சனி பற்றிச் கிதம்பரத்திடம் பேசிப் பயனிராது என்று அவளது கருதியிருந்தாள். உள்ளதும் கெட்டுவிடக் கூடும் என்ற அச்சமும் இருந்தது.

ஆனால், இப்போது வேறு வழியில்லை. எந்த வழியிலேனும் முயன்றுதான் ஆக வேண்டும்.

காரை விடுத்து ஒரு டாக்சியை எடுத்துக்கொண்டு, சிதம்பரத்தை அவரது அலுவல் இடத்தில் போய்ப் பார்த்தாள்.

பாவம்! அவள் யார் என்று புரிந்ததுமே, அவருக்கு குளிர் ஜுரம் நடுக்கத் தொடங்கிவிட்டது.

ஆனால் நல்லவேளையாக, தேவகியின் கேள்விக்கு எதிலும்

மாட்டிக் கொள்ளாமலே அவரால் உண்மையான பதிலைச் சொல்ல முடிந்தது.

“மேடம், காஞ்சிம்மா பெங்களூருக்குப் போனதுமே, அங்குள்ள சிம் வாங்கிப் போட்டுவிட்டாள். அந்த எண் எனக்குத் தரவில்லை. ஆனால் அதற்காக என் மகளை நான் குற்றம் சொல்ல மாட்டேன். அதாவது . . . வந்து . . . எங்கள் வீட்டு நிலைமை இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதனால், இஇதைக்கூட, ஈசுவரியிடம் சொல்லிவிட வேண்டாம், மேடம்!” என்று கேட்டுக் கொண்டார். கெஞ்சினார்!

காஞ்சனியைப் பற்றி இன்னும் கொஞ்சம் அறிய முடிந்ததே தவிர, மற்றபடி எந்தப் பயனும் இல்லாது போயிற்று.

வெகு விரைவிலேயே சுந்தரியின் திருமண நாளும் வந்தது.

எழுந்த ஒரு சின்ன பிரச்சினை, சுந்தரியின் குடும்பத்தாலேயே தீர்ந்தது. திருமணத்துக்காகச் சென்னைக்கு வந்த காஞ்சனி சொந்த வீட்டுக்குச் சென்று தங்க விரும்பவில்லை.

இந்த நாலு மாதங்களுக்கும் சேர்த்து சித்தி வைத்து வாங்கிவிடுவாள் என்று அவளுக்கு நிச்சயம். தோழியின் திருமண மகிழ்ச்சியே அழிந்து போய்விடும்.

அவளது தயக்கம் உணர்ந்து, தோழியை சுந்தரி தன்னுடனேயே தங்க வைத்துக் கொண்டாள். அவளது நிலைமை தெரிந்தவர்கள் என்பதால், அவளுடைய குடும்பமும் அவளை அன்பாக வரவேற்றார்கள்.

தந்தைக்கு ஒரு தகவல் மட்டும். சுந்தரியின் செல்ஃபோனில் இருந்து கூப்பிட்டு, தங்கும் இடம் பற்றித் தெரிவித்தாள்.

“சரிம்மா. சரிம்மா. நீ முடிவு செய்தால் சரியாக இருக்கும். இஇப்போது, நான் கல்யாணத்துக்கு வராவிட்டால் தப்பில்லையேம்மா? உன் சித்தி என்னோடு கூடக் கிளம்பிவிட்டால் . .என்கிற பயம்தான்.” என்று அவர் கூறியதைக் காஞ்சனியும் ஒத்துக் கொண்டாள்.

குரலைத் தணித்து, “உடம்பைப் பார்த்துக் கொள், பாப்பா.” என்றவர், அவள் பதில் கூறுமுன் கட் பண்ணிவிட்டார். அலுவலகத்தில் இருக்கும்போது கூட, இந்தப் பயம் பயப்படுகிறாரே!

சித்தி மாதிரிப் பெண்ணுக்கு முதலிலேயே இடம் கொடுத்திருக்கக் கூடாது. தலைக் கயிற்றை விட்டுவிட்டு வாலைப் பிடிக்க முயற்சித்தால் நடக்குமா? பேசாமல் எப்போதும் போலக் காலைப் பிடிப்பதுதான்

அப்பாவின் கதி!

சுந்தரியின் திருமணம் நல்லபடியாக, சம்பந்தப்பட்ட எல்லோர் மனமும் குளிரும் வண்ணம் சிறப்பாக நடந்தேறியது.

பெண்ணும் மாப்பிள்ளையும் தேனிலவுக்குக் கீழ்த்திசை நாடுகளுக்குச் சின்னதாக ஒரு டூர் போனார்கள்.

கிளம்பும்போது பங்களூர் அறை பற்றி ஏதோ சொல்ல எண்ணி சுந்தரி காஞ்சனியைத் தேடினாள். அவள் சற்றுத் தொலைவில் ஜெயதேவனோடு சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைக் காணவும் அவளுக்கு மனதில் திக்கென்றது!

இவனோடு என்ன இவ்வளவு நெருக்கம்? சொல்லப் போனால் இந்தத் திருமணப் பேச்சு தொடங்கியதில் இருந்தே இருவரும் அடிக்கடி இப்படிச் சேர்ந்தேதான் காணப்படுகிறார்கள்!

திருமணப் பரபரப்பிலும் சுகேஷ் நினைவிலுமாக, சுந்தரிக்குத்தான் இது மனதில் உறைக்கவில்லை! கடவுளே!

அந்த இடத்தில் வைத்துக் காஞ்சனியோடு அவளால் தனியே பேச முடியவில்லை.

பிறகும், அங்கங்கே ஸிம் பிரச்சினை, வைஃபை இல்லாதது என்று, ஒரு வழியாகக் காஞ்சனிக்கு அவள் ஒரு மெஸேஜ் அனுப்புவதற்கு நாலைந்து நாட்கள் ஆகிவிட்டன.

அப்படி அனுப்பியபோது, மனதில் இருந்ததைத் தெளிவாக வெளிப்படையாகத் தெரிவித்திருந்தாள்.

“கொஞ்ச நாளாக, சுகேஷ் சுகேஷ் என்று வேறு நினைவே இல்லாமல் ரொம்பவும் சுயநலமாக இருந்துவிட்டேன். சாரிப்பா. ஆனால் ஒன்றை எடுத்துச் சொல்லியே ஆக வேண்டும். திருமணத்தின்போது, அந்த ஜெயதேவனோடு நீ ரொம்பவும் இழையப் பார்த்தேன். அவரது வலையில் உன்னை நானே தள்ளிவிட்டேனோ என்று இப்போது எனக்குக் கவலையாக இருக்கிறது. காஞ்சி, எதற்கும் அவரை ரொம்பவும் நம்ப வேண்டாம். எச்சரிக்கையோடு இரு. உன்னைப் பழி வாங்கவே அவர் நம்மைத் தொடர்ந்து வந்து, எல்லா உதவிகளும் செய்திருக்கிறார் என்பதே எப்போதும் என் அபிப்பிராயம். இப்போதும் அது மாறவில்லை என்பது என் அபிப்பிராயம். நீயும் அந்த விதமாகவும் யோசித்துப் பார். யோசித்து, எப்போதும் ஜாக்கிரதையாக இரு.” என்று பெரிய செய்தியாக எழுதி அனுப்பினாள்.

அதன் பிறகே சுந்தரியால் நிம்மதியாக இருக்க முடிந்தது.

தேவகியை அடுத்து சந்தித்தபோது, “அந்தக் கூறு கெட்டவளோட சினேகிதிக்கு ஒரு இளிச்சவாயன் கிடைத்துவிட்டானாம். இரண்டு நாள் முன்னே கல்யாணமாம்.” என்று ஈசுவரி ஒரு சேதியை வெளியே விட்டாள்.

சட்டென மகன் கலந்துகொண்ட திருமண வேலைகள் தேவகிக்கு நினைவு வந்தன.

அவனுக்கு வந்த ஓர் அழைப்பை , மகன் எடுத்துப் போனதும் கூட மனக் கண்ணில் தெரிந்தது. அவன், அதைத் திருப்பிக் கொண்டு வந்தானா? அப்படியானால் அவன் சென்றது, காஞ்சனியுடைய அந்த சினேகிதியின் திருமணமா? திருமணத்துக்குப் போய்விட்டு வந்து, “மாதக் கடைசியில் ஒரு நல்ல முகூர்த்தமாம் அம்மா. கல்யாண வீட்டில் அந்தப் புரோகிதரிடம் கேட்டபோது சொன்னார்.” என்று ஏதோ சந்தோஷக் கற்பனை போல எங்கோ பார்த்தபடிக் கூறினானே!

அப்படியானால், அன்றுதான் தண்டனை நாளா? இதை எப்படித் தடுப்பது?

உள்ளூரத் தவித்தபடி, வேறு ஏதாவது நல்லது கிடைக்குமா என்று ஈசுவரி வீட்டுப் பக்கத்துக் கோயிலுக்குச் சென்றாள்.

ஆனால் அந்தச் சந்திப்பில் வெறும் குப்பையையும் சாக்கடையையும் மட்டுமே கலந்து வெளியே தள்ளிக் கொண்டிருந்தாள் ஈசுவரி.

மகன் ஒரு சின்னப் பெண்ணுக்கு அநியாயம் செய்து, பாவம் ஏற்றுவிடக் கூடாது என்பதோடு, பெரும்பாலும் வேதனை மயமான காஞ்சனியின் வாழ்வில் இன்னொரு பெரிய துன்பம் நேர்ந்துவிடக் கூடாது என்றும் தெவகி மனம் பரிதவித்தாள்.

மகனையே கேட்டுப் பார்க்கலாமோ என்று ஒரு யோசனை, தோன்றும்போதே அழிந்தது.

அதில் ஒரு பயனும் இராது என்பது நிச்சயம். ஏனெனில், காஞ்சனி தாயை அவமானப்படுத்திவிட்டாள் என்பதே, அவனது பெரும் கோபத்தின் ஒரு முக்கிமான காரணமாக இருந்தது.

அவள் பற்றி, அவனிடம் பேசாதிருந்தால், இறுதியிலாவது கடைசிக் கட்டத்திலேனும் விஷயம் தெரிந்து, நாலு பேர் முன்னிலையில் அவள் அவமானப் படாமல் காப்பாற்ற முடியலாம்!

ஆனால், இது காஞ்சனியின் மனதோடான விளையாட்டு. மனம் உடைந்துபோய்க் காஞ்சனி ஏதேனும் தப்பு முடிவெடுத்து விட்டால் . . .

நினைக்கவே தேவகி நடுங்கினாள்.

மனதில் பெரும் பாரத்தோடு என்ன செய்வது, என்ன செய்வது என்று அதே நினைவாக இருந்த தேவகிக்குத் திடுமென ஒன்று நினைவு வந்தது.

அந்தத் தோழி சுந்தரியின் திருமணத்திற்காகக் காஞ்சனியுடைய தந்தைக்கு அழைப்பு வந்திருக்குமே!

முன்பு அவரிடம் மகளின் மொபைல் எண் கேட்டபோது, அது பயனற்றுப் போயிற்று. ஆனால், இப்போது மகளுடைய உயிர்த்தோழியுடைய குடும்பம் பற்றி அவர் அறியாதிருக்க முடியாதே!

இரண்டாவது தடவையாகத் தேவகியை அலுவலகத்தில் பார்த்த சிதம்பரத்துக்கு ஜன்னி கண்ட மாதிரிதான். ஆனால் தேசிகனைப் பற்றி அறிந்து கொண்டுதான் தேவகி கிளம்பினாள்.

அவரிடம் முழு உண்மையைத் தேவகியால் தெரிவிக்க முடியவில்லை. ஏனெனில் அவருடைய மகளின் திருமணத்திற்காக ஜெயதேவன் எவ்வளவு உற்சாகத்துடன் வேலை செய்தான் என்று அவளுக்கும் தெரியும். மகனின் நடிப்பில் அவருமே எவ்வளவு ஏமாந்திருக்கிறாரோ?

அவரைச் சந்தித்து, "உங்கள் மகளின் துணையிருந்தவரை பரவாயில்லை. இப்போது தனியாக இருப்பாளே. அடுத்து அவளோடு தங்க வருகிறவளும் நல்லவளாக அமைய வேண்டும். பங்களூருவில் எனக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாய்க் காஞ்சனிக்கு உதவ எண்ணுகிறேன். நேரிலே கூட ஒரு தரம் போய்ப் பார்த்துவரும் யோசனை இருக்கிறது. எதற்கும் அவளது எண் தருகிறீர்களா? அவளது வேலை நேரம் எல்லாம் தெரிந்துகொண்டு போக வசதியாக இருக்கும்." என்று ஏதேதோ கதை சொல்லிக் கேட்டாள்.

இந்த அம்மாள் தன் மகனிடமே காஞ்சனி எண்ணைக் கேட்டிருக்கலாமே என்று நினைத்துக் கேட்டால் சொல்வதற்கும் இதே போலக் கதைகள் யோசித்து வைத்திருந்தாள்.

எதுவும் பலிக்கவில்லை என்றால் தன் தலை மேலேயே கைவைத்து சத்தியம் பண்ணவும் நினைத்திருந்தாள்.

ஆனால் அவர் அப்படி எதுவும் கேட்கவில்லை. அமைதியும் கம்பீரமுமான தேவகியின் தோற்றமே அவரை எந்த வித சந்தேகமும் படவிடவில்லை.

மகளின் திருமணத்தின்போது, காஞ்சனியும் ஜெயதேவும் சாதாரணமாகப் பழகியதைப் பார்த்தவர். இப்போது இந்த அம்மாவும் போனால் நல்லதுதானே என்று எண்ணி காஞ்சனியின் மொபைல் எண்ணைக் குறித்துக் கொடுத்தார்.

இந்த நாலைந்து நாட்களில் காஞ்சனிக்கு வாழ்க்கை போரடித்துப் போயிருந்தது. வேலை முடிந்து திரும்பி வந்தால் சுந்தரி இல்லாத தனிமை.

சுந்தரியின் இடம் காலியாகவே, அந்த இடத்தில் வசிக்க வேறு பெண்கள் வந்து பார்த்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தனர். சுந்தரிக்குப் பதிலாக யாரோவா என்று காஞ்சனிக்கு ஒரே வெறுப்பாக இருந்தது.

எல்லாவற்றையும் ஜெயதேனுடன்தான் அவள் பகிர்ந்து கொண்டிருந்தாள்.

அவனும் இதமாக இரண்டு வார்த்தைகள் கூறுவான்.

அத்தோடு அந்த வாரக் கடைசியில் அவளுக்கு சந்தோஷ அதிர்ச்சி கொடுக்கப் போவதாகவும், அதன் பிறகு இதையெல்லாம் அவள் பொருட்படுத்தப் போவதே இல்லை என்பது உறுதி என்று ப்ராமிஸ் பண்ணவும், அது என்ன என்ன என்று யோசிப்பதிலேயே அவளது மனம் தேறத் தொடங்கியது.

ஆவலாக அந்த வாரக் கடைசியே எதிர்பார்க்கவும் தொடங்கியிருந்தாள்.

இந்த நிலையில்தான் சுந்தரியின் எச்சரிக்கை வந்து சேர்ந்தது.

ஜெயதேவனை இவள் நம்பவே மாட்டேன் என்கிறாளே என்று சிறு வருத்தம் ஏற்பட்டபோதும், காஞ்சனி அதைப் பெரிதாகக் கருதவில்லை.

சொல்லப் போனால், அவளுமே சுகேசனை முதலில் நம்பாமல்தானே, அவனைப் பற்றி ஆராய முற்பட்டாள்? அது போல சுந்தரிக்கும் ஒரு கலக்கம். சீக்கிரமே தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையில், தோழியின் எச்சரிக்கையை அவள் அலட்சியமே செய்தாள் எனலாம்.

ஆனால், ஜெயதேவனுடைய அன்னையிடம் இருந்து வந்த செய்தி, அவளைத் தலை குப்புற விழத்தட்டிவிட்டது எனலாம்.

மகனை நம்பாதே என்று அதை மட்டுமாக அவள் சொல்லவில்லை. “அன்று அவனுக்கு என்ன நேர்ந்ததோ, அதே போன்ற அவமானத்தை உன்னை அனுபவிக்கச் செய்ய வேண்டும் என்ற வெறியில் இருக்கிறான். இதை என்னிடமே அவன் சொன்னான். மற்றபடி உன்

வாழ்வுக்குள் அவன் ஏன் மறுபடியும் வரவேண்டும்? யோசித்துப் பார். நீ கெட்டிக்காரி , துணிவுள்ளவள் என்று எனக்குத் தெரியும். இப்போதும் நீ விழிப்போடு இருந்தால், அது போன்ற நிலை ஏற்படாமல், உன்னை நீயே காப்பாற்றிக் கொள்ள முடியும்.

ஆலோசித்து முடிவு செய்.” என்றிருந்தது அவளது வாசகம்.

யோசித்துப் பார்!

சுந்தரியும் இதைத்தான் எழுதியிருந்தாள். இப்போது இந்த அன்னையும்!

அவளுடைய உயிர்த்தோழி., அவனைப் பெற்ற தாயார்!

இருவருமே யோசிக்கச் சொல்லியிருப்பது, அவளுடைய உயிராகக் காஞ்சனி கருதத் தொடங்கியிருந்த ஒருவனைப் பற்றி.

அவனுக்கு எதிராக!

இந்த யோசனையின் முடிவு, ஜெயதேவனை அடியோடு இழப்பதாக முடியக் கூடும்.

ஆனால் . . . என்றுமே அவனை அவள் பெற்றிருக்கவில்லை என்றால், இந்த யோசனையின் விளைவில் பெரிய மாற்றம் ஒன்றும் இருப்பதற்கில்லையே!

காஞ்சனி ஒவ்வொன்றாக யோசிக்கத் தொடங்கினாள்.

அந்த ஹோசூர் மருத்துவமனைக்கு ஜெயதேவன் எப்படி வந்தான்? பஸ் நிறுவனத்தில் பணம் போட்டிருப்பதாக ஏதோ சொன்னானே, அதைச் சரி பார்க்கத் தோன்றவே இல்லையே! அத்தோடு, சுந்தரி போல அதிக அடி பட்டவர்கள் யாரும் எந்த ஏசி அறையிலும் இருக்கவில்லையே!

அப்படியானால் பஸ் நிறுவனம் பற்றி அவன் சொன்னது பொய்!

அந்த மருத்துவமனைக்கான பணத்தையும் அவன் இன்னமும் வாங்கிக் கொள்ளவில்லை!

காரணம், அவர்களது நல்ல அபிப்பிராயத்தைப் பெறுவதோடு, கடன்படவும் செய்வது! பணக்கடனோடு நன்றிக் கடனும் கூட!

அப்புறம் அவர்களுடைய எம்டியோடு அவனது பழக்கம்!

சட்டென எல்லாம் அவளுக்கு வெளிச்சமாயிற்று.

அவளும் சுந்தரியும் வேலை செய்ய இருக்கும் நிறுவனப் பெயரை எப்படியோ அவன் அறிந்திருக்க வேண்டும். அது அவளுடைய தந்தை

மூலமாகவே இருக்கலாம். இரண்டு கேள்வி தொடர்ந்து கேட்டால் அவரால் எதையும் மறைக்க முடியாது. சித்தியிடம் அவர் மாட்டுவதே அப்படித்தானே?

விவரத்தைத் தெரிந்துகொண்டு, ஏதாவது குசும்பு பண்ணும் நோக்கத்தோடு, அவன் அலுவலகத்துக்கு வந்திருக்க வேண்டும். அங்கே மாணிக் குரானா மூலம் விபத்து விவரம் அறிந்து மருத்துவமனைக்கு வந்திருக்கலாம்.

நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் திட்டமும் அங்கேயே உருவாகி இருக்கலாம்.

வாய்ப்புகளும் அங்கே நிறைய இருந்தன. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் கெட்டிக்காரத்தனம் ஜெயதேவனுக்கும் நிறைய இருந்தது!

எல்லாம் ஊகம்தான். ஆனால் அப்படியில்லை என்று காட்ட எதுவுமே இல்லையே!

தொடர்ந்து பங்களூருவுக்கு அவன் வந்தது, அவளைச் சந்திப்பதும் விடுவதுமாக அவனையே நினைக்க வைத்தது . . . சென்னையில் அவள் சொல்லாமல் கொள்ளாமல் கடைசி நேரத்தில் கிளம்பி வந்தது பற்றிய நினைவே இல்லாதவன் போல ,என்ன நடிப்பு!

அவளும்தான் அந்த நடிப்பில் எப்படி ஏமாந்துவிட்டாள்!

ஏமாந்து போய் . . .சட்டென உடல் விதிர்விதிர்க்கக் காஞ்சனி சட்டென எழுந்துவிட்டாள்!

ஜெயதேவனின் நடிப்பில் ஏமாந்து அவள் என்ன காரியம் பண்ணிவிட்டாள்! எவ்வளவு பெரிய இமாலயத் தவறு! இதனால் சுந்தரியின் வாழ்வு பாதிக்கப் பட்டுவிட்டால்? அப்புறம் காஞ்சனி உயிர் வாழ்வது கூடத் தப்புதான்!

இதை மட்டுமாவது, காஞ்சனி தெளிவுபடுத்திக் கொண்டாக வேண்டுமே!

அவசரமாக மொபைலை எடுத்தவள் சற்று நிதானித்தாள்.

இது முகம் பாராமல் கேட்டறியக் கூடிய விஷயமில்லை.

நேருக்கு நேர் பார்க்கும்போதே நிஜம் போல நடிக்கிறவன். செல்ஃபோனில் பொய் சொன்னால் தெரியவா போகிறது?

பின்னே என்று யோசிக்கும்போதே, அவன் மறுநாள் ஹோட்டலுக்குக் கூப்பிட்டிருந்தது காஞ்சனிக்கு நினைவு வந்தது.

பெரிய ஆனந்த அதிர்ச்சி கொடுக்கப் போவதாக அல்லவா சொன்னான்!

அவனுடைய தாயார் தெரிவித்திருந்த “அதிர்ச்சி”யா?

இல்லை இராது. அவளை நம்ப வைத்துப் பலர் முன்னிலையில் அல்லவா அவமானப்படுத்த வேண்டும்.

இது அந்த “நம்ப வைக்கும்” முயற்சிப் பட்டியலில் இன்னும் ஏதோ ஒன்று!

அப்போது நேரில் அவன் முகம் பார்த்துக் கேட்டறிய வேண்டும்!

அன்றைய இரவும், மறுநாள் மாலை வரையான பகல் பொழுதும் எப்படிக் கழிந்தது என்று காஞ்சனிக்கு இன்று வரை தெரியாது.

கனவோ, நிஜமோ, தூக்கமோ மயக்கமோ, என்னவென்றே புரியாத நிலை.

இரவு முடிந்தது, மறுநாள் விடிந்தது  எல்லாமே அந்த நிலையோடு சேர்த்திதான்.

அன்று மாலைதான் ஜெயதேவன் அவளை ஹோட்டலுக்கு அழைத்திருந்தான்.

பெங்களூருவிலும் சற்றுப் பெரிய ஹோட்டல். அங்கே தேவதை மாதிரி வரச் சொல்லியிருந்தான்!

ஆனால் எந்தத் தேவதைக்கு இப்படிக் கண்கள் ஒளி மங்கிச் சோர்ந்திருக்கும்?

வரவேற்பில் பெயரைச் சொன்னதும், வழி காட்ட ஆளனுப்பினார்கள்.

கதவைத் திறந்துவிட்டு, வணங்கி அவன் விடை பெற்றுச் செல்ல, உள்ளே காலடி எடுத்து வைத்தவளுக்கு இது சொர்க்க லோகமோ என்று ஐயம் வந்தது.

பூக்களாலும் இடையிடையே சிறு ஒளி விளக்குகளாலும் அறை அலங்கரிக்கப் பட்டிருந்த விதம் மனதை மயக்கியது. இனிய நறுமணத்தோடு, மிக மெல்லிய இசை!

நடு நாயகமாக ஜெயதேவன் இளம் புன்னகையோடு நின்றிருந்தான்.

எல்லாவற்றிலுமாக மதி மயங்கிக் காஞ்சனி நின்றிருந்தது மிஞ்சி மிஞ்சி மூன்று கணங்கள் இருக்கலாம்.

அதற்குள் அவனிடம் கேட்க வேண்டிய கேள்வி உருப் போட்டது போல நினைவில் வந்துவிட்டது. உடனடியாக அறியப்பட வேண்டிய உண்மை அல்லவா?

லேசாகத் தலையை உலுக்கி விட்வள், நேராக அவனிடம் சென்றாள்.

வரவேற்பாய் எழுந்த அவனது கரங்களைக் கவனியாதவள் போல அவன் எதிரே போய் நின்று, “எனனுடைய இந்த ஒரு கேள்விக்கு உண்மையாக பதிலைச் சொல்லுவீர்களா? “என்று கேட்டாள்.

ஒரு கணம் சற்றுத் திகைத்தாற்போலத் தோற்றம் தந்தாலும், உடனேயே சமாளித்து, “கேள் கண்மணி.” என்றான் அவன்.

கண்மணியா? அந்த ஒரு வார்த்தை கொதிப்பூட்ட, “என்னைத் தனிமைப் படுத்தி ஜெயிப்பதற்காகவே, சுகேசன் நல்லவர் என்று நீங்கள் பொய் சொல்லிவிடவில்லையே? என் தோழியின் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று உங்களிடம் பொறுப்பைக் கொடுத்தேன். அதை உங்கள் வசதிக்குப் பயன்படுத்தி . . அவளது வாழ்வில் ஏதேனும் பிரச்சினை வந்தால் என்னால் தாங்கவே முடியாது. சொல்லுங்கள், சுகேசன் உண்மையில் நல்லவர்தானா?” என்ற அவளது கேள்வி கிட்டத்தட்டக் கதறலாக வெளிப்பட்டது எனலாம்!

ஜெயதேவன் திகைத்து நோக்கினாலும் உடனேயே சமாளித்து, “சுகேசன் பற்றி நான் சொன்னது நிஜம், காஞ்சி. நூறு சதவீத உண்மை.” என்றான்

“ஆனால் . . “ என்று ஏதோ சொல்ல முயன்றவனை இடைமறித்து, “சத்தியமாகச் சொல்லுங்கள். . . என்மேல் சத்தியமாக . . . ஆனால் பழிவாங்க வந்தவர் என்மேல் சத்தியம் செய்ய என்ன தடை? நான் எப்படி நம்புவது?” என்றாள் நிராசை நிறைந்த குரலில்.

கண்கள் இடுங்க அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, “உனக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்றால் . .என் அம்மா மேல் சத்தியம்! “ என்றான் அவன்.

அவளது சோர்ந்த “நநன்றி.”யை ஒரு தலையசைவால் ஒதுக்கி, “இவ்வளவு நாள் இல்லாமல், ஏன் இந்தத் திடீர் சந்தேகம், காஞ்சனி? கூடவே பழி கிழி என்று சம்பந்தமே இல்லாத பேச்சு வேறு. என்ன விஷயம், சொல்லு.” என்று தெளிவான வார்த்தைகளால் அவளை நேராக நோக்கி, அவன் மெல்ல வினவினான்.

நான் ஒரு மட்டி , எனக்கு எடுத்துச் சொல்ல இரண்டு பேர்

தேவைப்பட்டார்கள் என்று சொல்ல மனமற்று, “ஆனால், நீங்கள் பின்னோடு வந்தது, தண்ணீராகப் பணத்தை செலவு செய்தது எல்லாம் என்னைப் பழிவாங்கும் படலத்துக்காகத்தானே? அன்றைக்கு நான் சொல்லாமல் கிளம்பி வந்ததற்காக என்னை அதே போல, இன்னும் கொஞ்சம் . .கொஞ்சம் அலங்காரத்தில் கைவிட . .த்தானே? “ என்று தடுமாறினாலும் பிடிவாதமாகச் சொல்லி முடித்தாள் காஞ்சனி.

சொல்வது அறியாதவன் போலச் சற்று யோசித்துவிட்டு, “காஞ்சனி, இதில் மெய் பொய் இரண்டுமே இருக்கிறது. எப்படியோ, எல்லாம் தாண்டி வந்துவிட்டதாக நினைத்தேன். ஆனால், இன்று நான் சொல்வது . . சில காலமாகவே என் பேச்சு எல்லாமே உண்மையே காஞ்சிம்மா. இன்று நான், உன்னிடம் நம் திருமணத்துக்குச் சம்மதம் கேட்பதாக இருந்தேன். “ என்றான் தணிவாகவே.

“நான் நம்ப மாட்டேன்!” என்று கிறீச்சிட்டாள் அவள். “இந்த நாலு மாதங்களாக என்னை ஏமாற்றவே திட்டம் போட்டு வந்திருக்கிறீர்கள். கிட்டத்தட்ட ஏமாற்றியும் விட்டீர்கள். சுந்தரி இல்லாமல் நான் தனித்துப் பலவீனப்பட்டு இருக்கும் நேரத்துக்காகக் காத்திருந்தவர் நீங்கள்! திருமணத்துக்குச் சம்மதம் கேட்கிறீர்களா? உங்களுக்கு என்ன திமி . . திண்ணக்கம் இருக்க வேண்டும்? “ என்று கொதித்தாள்

“காஞ்சனி, இது உனக்குத் தெரிய வராமலே போகட்டும் என்று நான் எண்ணினேன்.

ஆனால் யாரோ உன் நலம்விரும்பிகள் மூலமாகவோ, அல்லது கெடுதல் நினைப்போரின் மூலமாகவோ, உண்மையும் பொய்யுமாக உனக்குத் தெரியவைக்கப்பட்டு இருக்கிறது. அரைகுறை உண்மை, பொய்யை விடவும் ஆபத்தானது. அதனால் என் வாயிலாக உண்மை அறிந்துகொள்.” என்றவன், காஞ்சனி உரக்க நகைக்கவும் பேச்சை நிறுத்தினான்.

“என்ன?”

“சைத்தான் வேதம் ஓதுகிறது என்பார்கள். பொய்யிலேயே முக்குளிக்கிறவர் நீங்கள். நீங்கள் உண்மையைச் சொல்லி, அதை நான் நம்புவதாக்கும்! என்னை என்ன, ஒரே முட்டாள் என்று எண்ணிவிட்டீர்களா? இப்போது நான் சொல்வதை, அதாவது என் முடிவைக் கேளுங்கள்.

“இனி நீங்கள் என் முகத்தில் விழிக்காதீர்கள். என்னைப் பார்க்கக் கூடாது., பேசக் கூடாது. என்னைச் சந்திக்க முயற்சி பண்ணக் கூடாது. அப்படி அஅப்படி ஏதாவது செய்தால், நீங்களே என் முடிவை, அதாவது

என் மரணத்தை விரைவாக்குகிறீர்கள் என்று அர்த்தம். . . .”

சட்டென அவளது கைகளை இறுகப் பற்றி அருகே இழுத்து, “என்ன பேச்சு பேசுகிறாய்? உணர்ந்துதான் பேசுகிறாயா? கொஞ்சம் யோசித்துப் பேசு!” என்றான் அதட்டலாக.

அவன் பிடியை வெறித்துப் பார்த்துவிட்டு, கசந்த குரலில் கூறினாள் அவள். “ஆளாளுக்கு என்னை யோசிக்கச் சொல்லுகிறீர்களே. எல்லாம் நன்றாக யோசித்து முடித்துவிட்டேன். முடிவும் எடுத்துவிட்டேன். இப்போது நான் சொல்வதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களது உண்மை போலவே தோன்றும் நடிப்பைப் போல அல்லாமல், நான் சொல்வது முழுக்க முழுக்க நிஜம். சொன்னதைச் செய்துவிடும் உறுதியோடும் இருக்கிறேன். அதனால், முதலில் என்னைத் தொட வேண்டாம்!” என்றாள் கடுமையும் கடினமுமான குரலில்.

சட்டென அவளது கைகளை விட்டுவிட்டு, “ஆனால் இது நிஜம் காஞ்சனி. சுகேசன் பற்றி நீ விசாரிக்கச் சொன்னதில் இருந்து எல்லாமே முழுக்க முழுக்க உண்மை.” என்று மன்றாடும் குரலில் கூறினான் ஜெயதேவன்.

“நீங்கள் என்ன சொன்னாலும் நான் நம்ப மாட்டேன். ஒரு வார்த்தையைக் கூட நம்ப முடியாது!” என்று அறிவித்தாள் அவள்.

இந்த அறிவிப்போடு அங்கிருந்து வெளியேறினால் சரியாக இருக்கும். ஆனால் அதுவரை அவளது கால்கள் ஒத்துழைக்குமா? உச்சி முதல் உள்ளங்கால் வரை பலவீனப்பட்டு இருக்கும் இந்த வேளையில், நடக்க முடியாமல் கீழே வேறு விழுந்து வைத்தால், தேவன் அவளைத் தொட்டுத் தூக்கி . . கடவுளே, தாங்க முடியாது!

அவள் உள்ளூரத் தவித்துக் கொண்டிருந்தபோது, ஜெயதேவன் மறுபடியும் பேசினான். “நீயே சொல்லும்மா. உன்னை நம்ப வைக்க என்ன செய்ய வேண்டும்? எதுவானாலும் சொல்லு.” என்றான் தணிந்த குரலில் ஆனால் உறுதியைக் காட்டி.

அவள் மீண்டும் கொதித்தாள். “என்ன வேண்டுமானாலுமா? உயிரை உயிரை விட்டு . . கைகாலை வெட்டிக் கொள்ளுங்கள் என்றாலும் செய்வீர்களா?” என்று சீறினாள்.

இவன் செய்த துரோகத்துக்கு உயிரை விட்டுவிடு என்று சொல்ல இன்னமும் வாய் வரவில்லையே. உறுப்பை இழந்தாலும் தாங்க முடியாது போலிருக்கிறதே என்ன மடத்தனம். . .என்று அவள் உள்ளூரத் தன்னையே இகழும்போதே, “சும்மா உளறாமல் நடக்கக் கூடிய

எதையாவது சொல் காஞ்சி. நீ சொன்ன எதை நான் செய்தாலும் உன்னாலேயே அதைத் தாங்க முடியாது.” என்றான் அவன்.

தன் பலவீனத்தை அறிந்திருப்பதோடு, அதைச் சுட்டியும் காட்டுகிறானே! எவ்வளவு நிச்சயம்! ஆனால் இதை உடைக்க வேண்டாமா?

அவளதைப் போலவே தோன்றாத கல்லாய் இறுகிய குரலில் அவள் சொன்னாள். “இந்தப் பிறவி முழுதுக்கும் உங்களைப் பார்க்க நேராதிருப்பது ஒன்றுதான் இப்போது எனக்குத் தேவை. உங்களால் முடிந்தால் அதைச் செய்யுங்கள். அல்லது நான் முன்பே சொன்னது போல . . .”

காஞ்சனி கூறி முடிக்குமுன் குறுக்கிட்டு அவன் கத்தினான். “அதைச் சொல்லாதே!” என்று.

நிஜம்போல என்னமாய் நடிக்கிறான்!

அவனை வெறித்து நோக்கிவிட்டு, “நான் சொன்னதுதான் நடக்கும்.” என்று முடித்தாள் அவள்.

# அத்தியாயம் - 11

வெளியூரில் இருந்து திரும்பி வந்த மகனிடம் தேவகி பெரும் மாற்றத்தைக் கண்டாள். முக்கியமாக அவனது சோர்வு!

சீறுவான்., சினப்பான், அல்லது கல் மாதிரி முகத்தோடு உட்கார்ந்திருப்பான் என்பதெல்லாம் அவள் எதிர்பார்த்ததே. ஆனால் இந்தச் சோர்வை அவள் எண்ணிக் கூடப் பார்த்தது இல்லை

மனித உடம்பு எவ்வளவு தாங்குமோ அதை விடவும் அதிகமாக உழைக்க நேர்ந்த அந்த நாட்களில் கூட, இது போல அவன் சோர்ந்து கிடந்து அவள் பார்த்தது இல்லை!

ஒவ்வோர் அசைவிலும் . . . ஏதோ பெரும் சுமையைத் தூக்கிக்கொண்டு இருப்பது போன்ற அங்க அசைவுகள். முகத்தில் எதுவும் செய்வது அறியாத திகைப்பு!

தாய் கையால் காஃபி கேட்கவில்லை. அந்த நினைவு இருப்பதாகக் கூடத் தோன்றவில்லை!

காஞ்சனியின் மறுப்பைத் தேவகியால் ஊகிக்க முடிந்தது. கெட்டிக்காரப் பெண். புரிந்துகொண்டு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள்.

ஆனால், அது இவனை இவ்வளவு பாதிப்பானேன். ஒரு பழிவாங்குதல் திட்டமிட்டபடி நடக்கவில்லை என்று அவளுடைய ஜெயன் இப்படிக் கலங்குவானா?

நெருங்கிய உறவினரின் மோசத்திலும், அவர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகள் வேண்டாம் என்று அவள் தடுத்தபோதும்கூடக் கூண்டுப் புலியாய்க் குறுக்கும் நெடுக்கும் நடந்து கோபத்தைக் குறைத்தானே தவிர, இப்படிச் செயலிழந்து கிடக்கவில்லை.

ஒருவேளை . . .

குற்ற உணர்ச்சி மெல்ல எட்டிப் பார்த்ததை அடக்கிக்கொண்டு, மகன் அருகே போய் அமர்ந்தாள். அவனது கையைப் பற்றி லேசாக வருடி, "என்னம்மா, என்ன விஷயம்?" என்று மென்மையான குரலில் வினவினாள்.

என்றுமில்லை என்பது போலத் தலையசைத்த ஜெயதேவன் சட்டெனத் திரும்பி, தாயின் கையை இறுகப் பற்றி, "அவள் . . திருமணம் என்று ஜாடையாகச் சொன்னேனே, அந்தப் பெண் என்னை மறுத்துவிட்டாள் அம்மா!" என்றான் தவிப்போடு.

இது தேவகிக்கு அதிர்ச்சிச் செய்தி அல்ல. ஆனால் மகனின் குரலில் இருந்த வலி உணர்ந்து கஷ்டமாகவும் இருந்தது.

எதிர்பாராத தோல்வியின் விளைவு. சீக்கிரமே சரியாகிவிடுவான் என்று எண்ணினாள் தாயார்.

மகனுக்குத் தேறுதலாக, "போகட்டும்ப்பா. வேறே எத்தனையோ சிறந்த பெண்கள் நம்மில் இல்லையா? அன்று கூட ஐந்து பேரின் படங்கள் காட்டினாயே. அவர்களில் . . ." என்றபோது பெற்றவளின் கையைவிடுவித்து, "அம்மா ப்ளீஸ். . ." என்று அவன் எழுந்துவிட்டான்.

தேவகி வியப்புடன் நோக்க, "அதை நினைவுபடுத்தாதீர்கள், அம்மா. வாழ்க்கையைக் கிள்ளுக் கீரையாக எண்ணிச் சொன்ன மடத்தனம். அம்மா, ஒன்று சொல்லட்டுமா? உங்களுக்கு மருமகள் என்று ஒருத்தி வருவதானால் அவள் மட்டும்தான். மற்றபடி காலம் முழுதுக்கும் நான் தனி ஆள். இது சத்தியம்!" என்றான் உறுதியான, ஆனால் தவிப்புடன் கூடிய குரலில்.

சத்தியம் என்கிறானே! அந்த வார்த்தை ஜெயன் இலகுவாகச் சொல்வது அல்ல! ஆயினும், "ஆனால் நீ அவளைப் பழிவாங்குவது என்ன ஆயிற்று, ஜெய்? "என்று அவனது திட்டத்தை வேண்டும் என்றே நினைவுபடுத்திக் கேட்டாள்.

ஒரு கணம் தாங்க முடியாத வலியை ஜெயதேவனின் முகம் காட்டியது. வலிக்கிறதே என்று கதறி விடுவானோ என்பது போன்ற தோற்றம். ஆனால் சமாளித்துக்கொண்டு, "மடத்தனமாகத் திட்டம் போட்டேன், அம்மா. அவளது நிலை பற்றி எண்ணிப் பார்க்கும்படி சொன்னீர்கள். என் மூட மண்டைக்குள் அப்போது அது ஏறவே இல்லை. அவளது குணம் . . அழகு எல்லாம் அருகிருந்து பார்த்த பிறகு . . . நான் புரிந்துகொண்டேன் அம்மா. ஆனால் அவள் என்னை நம்பவே முடியாது என்றுவிட்டாளே! அவளைப் பார்க்கப் போனாலே வாழ்நாளைக் குறுக்குவதாக்கும் என்கிறாளே! அதைச் சொன்னபோது அவள் குரலில் இருந்த உறுதி! அம்மா, நான் என்ன செய்யட்டும்? அருகே நெருங்கக் கூட அச்சமாக இருக்கிறதே. பிடிவாதமாக ஏதேனும் பண்ணிக் கொண்டால் . . அப்புறம் நான் என்ன செய்வேன் அம்மா !" என்று கலங்கினான் அவன்.

தாங்க மாட்டாமல் தேவகியும் எழுந்தாள்.

பிள்ளை இப்படிக் கலங்குகிறானே! தலையிட்டது தப்போ . . .

யோசனையோடு நடந்தவளின் கைகளில் காஃபி கப்பைக் கொடுத்தாள் தங்கம்மா. "புள்ளையைக் குடிக்க வையுங்கம்மா. வயித்துக்குள்ளே ஏதாச்சும் இறங்கினால்தான் சரியாக யோசிக்கக் கூட முடியும்."

தாய் சொல்லுக்காக இரண்டு மடக்கு குடித்தபோதும், "காஞ்சனி தனியாகக் கிடந்து தவிப்பாளே என்று வருந்தலானான் மகன்.

நான் செய்தது. இதை நானேதான் சீர்ப்படுத்த வேண்டும் என்று எண்ணி, காஞ்சனியோடு, தேவகி தொடர்பு கொண்டாள்.

ஆனால் "மகன் உண்மையாகத் தவிக்கிறான் ." என்று தேவகி சொன்னால், காஞ்சனி நம்ப மறுத்தாள்.

"அவரது திட்டம் நிறைவேறுவதற்கு ஜெயதேவன் என்ன வேண்டுமானாலும் செய்வார்! இப்போது வேறு மாதிரி நடித்து, உங்களையும் ஏய்த்துவிட்டார்! ஆனால் என் கண்ணைத் திறந்துவிட்டதற்கு நன்றிம்மா. " என்றாள் மரத்த குரலில்.

மகன் சொன்னது போல அவளது தவிப்பை அவளது மரத்த குரலில் தேவகி அறிந்தாள். இருவரின் தவிப்பையும் எப்படி மாற்றுவது?

பயன் பற்றி சந்தேகம் இருந்தாலும், காஞ்சனியிடம் மேலும் பேசிப் பார்த்தாள். "நல்ல பார்வையைக் கெடுத்துவிட்டதாகவே உணர்கிறேன், காஞ்சனி. தாயறியாத சூல் இல்லை என்பார்கள். ஜெயன் உண்மை

பேசுவது எனக்குத் தெரிகிறது. நீயும் புரிந்து கொள்ளம்மா.”

காஞ்சனி கணம் கூடத் தயங்காமல் பதில் சொன்னாள். “ஆஸ்கார் பரிசு கொடுக்கப்பட வேண்டிய நல்ல நடிகர், தேவன் என்று நன்றாகத் தெரிகிறது! இதற்கு மேல் நான் சொல்ல எதுவும் இல்லை அம்மா.” என்று பேச்சை முடித்தாள் சின்னவள்.

காற்றாய்ப் போன குரல், அவளும் உண்ண, உறங்கவில்லை என்று உணர்த்தியது.

இது இப்படியே போனால் என்ன ஆகும்? ஏதாவது செய்தே ஆக வேண்டும்!

தேவகி தீவிரமாக யோசித்தாள்.

ஜெயதேவனின் பழிவாங்கும் திட்டம் என்ன?

திருமணத்தை எதிர்பார்த்து, சகல அலங்காரங்களோடு மற்றவர் முன்னிலையில் அவளை நிறுத்திவிட்டு, அவன் விலகிப் போய்விடுவது. எண்ணிய திருமணம் நடக்காமல் அவள் தனியே நின்று அவமானப்படுவது!

ஆனால், அந்த நிலை ஏற்படவே முடியாத நிலையை உருவாக்கிவிட்டால்? அப்படி ஒரு நிலையை எப்படி உருவாக்குவது? முடியுமா?

முடியும். அதாவது . . .

தேவகி பரபரப்புற்றாள். இன்னொரு தரம் அவரது அலுவலகத்துக்குச் சென்று சிதம்பரத்தைச் சந்தித்தாள்.

அவரது மிரளலை அலட்சியம் செய்து, “காஞ்சனி உங்கள் மகள். ஒரே ஒரு தரம் அவளுக்கு உதவி செய்யுங்கள். இதில் உங்கள் உயிர் ஒன்றும் போய்விடாது. ஆனால், இதற்கு நீங்கள் சம்மதிக்காவிட்டால், காஞ்சனியின் உயிருக்கு உத்திரவாதம் கிடையாது.” என்று தேவகி அதட்டலாகக் கூறவும், பயந்து போய்த் தலையாட்டினார் அவர்.

அவர் மாறிவிடாமல் காக்க, தேசிகனையும் துணை சேர்த்தாள்.

மகனிடம் அவளது திட்டத்தைக் கூறியபோது ஒரேயடியாக உற்சாகப் பட்டுவிடாத போதும், கண்களில் நம்பிக்கை எட்டிப் பார்க்க, “நல்ல யோசனை அம்மா! காஞ்சனி ஒப்ப வேண்டும். மற்றபடி செய்து பார்க்கக் கூடிய ஒரே ஐடியா.” என்றான் அவன் பாராட்டுதலாக.

“தப்பு செய்தால் பிராசித்தம் செய்தாக வேண்டாமா கண்ணா. “ என்றாள் அன்னை.

இதன் பின் பெங்களூருவுக்குக் கிளம்பினாள். காஞ்சனியிடம் தன் திட்டத்தை நேரில் விளக்குவதாக எண்ணம்.

ஆனால் தனியே போய்க் காஞ்சனியைப் பார்த்தவள் அதிர்ந்து போனாள். கண்களைச் சுற்றிலும் கருவளையத்தோடு உடல் மெலிந்து . . . "என்னம்மா, இப்படி மெலிந்துவிட்டாய்?" என்றாள் கவலையோடு.

யாரோ புதியவள் என்பதால் கூடவே வந்த வீட்டுக்காரம்மாவும், தேவகியோடு சேர்ந்துகொண்டாள். "நன்றாகச் சொல்லுங்கம்மா. ஐந்தாறு நாளாக நான் அனுப்புகிற சாப்பாடெல்லாம் அப்படியே வேலைக்காரிக்குப் போகிறது. சொன்னாலும் கேட்பதில்லை." என்றாள்.

"நீ புத்திசாலி என்று நினைத்தேன், காஞ்சனி. பட்டினி கிடந்தால் துன்பம் குறைந்துவிடும் என்று உனக்கு யார் சொன்னார்கள்? நீ ஒழுங்காக உண்ணாவிட்டால், உன் தேழி சுந்தரிக்குச் சொல்லி அவளை உடனே வரவழைப்பேன்." என்றாள் தேவகி கண்டிப்பான குரலில்.

"பட்டினி கிடந்து சாவது என் விருப்பம் இல்ல. உண்ண முடியவில்லை. அவ்வளவுதான்." என்றாள் காஞ்சனி எங்கோ பார்த்தபடி.

"வீட்டிலே சத்துமாவு இருக்கிறது. கொஞ்சம் கஞ்சி போட்டு எடுத்து வருகிறேன்." என்று சென்றாள் வீட்டுக்காரம்மா.

"நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்டால், நன்றாக உண்ணவும் முடியும். ஆனால் என்ன சொல்கிறேன் என்று கவனமாகக் கேட்க வேண்டும்." என்று தேவகி அழுத்தத்துடன் கூறவும், தன்னையறியாமல் காஞ்சனி பெரியவள் முகத்தைப் பார்த்தாள்.

"கவனிம்மா. முதலில் கஷ்டத்தைச் சொல்லித்தான் தீர்வையும் கூற வேண்டியிருக்கிறது. எனவே நான் சொல்லப்போவது முழுவதையும் பொறுமையாகக் கேள்." என்று தேவகி தொடங்கினாள்.

மகனின் பழிவாங்கும் திட்டத்தை இயன்ற அளவு சுருக்கமாக உரைத்தவள், அதை விடவும் சுருக்கமாக அவனது மனம் மாறியதையும் குறிப்பிட்டாள்.

நம்பிக்கையற்றுக் காஞ்சனியின் முகம் இறுகுவதைக் கவனித்து, "இப்போது ஜெயனின் திட்டத்தை உடைக்கும் வழியைச் சொல்லுகிறேன் கேள். " எனவும் காஞ்சனி மீண்டும் தேவகியின் முகத்தைப் பார்த்தாள்.

"பாரம்மா, இப்போது நாம் முதலில் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் சட்டப்படியான உங்கள் திருமணத்தை முடித்துவிடுவோம். விஷயம் ஐந்தே பேருக்கு, நீ, நான், ஜெயன், தேசிகன் சார், உன் அப்பா ஐந்தே

பேருக்கு . .. " என்று அவள் சொல்லி வரும்போதே, "அப்பாவுமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் காஞ்சனி.

"ஆமாம்மா. பிரச்சினைக்கு அஞ்சுகிறவர் என்றாலும், பெற்றவர் இல்லையா? உன் சித்தியைப் பற்றி உனக்கும் தெரியும். ஆனாலும், அவளையும் மீறி, திருமணப் பதிவு அலுவலகத்துக்கு அவரும் வருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறார். இந்தத் திருமணம் முதலில் நடந்து பதிவுச் சான்றுகளும் கைக்கு . . அதாவது உன் கைக்கு வந்த பிறகு, ஊரறியத் திருமணம் செய்வோம். அபபோது எந்த வகையிலும் ஜெயன் திருமணத்தை மறுத்து எதுவும் செய்ய முடியாதல்லவா? அவன் காணாமலே போனால்கூட, உன்னிடம் திருமண சர்டிஃபிகேட் இருக்கும்போது, நீ அவனுடைய மனைவி என்பதையோ, உன் உரிமைகளையோ யாராலும் மறுக்க முடியாது. அசடன், கெட்டவன் என்பன போன்ற எல்லா அடை மொழிகளும் ஜெயனைப் பற்றித்தான் சொல்லப்படும். அந்த நிலையை அவன் ஏற்கமாட்டான் என்பது நிச்சயம்.

"இப்போது இந்தத் திட்டத்தை உன் தந்தை நம்புகிறார். தேசிகனும் பிரமாதமான ஐடியா என்கிறார். என் மகனும் அப்படியே.

"இதையெல்லாம் நீயும் நம்பினால், மனதார ஒத்துக்கொண்டால், கீழே காரில் என் மகன் இருக்கிறான். இரண்டு பேரும் பேசுங்கள். உங்கள் மற்ற நிரடல்களையும் தீர்த்துக் கொள்ளுங்கள். பிறகு என் திட்டப்படி ஏற்பாடுகளைச் செய்வோம்." என்று தேவகி சொல்லி முடித்தாள்.

ஒரு சிறு அமைதியின் பின், "நீங்கள் எப்படிப் போவீர்கள்?" என்று தன் சம்மதத்தைக் காஞ்சனி சொல்லாமல் சொன்ன விதத்தில், தேவகிக்கு "பக்"கென்று சிரிப்பு வந்துவிட்டது.

"என் அன்பு மருமகளே, என்னைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். என் . . இல்லை, நம் உறவில் இரண்டு பெண்களுக்கு "பேயிங் கெஸ்டா"க நல்ல நம்பகமான இடம் வேண்டியிருக்கிறது. இங்கேதான் இரண்டு இடம் காலியாகிறதே! வீட்டுக்கார அம்மாளிடம் அது பற்றிப் பேசி முடித்துவிட்டு, ஒரு டாக்சி வரவழைத்து என்னால் ஹோட்டலுக்குப் போய்க் கொள்ள முடியும். அதனால் நீ கிளம்பு. அங்கே என் பிள்ளை தவித்துக் கொண்டிருப்பான். "

கட்டிடத்தின் வாயிலையே பார்த்துக் கொண்டிருந்த ஜெயதேவன், காஞ்சனியைக் கண்டதும் கார்க் கதவைத் திறந்துவிட்டான்.

இருவரும் ஏறிக் கார் கிளம்பியது. சற்றே ஒதுக்குப் புறமாகக் காரை

நிறுத்தினான். அவன் தோளில் அவள் சாய்ந்துகொள்ள, ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி வெகு நேரம் பேசாமலே இருவரும் அமர்ந்திருந்தார்கள்.

சற்றுப் பொறுத்து, "என்னிடம் ஏதேனும் கேட்க வேண்டுமா?" என்று ஜெயதேவன் வினவினான்.

"ஊகூம். நான்தான் சொல்ல வேண்டும். உங்களைப் பற்றிய எல்லாம் அத்தை சொல்லி விட்டார்கள். " என்றாள் அவள்.

பிறகு நிமிர்ந்து அமர்ந்து, "முதலில் நான் . . அப்படிக் கடைசி நேரத்தில் வீட்டை விட்டுக் கிளம்பி ஏன் போனேன் தெரியுமா?" என்று கேட்டு, அவளது அன்றைய மனநிலையைத் தெரிவித்தாள்.

பழைய வேதனைகளில் அவள் கலங்குவதை உணர்ந்து, "சொல்ல வேண்டும் என்பது இல்லை, காஞ்சிம்மா. இன்றைக்கு உறுதியான அன்பு இருக்கிறது. எனக்கு அதுவே போதும்." என்றான் அவன் இதமாக.

"இல்லை. ஒன்றிலிருந்து ஒன்று என்று, நான் விலகிப் போனதுதான் எல்லவற்றுக்கும் பிள்ளையார் சுழி மாதிரி அடிப்படைக் காரணமாகிவிட்டது. அதனால் அதைப் பற்றி விளக்கி விட்டால், எல்லாம் தெளிவாகிவிடும்." என்று தொடங்கித் தன் காதில் விழும்படி சிற்றன்னை பேசியது பற்றிச் சொன்னாள்.

"அதையும் முழுதாக நம்பாமல் அந்த இருபது தொழிலாளர் பற்றி ஆராய்ந்தேன். ஃபேஸ் புக்கில் பார்த்தது, பத்திரிகை விமர்சனங்களைப் படித்ததும், உங்களுக்குச் சித்தி சொன்ன குணமேதானோ என்று பயந்து போனேன். ஓர் அநியாயத்தில் இருந்து தப்பி, இன்னோர் அராஜகத்தில் மாட்டுவதா என்று எனக்கு ஒரே கவலை. சரியான நேரத்தில் வேலையும் கிடைத்துவிடவே, சுந்தரியும் நானும் கிளம்பி விட்டோம். எங்கள் வீட்டில் சொன்னால், எப்படியேனும் உங்களுக்குத் தெரிந்து தடுத்து விடுவீர்களோ என்று பயம். அங்கே மருத்துவமனையில் உங்களைப் பார்த்ததும் எப்படி நடுங்கிப் போனேன் தெரியுமா? நீங்கள் உதவிதான் செய்தீர்கள். ஆனால் . . . "

அவளைத் தோளோடு சேர்த்து ஒரு தரம் அழுத்தமாக அணைத்துவிட்டு அவன் பேசலானான். "முதலில் அந்தத் தொழிலாளர்கள் பற்றிச் சொல்லி விடுகிறேன். அவர்கள் வேலையைச் சரிவரச் செய்யாதது மட்டுமல்ல. மற்றவர்களையும் கெடுத்தார்கள். அத்தோடு, மின்சார லைனை மாற்றிக் கொடுத்து கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரத்தையும் உடைக்கத் திட்டம் போட்டார்கள்.

அவர்களது செல்ஃபோன் பேச்சைப் பதிவு பண்ணி, யூனியனில் காட்டின பிறகுதான் பிரச்சினையற்று அவர்களை வெளியேற்ற முடிந்தது. பரபரப்புச் செய்தியாகக் கண்ணீர்க் கதைகளை வெளியிட்டு, என் பெயரைக் கெடுத்துப் பணிய வைக்க முயற்சித்தார்கள். ஆனால் எதற்காகவும் அவர்களை உள்ளே விடுவது, பாம்புக்குப் பால் வார்ப்பது போல என்று எனக்கு நிச்சயம். அதனால்தான் ஒரேயடியாக மறுத்துவிட்டேன். அப்போதும், வேறு எங்காவது போய்ப் பிழைத்துக் கொள்ளட்டும் என்பதற்காகவே, அவர்கள் பேச்சின் பதிவை நான் வெளியிடவில்லை." என்று அவன் விளக்கவும் காஞ்சனிக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

"சாரிப்பா." என்றாள் சின்னக் குரலில்.

"போகட்டும் விடு. உன் சித்தி இதைத் தோண்டி எடுத்துப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இனி அடுத்ததைப் பார்ப்போம்.

"மாணிக் குரானாவிடம் விவரம் கேட்டு, மருத்துவமனைக்கு வந்தது வரை, எனக்குப் பழி வாங்கும் எண்ணம்தான். ஆனால் அங்கே நீ அலுத்துக் களைத்து உட்கார்ந்த நிலையிலேயே தூங்கியதைப் பார்த்ததும் உதவியது மனித நேயத்தில்தான்.

"ஆனால் அதை நானே, என் மனதிலேயே ஒப்பவில்லை. மனம் இரங்கி எல்லாம் செய்துவிட்டு, இந்த உதவி செய்தது எல்லாம் கடைசியில் பெரிய அடி கொடுப்பதற்கு என்று என்னை நானே சமாதானப் படுத்திக் கொள்வேன். ஓரளவு அதை நம்பியே அம்மாவிடம் கூட பழிதான்என்று சொன்னேன்.

"ஆனால் காஞ்ச், சீக்கிரமே, நடிப்பு நிஜமாகிப் போனது. அதுவும் சுகேசன் பற்றிய பேச்சு வந்த பிறகு, பழி வாங்குவது பற்றிய நினைவே எனக்குக் கிடையாது.

"அன்று கடைசியாக ஹோட்டலுக்கு வரச்சொன்னேனே, அறையைப் பிரமாதமாக அலங்காரம் செய்து, ரொம்ப ரொமான்டிக் சூழலில் என் காதலை உன்னிடம் சொல்ல எண்ணியிருந்தேன்.

"ஆனால் இதில் நான் செய்த மாபெரும் தவறு, என் மன மாற்றத்தை அம்மாவிடம் சொல்லாமல் விட்டது.

"அம்மா மாதிரி சுந்தரிக்கும் என்மேல் சந்தேகம்தான் இல்லையா? அவளுக்காக அவள் வீட்டில் போய்ப் பேசி, சுகேசன் வீட்டில் பேசி எல்லாம் செய்த பிறகும் அவளுக்கு அந்த எண்ணம் போகவே

இல்லையே! “ என்று அவன் சிறு கசப்புடன் கூறவும் காஞ்சனிக்கு வேதனையாக இருந்தது.

எல்லோருமே தப்பாக நினைத்தால் அவனுக்கும்தான் எப்படி இருக்கும்?

அவனது கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, அவள் அவசரமாகப் பேசினாள். “உண்மையில் நீங்கள் செய்த அதிகமான உதவியால்தான் அவளது சந்தேகமும் அதிகமாகிப் போயிற்று, தெரியுமா? உங்களைப் பற்றிய பொதுவான அபிப்பிராயத்துக்கு மாறாக இவ்வளவு உதவிகள் செய்வது, என்னை ஏமாற்றிப் பழி வாங்க மட்டுமே என்று நினைத்துவிட்டாள். ஆனால், இனி அவளும் மாறிவிடுவாள். எனக்குத் தெரியும்” என்றாள் மகிழ்ச்சியோடு.

“உண்மையாகவா? கொஞ்சம் நம்ப முடியவில்லையே! “ என்றான் அவன் சந்தேகமாக.

“நிஜம்ப்பா. என் சந்தோஷம்தான் அவளுக்கு முக்கியம். “ என்றாள் அவள் உறுதியாக.

“அப்படியானால் நீ சந்தோஷமாக இருக்கிறாய் என்று அர்த்தமா? ஆனால், அதில் எனக்கே சந்தேகமாக இருக்கிறதே!” என்றான் ஜெயதேவன் யோசனையாக.

“உங்களுக்கே சந்தேகமா? ஏன்?” என்று ஆச்சரியமாகக் கேட்டாள் காஞ்சனி.

“பின்னே சந்தோஷத்தைக் காட்டும் விதமாக ஒன்றையும் காணோமே!” என்று கையை விரித்தவன் குறுஞ் சிரிப்புடன், “இப்போதைக்கு இங்கே ஒன்று தந்தாலே போதும்.” என்று தன் கன்னத்தைக் காட்டிக் கூற, “ஏய், போங்கப்பா!” என்று முகம் சிவந்தாலும், அவன் கேட்டதை அவள் மறுக்கவில்லை!